# www.Padasalai.Net

Padasalai Official – Android App – Download Here

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| 9th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
|---|---|---|---|---|---|---|
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| 8th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
|---|---|---|---|---|---|---|
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| 7th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
|---|---|---|---|---|---|---|
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| 6th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
|---|---|---|---|---|---|---|
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| 1st to 5th Standard | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
|---|---|---|---|---|---|---|
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| Exams | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
|---|---|---|---|---|---|---|
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| Portal | Matrimony | Mutual Transfer | Job Portal |
|---|---|---|---|

| Volunteers | Centum Team | Creative Team | Key Answer Team |
|---|---|---|---|

| Downloads | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
|---|---|---|---|---|---|---|
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

alai.Net www.Trb

# டால்பின்®

உன்னால் முடியும்

100
100
உறுதி

11

புதிய பதிப்பு
2020

தமிழ்







அரசுத்தேர்வு
வினாக்களுக்கு விடைகள்
இணைக்கப்பட்டுள்ளது

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

r Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@g

# டால்பின்

## உன்னால் முடியும்

# தமிழ்

புதிய பதிப்பு
2020

11

அரசுத்தேர்வு
வினாக்களுக்கு விடைகளுடன்
இணைக்கப்பட்ட சிறப்பு நூல்

✆ 98653 06197 | 89256 77710 | 99435 67646
டால்பின் பப்ளிகேசன்ஸ்®
தரமே எங்களின் தாரக மந்திரம்
239, கீழப்பட்டி தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம், த.நா.
Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.in

© All Copyrights reserved

விலை : ரூ.198

# பதிப்புரை

அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே!

வணக்கம். மேல்நிலை முதலாம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளீர்கள். உங்களை வாழ்த்தி வரவேற்கிறோம்.

மேல்நிலை முதலாண்டு மொழிப்பாடத்தில் உயரிய மதிப்பெண்ணை நீங்கள் பெறவேண்டும் என்ற நோக்கில் இந்த 'டால்பின்' உரைநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் மிகச் சிறந்த ஆசிரியர்கள் உள்ளடங்கிய ஆசிரியர் குழுவினர் வினாக்களுக்கான விடைகளை எழுதியுள்ளனர்.

இயல்தோறும் உரைநடை, செய்யுள், துணைப்பாடம், இலக்கணம் எனப் பகுதி வாரியாகப் பாடநூல் வினாக்களுக்கான விடைகள் தெளிவாக, சுருக்கமாகச் சரியான முறையில் தரப்பட்டுள்ளன. தொடர்ந்து 'மொழியை ஆள்வோம்' என்ற பகுதியில் உள்ள மொழிப் பயிற்சிகள் உங்களுடைய மொழியாற்றலை வளர்க்கும் வகையில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இயலிலும் பாடப்பிரிவு வாரியாகக் கூடுதல் வினா – விடைகள் தரப்பட்டுள்ளன. நிறைவாக மாணவர்கள் எளிமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் மொழிப்பயிற்சிகள், இலக்கணக்குறிப்புகள், பகுபத உறுப்பிலக்கணம், புணர்ச்சி விதிகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

பாடப்பொருளைப் புரிந்துகொண்டு உள்வாங்கி, அதனைச் சொந்த நடையில், சுயசிந்தனையோடு, பாடம் தொடர்புடைய பிற செய்திகளோடு மாணவர்கள் விடையெழுத வேண்டும் என்பதே கல்வித்துறையின் எதிர்பார்ப்பு. அதனையொட்டியே வினாத்தாள் தயாரிக்கப்படுகிறது. அதனைக் கருத்தில் கொண்டு எமது உரைநூலில் நெடுவினாக்களுக்கான விடைகள் தயாரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் உங்களைச் சிந்திக்கத் தூண்டுவதாக இவ்விடைகள் அமையும் என நம்புகிறோம்.

மொழிப்பாடத்தில் கூடுதல் மதிப்பெண்களைப் பெறவும், போட்டித் தேர்வுகளைச் சிறந்த முறையில் கையாண்டு வெற்றி பெறவும் எமது டால்பின் உரை உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

**முயன்று படித்துச் சிறப்பாக வெற்றிபெற வாழ்த்துக்களுடன்...**

உன்னால் முடியும் தமிழ்,
டால்பின் வெளியீட்டாளர்.

# பொருளடக்கம்


| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | மனப்பாடப் பகுதிகள் | | | i |
| | பாடப்பகுதியும் ஆசிரியர்களும் | | | iii |
| 1. | மொழி | என்னுயிர் என்பேன் | | 1 |
| | | செய்யுள் | யுகத்தின் பாடல் ☆ | 14 |
| | | உரைநடை | பேச்சுமொழியும் கவிதை மொழியும் | 15 |
| | | செய்யுள் | நன்னூல் பாயிரம் ☆ | 20 |
| | | துணைப்பாடம் | ஆறாம் திணை | 24 |
| | | இலக்கணம் | மொழி முதல், இறுதி எழுத்துகள் | 25 |
| 2. | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல் | மாமழை போற்றுதும் | | 28 |
| | | உரைநடை | இயற்கை வேளாண்மை | 43 |
| | | செய்யுள் | ஏதிலிக்குருவிகள் | 49 |
| | | | காவியம் ☆ | 51 |
| | | | திருமலை முருகன் பள்ளு | 52 |
| | | | ஐங்குறுநூறு | 58 |
| | | துணைப்பாடம் | யானை டாக்டர் | 62 |
| | | இலக்கணம் | புணர்ச்சி விதிகள் | 64 |
| 3. | பண்பாடு | பீடு பெற நில் | | 70 |
| | | உரைநடை | மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு | 90 |
| | | செய்யுள் | காவடிச்சிந்து | 98 |
| | | | குறுந்தொகை ☆ | 103 |
| | | | புறநானூறு ☆ | 107 |
| | | துணைப்பாடம் | வாடிவாசல் | 112 |
| | | இலக்கணம் | பகுபத உறுப்புகள் | 113 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ☆ | 115 |
| 4. | கல்வி | கேடில் விழுச்செல்வம் | | 122 |
| | | உரைநடை | தமிழகக் கல்வி வரலாறு | 139 |
| | | செய்யுள் | பிள்ளைக்கூடம் | 147 |
| | | | நற்றிணை | 150 |
| | | | தொல்காப்பியம் – சிறப்புப்பாயிர உரை விளக்கப்பாடல் | 154 |
| | | துணைப்பாடம் | இதழாளர் பாரதி | 158 |
| | | இலக்கணம் | படைப்பாக்க உத்திகள் | 159 |

| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| 5. | நாகரிகம், தொழில், வணிகம் | நாளெல்லாம் வினைசெய் | | 164 |
| | | உரைநடை | ஆனந்தரங்கர் நாட்குறிப்பு | 182 |
| | | செய்யுள் | சீறாப்புராணம் | 190 |
| | | | அகநானூறு | 195 |
| | | துணைப்பாடம் | பிம்பம் | 201 |
| | | இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் | 202 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ☆ | 205 |
| 6. | கலை, அழகியல், புதுமைகள் | பல்கலை நிறுவு | | 209 |
| | | உரைநடை | காலத்தை வென்ற கலை | 223 |
| | | செய்யுள் | ஆத்மாநாம் கவிதைகள் | 230 |
| | | | குற்றாலக் குறவஞ்சி | 232 |
| | | | திருச்சாழல் | 234 |
| | | துணைப்பாடம் | இசைத்தமிழர் இருவர் | 238 |
| | | இலக்கணம் | கலைச்சொல்லாக்கம் | 241 |
| 7. | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் | வையத் தலைமை கொள் | | 247 |
| | | உரைநடை | காற்றில் கலந்த பேரோசை | 260 |
| | | செய்யுள் | புரட்சிக்கவி ☆ | 263 |
| | | | பதிற்றுப்பத்து | 266 |
| | | துணைப்பாடம் | சிந்தனைப் பட்டிமன்றம் | 270 |
| | | இலக்கணம் | ஆக்கப்பெயர்கள் | 271 |
| 8. | மனிதம், ஆளுமை | யாரையும் மதித்து வாழ் | | 274 |
| | | உரைநடை | தாகூரின் கடிதங்கள் | 289 |
| | | செய்யுள் | ஒவ்வொரு புல்லையும் | 294 |
| | | | தொலைந்து போனவர்கள் ☆ | 296 |
| | | | மனோன்மணீயம் | 298 |
| | | துணைப்பாடம் | செவ்வி | 300 |
| | | இலக்கணம் | மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் | 301 |

www.Padasalai.Net www.TrbTnpsc.Com


| இயல் | பொருளடக்கம் | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|
| | நயம் பாராட்டுக | | 305 |
| | பழமொழி தமிழாக்கம் | | 307 |
| | பழமொழி விளக்கம் | | 309 |
| | கொள்குறி வகை வினாக்கள் | | 322 |
| | பொருள் வேறுபாடு தருக | | 327 |
| | விரிவாக்கம் | | 331 |
| | இலக்கணப்பிழை | | 331 |
| | கலைச்சொல் அறிவோம் | | 333 |
| | இலக்கணக்குறிப்பு | | 334 |
| | பகுபத உறுப்பிலக்கணம் | | 335 |
| | புணர்ச்சி விதி | | 338 |
| | இலக்கிய நயம் பாராட்டல் | | 340 |
| | எளிய வழியில் இலக்கணக்குறிப்பு கண்டறியும் முறைகள் | | 347 |
| | **அணி, திணை, துறை, கூற்று** | பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள அணி இலக்கணம் | 351 |
| | | பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள திணைகள் | 356 |
| | | பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள துறைகள் | 360 |
| | | புணர்ச்சி விதி கண்டறியும் எளிய முறை | 363 |
| | **வினா வங்கி** | அரசு பொதுத்தேர்வு 2020 | 368 |


Padasalai.Net

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# மனப்பாடப் பகுதிகள்

## இயல் - 1

### 1. யுகத்தின் பாடல்

ஏடு தொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை.

- சு.வில்வரத்தினம்.

### 2. நன்னூல் - பாயிரம்

ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே

நூற்பா - 47

காலம் களனே காரணம் என்றுஇம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே

நூற்பா - 48

- பவணந்தி முனிவர்

## இயல் - 2

### 3. காவியம்

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.

- பிரமிள்

## இயல் - 3

### 4. குறுந்தொகை

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே. (146)

- வெள்ளி வீதியார்

### 5. புறநானூறு (மார்ச்.2019)

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. (182)

(கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி)

## இயல் - 3

### 6. திருக்குறள்

**அடக்கமுடைமை**

அ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

ஆ) யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

இ) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

**ஒப்புரவறிதல்**

அ) தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு.

ஆ) மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

**புகழ்**

அ) தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

ஆ) வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

**நிலையாமை**

அ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

**துறவு**

அ) யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

ஆ) பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

**வலியறிதல்**

அ) வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். **(மார்ச்.20)**

ஆ) அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

இ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

**காலமறிதல்**

அ) ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின். - திருவள்ளுவர்.

## இயல் - 5

### 7. திருக்குறள்

**குறிப்பறிதல்**

அ) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

**பகைத்திறம் தெளிதல்**

அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

ஆ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து. **(மார்ச்.2019)**

**மருந்து**

அ) மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

ஆ) நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். **(மார்ச்.20)**

**இரவச்சம்**

அ) இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான். - திருவள்ளுவர்

## இயல் - 7

### 8. புரட்சிக்கவி

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்ப டுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின்தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

- பாரதிதாசன்

## இயல் - 8

### 9. தொலைந்து போனவர்கள்

உடைஅணிந்தேன் எனச் சொல்லுகிறாய் - வெறும்
உடலுக் கணிவது உடையல்ல
விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் - ஒரு
வினாவாய் நீயே நிற்கின்றாய்.

தின்றேன் என்பாய் அணுஅணுவாய் - உனைத்
தின்னும் பசிகளுக் கிரையாவாய்
வென்றேன் என்பர் மனிதரெல்லாம் - பெறும்
வெற்றியிலே தான் தோற்கின்றார்.

'நான்' என்பாய் அது நீயில்லை - வெறும்
**(மார்ச்.20)**
நாடக வசனம் பேசுகிறாய்
ஏன்? என்பாய் இது கேள்வியில்லை - அந்த
ஏன் என்னும் ஒளியில் உனைத் தேடு.

- அப்துல் ரகுமான்

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# பாடப்பகுதியும், ஆசிரியர்களும்

## செய்யுள்

| பாடப்பகுதி | ஆசிரியர் |
|---|---|
| யுகத்தின் பாடல் | சு. வில்வரத்தினம் |
| நன்னூல்- பாயிரம் | பவணந்தி முனிவர் |
| ஏதிலிக்குருவிகள் | அழகிய பெரியவன் |
| காவியம் | பிரமிள் |
| ஐங்குறுநூறு | பேயனார் |
| திருமலை முருகன் பள்ளு | பெரியவன் கவிராயர் |
| காவடிச்சிந்து | சென்னிகுளம் அண்ணாமலையார் |
| குறுந்தொகை | வெள்ளிவீதியார் |
| புறநானூறு | கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி |
| பிள்ளைக்கூடம் | இரா.மீனாட்சி |
| நற்றிணை | போதனார் |
| தொல்காப்பியம் | தொல்காப்பியர் |
| சீறாப்புராணம் | உமறுப்புலவர் |
| அகநானூறு | வீரை வெளியன் தித்தனார் |
| ஆத்மாநாம் கவிதைகள் | ஆத்மாநாம் (மதுசூதனன்) |
| குற்றாலக் குறவஞ்சி | திரிகூடராசப்பக்கவிராயர் |
| திருச்சாழல் | மாணிக்கவாசகர் |
| புரட்சிக்கவி | பாரதிதாசன் |
| பதிற்றுப்பத்து | குமட்டூர்க் கண்ணனார் |
| ஒவ்வொரு புல்லையும் | இன்குலாப் (சாகுல் ஹமீது) |
| தொலைந்து போனவர்கள் | அப்துல் ரகுமான் |
| மனோண்மணீயம் | பெ. சுந்தரனார் |
| திருக்குறள் | திருவள்ளுவர் |

## உரைநடை

| பாடப்பகுதி | ஆசிரியர் |
|---|---|
| பேச்சு மொழியும் கவிதை மொழியும் | இந்திரன் |
| இயற்கை வேளாண்மை | |
| மலை இடப்பெயர்கள் : ஓர் ஆய்வு | ஆர் பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., |
| தமிழகக் கல்வி வரலாறு | |
| ஆனந்தரங்கர் நாட்குறிப்பு | |
| காலத்தை வென்ற கலை | |
| காற்றில் கலந்த பேரோசை | சுந்தர ராமசாமி |
| தாகூரின் கடிதங்கள் | |

## துணைப்பாடம்

| பாடப்பகுதி | ஆசிரியர் |
|---|---|
| ஆறாம் திணை | அ.முத்துலிங்கம் |
| யானை டாக்டர் | ஜெயமோகன் |
| வாடிவாசல் | சி.சு.செல்லப்பா |
| இதழாளர் பாரதி | |

| பாடப்பகுதி | ஆசிரியர் |
|---|---|
| பிம்பம் | பிரபஞ்சன் |
| இசைத் தமிழர் இருவர் | |
| சிந்தனைப் பட்டிமன்றம் | |
| செவ்வி | நர்த்தகி நடராஜ் |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com







எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!

\- பாரதிதாசன்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# இயல் 1 என்னுயிர் என்பேன்



## கற்றல் நோக்கங்கள்

- பேச்சுமொழிக்கும் கவிதைமொழிக்கும் உள்ள தனித் தன்மைகளைப் பல்வேறு படைப்பாளர்களின் கருத்துகளின் வழிப் புரிந்துகொள்ளுதல்
- மொழியின் இலக்கிய இலக்கண வளங்களை அறிதல்
- நூலின்கண் பாயிரம் பெறும் இடத்தையும் அதன் இன்றியமையாமையையும் அறிதல்
- புலம்பெயர் வாழ்க்கைச் சூழல்களால் தமிழ்மொழி உலகெங்கும் பரவியுள்ளதைத் தெரிந்து கொள்ளுதல்
- மொழி முதல், இறுதி எழுத்துகள் எவை என்பதை அறிந்து பிறமொழிக் கலப்பின்றிப் பேசவும் எழுதவும் செய்தல்

## பாடப் பகுதி

யுகத்தின் பாடல் – சு. வில்வரத்தினம்

பேச்சுமொழியும் கவிதைமொழியும் – இந்திரன்

நன்னூல் – பாயிரம் – பவணந்தி முனிவர்

ஆறாம் திணை – அ. முத்துலிங்கம்

மொழி முதல், இறுதி எழுத்துகள்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## புத்தகப் பயிற்சி வினாக்கள்

### இலக்கணத் தேர்ச்சிகொள் (பக்கம்.20)

1. **தவறான இணையைத் தேர்வு செய்க. (மார்ச்.20)**

அ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர் ஆ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்

இ) கடல் + அலை - உயிர் + மெய் ஈ) மண் + வளம் - மெய் + மெய் **[இ) கடல் அலை - உயிர் + மெய்]**

2. **கீழ்க்காணும் குறிப்புகளில் பொதிந்துள்ள மேடைப் பேச்சில் சிறந்து விளங்கிய தமிழறிஞர்களின் பெயர்களைக் கண்டறிக.**

அ) சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர் (3) **அண்ணா**

ஆ) தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர் (10) **கல்யாணசுந்தரனார்**

இ) உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாடியவர் (6) **பாரதிதாசன்**

ஈ) பொதுவுடைமைக் கொள்கையின் முன்னோடிகளுள் ஒருவர் (2) **ஜீவா**

3. **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

1. காலங்காத்தால எந்திரிச்சி படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.
   **அதிகாலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்.**
2. முயற்சி செஞ்சா அதுக்கேற்ற பலன் வராம போவாது.
   **முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் வராமல் போகாது.**
3. காலத்துக்கேத்த மாரிப் புதுசு புதுசா மொழி வடிவத்த மாத்தனும்.
   **காலத்துக்கேற்றாற் போல புதிது புதிதாக மொழி வடிவத்தை மாற்ற வேண்டும்.**
4. ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமாப் பதிய வைக்கனும்.
   **ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது எல்லாவற்றையும் கவனமாகப் பதிய வைக்க வேண்டும்.**
5. தேர்வெழுத வேகமாகப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.
   **தேர்வெழுத விரைவாகச் செல்லுங்கள், நேரம் கழித்துச் சென்றால் பதற்றமாகிவிடும்.**

### 4. வினாக்கள்

**அ) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?**

- மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் - 22
- அவை : உயிர் எழுத்துகள் - 12 (அ முதல் ஔ வரை)
- மெய் எழுத்துகள் - 10 (க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ)

**ஆ) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? எடுத்துக்காட்டுத் தருக.**

- மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் : 24
- உயிர் எழுத்துகள் - 12 (அ முதல் ஔ வரை)
- மெய் எழுத்துகள் - 11 (ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள்)
- குற்றியலுகரம் - 1 இவையே மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகளாகும்.

**எ.கா.** நாடு - உயிரீறு
தமிழ் - மெய்யீறு
வீடு - குற்றியலுகர ஈறு



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**இ) உயிரீறு, மெய்யீறு - விளக்குக. (மார்ச்.20)**

- நிலை மொழியின் இறுதி எழுத்து உயிர் எழுத்தாக நிற்பின் அதை உயிரீறு என்பர்.
- எ.கா.- மணிமாலை - மணி + மாலை - (மணி - நிலைமொழி) (ணி- இறுதி எழுத்து - ண் + இ)
- நிலை மொழியின் இறுதி எழுத்து மெய் எழுத்தாக நிற்பின் அதை மெய்யீறு என்பர்.
- எ.கா.- பொன்வண்டு - பொன் + வண்டு - (பொன் - நிலை மொழி) (ன் இறுதி எழுத்து)

**ஈ) உயிர் முதல், மெய்ம்முதல் - எடுத்துக்காட்டுடன் விவரிக்க.**

- வருமொழியின் முதல் எழுத்து உயிர் எழுத்தாக இருப்பின் அது உயிர் முதல் எனப்படும்.
- எ.கா.- வாழையிலை - வாழை + இலை - (இலை - வருமொழி) (இ - முதல் எழுத்து)
- வருமொழியின் முதல் எழுத்து மெய் எழுத்தாக இருப்பின் அது மெய் முதல் எனப்படும்.
- எ.கா. - தமிழ்நிலம் - தமிழ் + நிலம் - (நிலம் - வருமொழி) (நி (ந்+இ) முதல் எழுத்து)

**உ) குரங்குக்குட்டி - புணர்ச்சியை விளக்குக.**

- குரங்குக்குட்டி - குரங்கு + குட்டி
- இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும் - **குரங்குக்குட்டி**

## நம்மை அளப்போம் (பக்கம்.21)

### பலவுள் தெரிக

1. **பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.**

அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல் ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
இ) சு.வில்வரத்தினம் - ஆறாம் திணை ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதை மொழியும்
i) அ, ஆ ii) அ, ஈ iii) ஆ, ஈ iv) அ, இ **[iii) ஆ, ஈ]**

2. **''கபாடபுரங்களைக் காவுகொண்டபின்னும்**
**காலத்தால் சாகாததொல் கனிமங்கள்'' - அடி மோனையைத் தெரிவு செய்க.**

அ) கபாட புரங்களை - காவு கொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத **[இ) கபாடபுரங்களை - காலத்தால்]**

3. **பாயிரம் இல்லது__________ அன்றே.**

அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை **[ஆ) பனுவல்]**

4. **ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைகிறது. இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.**

அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்
ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியைத் திட திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை.
இ) எழுத்து மொழியைவிட பேச்சுமொழி எளிமையானது.
ஈ) பேச்சுமொழியைக் காட்டிலும் எழுத்து மொழி எளிமையானது.

**[இ) எழுத்து மொழியைவிட பேச்சுமொழி எளிமையானது]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



5. **மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.**

அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்

இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம் **[அ) அன்னம், கிண்ணம்]**

## குறுவினா

1. **பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?**
   - ➢ எழுத்துமொழியில் எழுதுவதை மட்டும் தான் மனிதனின் கை செய்கிறது.
   - ➢ ஆனால் பேச்சுமொழியில் முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.
   - ➢ அதனால்தான், பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

2. **என் அம்மை, ஒற்றியெடுத்த**
**நெற்றி மண் அழகே!**
**வழி வழி நினதடி தொழுதவர்,**
**உழுதவர், விதைத்தவர்,**
**வியர்த்தவர்க்கெல்லாம்**
**நிறைமணி தந்தவளே!**

   **- இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.**
   - ➢ தொழுதவர்,
   - ➢ உழுதவர்,
   - ➢ விதைத்தவர்,
   - ➢ வியர்த்தவர், தந்தவள்

3. **'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது? (மார்ச்.19)**
   - ➢ நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும் அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறைபற்றிப் பேசுவது பாயிரம் ஆகும்.

4. **உயிரெழுத்து, பன்னிரண்டு, திருக்குறள், நாலடியார் - இச்சொற்களில் எவ்வகையான ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன?**
   - ➢ உயிரெழுத்து (த் + உ) = உயிரீறு
   - ➢ பன்னிரண்டு (ட் + உ) = உயிரீறு
   - ➢ திருக்குறள் (ள்) = மெய்யீறு
   - ➢ நாலடியார் (ர்) = மெய்யீறு

5. **இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.**
   - ➢ தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை - **இரசூல் கம்சதோவ்**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## சிறுவினா

**1. சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

- நாட்டையும், மொழியையும் வாழ்த்தி, தாய்மொழிக்குத் தொண்டாற்றிய சான்றோர் பெருமக்களைப் போற்றிப் பாட வேண்டும்.
- நமது தாய்மொழியாம் தமிழ்மொழியின் தொன்மம், காலத்தால் அழியாத வகையில் வலிமை சேர்க்கப்பாட வேண்டும் என்று கவிஞர் சு.வில்வரத்தினம் குறிப்பிடுகின்றார்.

**2. நூல் ஒன்றின் முகவுரையில் இடம் பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?**

- நூலுக்கு முன் சொல்லப்படுவது முகவுரை ஆகும். பாயிரம் என்பது முகவுரையே.
- பொதுப்பாயிரத்தின் வாயிலாக அறியப்படும் செய்திகள்:
  நூலின் இயல்பு, ஆசிரியரின் இயல்பு, கற்பிக்கும் முறை, மாணவர் இயல்பு, கற்கும் முறை இந்த ஐந்து கருத்துகளும் பொதுப்பாயிரத்தின் வாயிலாக அறியப்படும் கருத்துகள் ஆகும்.
- சிறப்புப் பாயிரத்தில் அறியலாகும் செய்திகள்:
  நூலாசிரியர் பெயர், நூல் பின்பற்றிய வழி, நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு, நூலின் பெயர், (தொகை, வகை, விரி ஆகியவற்றுள்) இயற்றப்பட்ட யாப்பு வகை, நூலில் குறிப்பிடப்படும் கருத்து, நூலைக் கேட்போர் (மாணவர்), நூலைக் கற்பதால் பெறுகின்ற பயன் ஆகிய எட்டுச் செய்திகளைத் தெரிவிப்பது சிறப்புப் பாயிரமாகும்.

**3. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.**

- மொழி மனித இனத்தின் ஆதி அடையாளம்.
- அது பண்பாட்டுப் பரிணாம வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு உருவானது.
- ஓர் இனத்தின் மையப்புள்ளியாக விளங்குவதும் மொழியே
- அது நம் இருப்பின் அடையாளம்.
- நம் தாய்மொழியாம் தமிழ்மொழியின் வேர், சங்கத்தில் தொடங்கி இன்றைய காலம் வரையும், இடர்பல களைந்து உயர்தனிச் செம்மொழியாகச் செழித்தோங்கி இருக்கிறது.
- எனவே 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்'.

**4. கூற்று : குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று;
நினைவு கூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.**

**கவிதை : கூண்டு திறந்தது
சிறகடிக்கவா?
இல்லை! சீட்டெடுக்க.**

**கூற்றில் குறியீடு எனக் குறிப்பிடப்படுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது?**

- ஒன்றை மற்றொன்றால் உணர்த்துவதே குறியீடு.
- கிளி இருப்பது கூண்டில்; அது திறந்தாலும் பறப்பதற்கன்று; சீட்டெடுப்பதற்கு என அடிமைகளின் வாழ்வியல் முறை இக்கூற்றில் குறியீடாக அமைந்துள்ளது.

**5. மொழி முதல், இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.**

✓ **மொழி முதல் எழுத்துகள் : 22**

- **உயிரெழுத்துகள் - 12**
  அ - அம்மா, ஆ - ஆற்றல், இ - இதயம், ஈ - ஈழம், உ - உயிர், ஊ - ஊக்கம், எ - எளிது, ஏ - ஏற்றம், ஐ - ஐப்பசி, ஒ - ஒற்றுமை, ஓ - ஓலை, ஔ - ஔவை.
- **மெய்யெழுத்துகள் - 10**
  க - கடல், ங - ஙனம், ச - சங்கம், ஞ - ஞாலம், த - தமிழ், ந - நன்றி, ப - பகல், ம - மரம், ய - யாழ், வ - வாள்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



✓ **மொழி இறுதி எழுத்துகள் : 24**

➢ **உயிரெழுத்துகள் - 12**

சில - அ, அப்பா - ஆ, கல்வி - இ, தீ - ஈ, உலகு - உ, பூ - ஊ, அலை - ஐ, நொ - ஒ, போ - ஓ, கௌ - ஔ.

➢ **மெய்யெழுத்துகள் - 11**

நாண் - ண், மரம் - ம், மான் - ன், தாய் - ய், பார் - ர் , கடல் - ல், யாழ் - ழ் நாள் - ள்.

➢ **குறிப்பு : ஞ், ந், வ் - பழைய இலக்கிய வழக்கில் சொல்லின் இறுதியில் வந்துள்ளன.**

**குற்றியலுகரம் - 1**

அச்சு - (சு = ச் + உ) வன்தொடர்க் குற்றியலுகரம்

## நெடுவினா

1. **நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.** (மார்ச்.20)

மொழிதான் ஒருவருடைய உலகத்தை, ஒவ்வொரு பொருளுக்கும் பெயர்களுடன் கட்டியெழுப்புகிறது. மொழி ஒருவருக்கு அறிமுகமாவதற்கு முன்னால், பொருள்களும், விலங்குகளும், பறவைகளும், வானும், நிலவும், சூரியனும், மரங்களும், செடிகளும் அவருக்கு அறிமுகமானதாக இருந்திருக்க இயலாது. எனவே அத்தகைய மொழியைப் பேச்சுமொழி, எழுத்துமொழி என இரண்டு வகையில் வெளிப்படுத்தலாம். அப்படி வெளிப்படுத்தும்போது மொழியை நான் எவ்வாறு உணர்கிறேன் என்பதை இக்கட்டுரை விவரிக்கிறது.

**வாளினும் வலிமை:**

மொழிவழியாக ஒன்றைப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கியவுடன், அந்தப் பொருளின்மீது எனக்கொரு **அதிகாரம்** வந்துவிடுவதை நான் உணர்கிறேன். எனவே மொழி நான் பெயரிட்டு அழைக்கும் பொருட்களின் மீது எனக்கு அதிகாரத்தை உருவாக்கிக் கொடுப்பதாக நான் உணர்கிறேன்.

**மொழி வெளிப்பாடு:**

உடம்பின் ஒரு பகுதியாக இருக்கிற தொண்டையிலிருந்து சொற்கள் எழுகின்றன. அவற்றை ஏற்றம், இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பித் திருப்பிச் சொல்லுதல், இடையில் கொடுக்கும் மௌனம் ஆகியவற்றை ஏற்றவாறு பயன்படுத்திப் பொருள் வேறுபாடுகளை என்னால் ஏற்படுத்த முடியும் என உணர்கிறேன். இதுமட்டுமின்றி, கைகால் அசைவுகள், முகத்தின் தசைநார்ச் சுருக்கங்களின் அபிநயங்கள் ஆகிய உடம்பின் செயல்பாடுகள் என்னுடைய **மொழி வெளிப்பாட்டின்** பகுதியாக உள்ளன.

**உறை பனிக்கட்டி:**

ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகின்றபொழுது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைந்துவிடுகிறது.

**உணர்ச்சிக்கு அருகாமை:**

எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது. எழுதுவதை மட்டும்தான் நம் கை செய்கிறது. ஆனால் முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிபாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. அதனால் பேச்சு மொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளதை நான் உணர்கிறேன்.

**நேரடி மொழி:**

எழுத்து மொழியில் பேச்சைக்கேட்க எதிராளி என்கிற ஒருவன் கிடையாது. எழுத்து என்பது ஒருவகையில் தனக்குத்தானே பேசிக்கொள்கிற பேச்சு. ஆனால் பேச்சு என்பது தன்னைத் திறந்து கொள்கிற ஒரு செயல்பாடு; பேச்சு என்பது மொழியில் நீந்துவது. பேசும்போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச் செய்கின்றன. எனவே பேச்சுமொழியே நேரடி மொழி என நான் உணர்கிறேன்.

பேச்சுமொழிக்கு ஒருபோதும் பழமை தட்டுவதில்லை; அது வேற்றுமொழி ஆவதில்லை. அது எப்போதும் உயிர்ப்புடனும், மாறிக் கொண்டும் இருக்கிறது. பேச்சு மொழியில் ஒரு கவிதை எழுதும் போது, அது உடம்பின் மேல்தோல் போல இயங்குகிறது. அதுவே எழுத்து மொழியாக இருக்குமானால், அது கவிதையின் உணர்வை உணர்ச்சியற்ற ஆடை போலப் போர்த்தி மூடிவிடுவதை நான் உணர்கிறேன்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



2. **நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.**

**பாயிரம்:**

நூலைப் புரிந்துகொள்ளவும், அதன் சிறப்பை உணர்ந்து விருப்பத்துடன் கற்கவும் பாயிரம் உதவுகிறது. நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும், அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றிப் பேசுவது பாயிரம் ஆகும்.

**நன்னூல்:**

தமிழின் முதல் இலக்கண நூல் தொல்காப்பியம். தொல்காப்பியத்தில் பாயிரம் என்னும் அமைப்புக் காணப்படுகிறது. அதனைப் பின்பற்றி எழுதப்பட்ட நூலான நன்னூல், பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் குறித்து விளக்குகிறது. அதனைக் கீழே காண்போம்.

**பாயிரம் - உரிய ஏழு பெயர்கள்:**

முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை என ஏழு பெயர்களாலும் பாயிரம் வழங்கப்படும்.

**பாயிரம் - வகைகள்:**

பாயிரம் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என இருவகைப்படும்.

**பொதுப்பாயிரம்:**

- நூலின் இயல்பு
- ஆசிரியர் இயல்பு
- கற்பிக்கும் முறை
- மாணவர் இயல்பு
- கற்கும் முறை

என ஐந்தையும் கூறுவது பொதுப்பாயிரம் ஆகும்.

**சிறப்புப்பாயிரம்:**

- நூலாசிரியர் பெயர்
- நூல் பின்பற்றிய வழி
- நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு
- நூலின் பெயர்
- தொகை, வகை, விரி ஆகியவற்றுள் இயற்றப்பட்ட யாப்பு வகை
- நூலில் குறிப்பிடப்படும் கருத்து
- நூலைக் கேட்போர் (மாணவர்)
- நூலைக் கற்பதால் பெறுகின்ற பயன்

ஆகிய **எட்டுச்** செய்திகளையும் செம்மையாகத் தெரிவிப்பது சிறப்புப் பாயிரம் ஆகும்.

- நூல் இயற்றப்பட்ட காலம்
- அது அரங்கேற்றப்பட்ட அவைக்களம்
- அது இயற்றப்பட்டதற்கான காரணம்

என்னும் மூன்றையும் சேர்த்துக் கூறுவோரும் உளர்.

**பாயிரத்தின் சிறப்பு:**

- ஒரு நூலானது ஆயிரம் முகத்தைப் பெற்றது போன்று, பல்வேறு துறைச் செய்திகளை விரிவாகக் கூறினாலும், பாயிரம் இல்லையென்றால் அது சிறந்த நூலாக மதிக்கப்படாது.
- மாடங்களுக்கு ஓவியங்களும், பெரிய நகரங்களுக்குக் கோபுரங்களும், அழகிய தோள்களைக் கொண்ட மகளிருக்கு அணிகலன்களும் எழிலைத் தரும். அதுபோல, எல்லாவகை நூல்களுக்கும் முகப்பில் அழகு தருவதற்காகப் பாயிரத்தை அமைக்கின்றனர்.

3. **தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?**

காலந்தோறும் நிலையான வாழ்விடங்களைத் தேடி புலம்பெயர்ந்தபடியே இருந்த நாடோடி இனம், நிலவுடைமைச் சமூகமாக மாறப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆயின. மண்ணிலிருந்து பயிர்களைப் பிடுங்கியெறிவது போல, தாய் மண்ணிலிருந்து மனித உயிர்களைப் பெயர்த்து எறியும்போக்கு காலந்தோறும் நடந்துவரும் பேரவலம் ஆகும். அத்தகைய ஒரு பேரவலத்தை அ.முத்துலிங்கம் அவர்களின் 'ஆறாம் திணை' படம் பிடித்துக் காட்டுகிறது.

**புலம்பெயர் இலக்கியம்:**

சங்க இலக்கியங்களில் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வதைப் பாடும் பாடல்கள் உள்ளன. பொருள் தேடுவதற்காகப் பிரிந்து செல்வதைப் 'பொருள் வயின் பிரிவு' என்றார்கள் சங்கத்தமிழர்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், அரசனின் கொலைச் சீற்றத்துக்குப் பயந்து, சொந்த நாட்டை விட்டு ஓடியவர்களைப் பற்றி தனிமகனார் எழுதிய நற்றிணைப் பாடல் (எண்.153) கூறுகிறது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**அகதிகள் முகாம்:**

இலங்கையில் இனக்கலவரம் நடந்தபோது, மவுண்லவினியா என்னும் இடத்தில் வாடகை வீட்டில் தங்கியிருந்திருக்கிறார் கவிஞர் அ.முத்துலிங்கம் அவர்கள். அப்போது வீட்டுச் சொந்தக்காரர், தான் சிங்களவராக இருந்தபோதும் அவர்களைக் காப்பாற்றி அகதிகள் முகாமுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

அடுத்தவேளை உணவு எப்போது வரும் என்று தெரியாத அவலநிலை; யாரோ ஒருவருடைய மேலங்கி மட்டுமே மாற்று உடையாகக் கிடைத்த சோகம்; இதுபோன்ற கீழான நிலை இனி வாழ்வில் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற உறுதியை அவர் மேற்கொண்டதைச் சுட்டிச் செல்கிறார்.

**கனடா வாழ் தமிழர்கள்:**

திருக்குறளையும், திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி.யு.போப் கனடாவில் பிறந்தவர். தமிழ் அகதிகள் 1983-ஆம் ஆண்டுக்குப் பிறகு தான் கனடாவுக்குக் குடிபெயரத் தொடங்கினர். ஆனால் சில ஆண்டுகளிலேயே பத்திரிக்கைகளையும், இலக்கிய இதழ்களையும் தொடங்கிப் புது வாழ்க்கையைப் பதிவு செய்யத் தொடங்கிவிட்டனர். உலகின் இரண்டாவது பெரிய தேசமான கனடாவில் தமிழர்கள் வாழும் சாலை ஒன்றுக்கு 'வன்னி வீதி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

**புலம் பெயர் தமிழர்கள்:**

புலம்பெயர் நாடுகளில் தமிழ் கற்க முனையும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. உலகம் முழுக்க 8 கோடித் தமிழர்கள் வாழ்கின்றனர். நியூசிலாந்திலிருந்து அலாஸ்கா வரை புலம்பெயர் தமிழர்கள் 10 இலட்சம்பேர் வாழ்கிறார்கள். கனடாவில் மட்டும் 3 லட்சம் தமிழர்கள் இருப்பதாகக் கணக்கெடுப்புக் கூறுகிறது. 2012-ஆம் ஆண்டு முதல், ஜனவரி 14-ஆம் நாள் 'தமிழர் பாரம்பரிய நாள்' எனப் பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது.

**ஆறாம் திணை:**

சங்க இலக்கியம் ஐவகை நிலங்களைப் பற்றிப் பேசுகிறது. அந்நூல்களில் பனியும் பனி சார்ந்த நிலத்துக்கும் பாடல்கள் இல்லை. புலம்பெயர்ந்த 10 இலட்சம் மக்கள் சென்றடைந்தது பனிப் பிரதேசங்களைத் தான். அவர்கள் உலகம் பனியும், பனி சார்ந்த நிலமும். ஆம். அதுவே ஆறாம் திணை.

இவ்வாறு தமிழர் வாழ்வோடும், புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு இணைக்கப்பட்டுள்ளது.

---

## மொழியை ஆள்வோம் (பக்கம் – 22)

### சான்றோர் சித்திரம்


மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்
(1815 – 1876)

தமிழ் இலக்கிய வரலாற்றில், ''புலமைக் கதிரவன்'' எனத் தமிழறிஞர்கள் போற்றிய தமிழ்மொழிப் பெரும்புலவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் ஆவார். திருச்சிராப்பள்ளி அருகில் உள்ள அதவத்தூர் என்னும் ஊரில் பிறந்த இவர், திருவாவடுதுறை மடத்தின் தலைமைப் புலவராக விளங்கினார்.

மீனாட்சி சுந்தரனார், தமிழறிஞர்களைத் தேடிக் கண்டு, வழிபட்டு, செவிதிறந்து கற்றார். திருவாவடுதுறை மடத்தின் தலைவர் சுப்பிரமணிய தேசிகர், சென்னைத் தாண்டவராயர், திருத்தணிகை விசாகப் பெருமாள் ஆகியோரிடம் பூக்கள்தோறும் சென்று தேனுண்ணும் வண்டுபோல் பாடம் கற்றார்.

அவர் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத் தமிழ் என்ற நூல் இவருடைய பெருமையை என்றும் உணர்த்தும். தல புராணங்கள் பாடுவதில் சிறந்தவர். யமக அந்தாதி, திரிபந்தாதி, வெண்பா அந்தாதிகள் ஆகியவற்றை உருவாக்கிப் புகழ் பெற்றார். மாலை, கோவை, கலம்பகம், பிள்ளைத் தமிழ் ஆகியவற்றைப் பாடிப் பெருமை அடைந்தார். உ.வே.சாமிநாதர், தியாகராசர், குலாம்காதிறு நாவலர் முதலானோர் இவரின் மாணவர்கள். மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனார் அவர்களின் புகழ் தமிழ் உள்ளவரையிலும் வாழும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



1. **தமிழிலக்கிய வரலாற்றில் புலமைக் கதிரவன் - இத்தொடரில் புலமைக் கதிரவன் என்பதற்கு இலக்கணக்குறிப்புத் தருக.**
   உருவகத்தொடர்

2. **மேற்கண்ட பத்தியில் இடம் பெற்றுள்ள உவமை, உருவகத் தொடர்களைக் கண்டறிக.**
   தேனுண்ணும் வண்டு போல - உவமைத்தொடர்
   புலமைக் கதிரவன் - உருவகத்தொடர்

3. **மீனாட்சி சுந்தரனார் தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் - விடைக்கேற்ற வினாவை அமைக்க.**
   - மீனாட்சி சுந்தரனார் எவற்றைப் பாடுவதில் சிறந்தவர்? (அல்லது)
   - தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் யார்?

4. **பத்தியில் மொழி முதல் எழுத்துகளைக் கொண்டு அமைந்த சொற்களுள் எவையெவை வடமொழிச் சொற்கள் எனச்சுட்டுக.**
   மகா வித்துவான், தலபுராணங்கள், யமக அந்தாதி, திரிபந்தாதி, கலம்பகம், தேசிகர்.

5. **விளங்கினார் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
   **விளங்கினார் - விளங்கு + இன் + ஆர்**
   விளங்கு - பகுதி
   இன் - இறந்தகால இடைநிலை
   ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

## தமிழாக்கம் தருக.

1. **The Pen is mightier than the Sword.**
   எழுதுகோலின் முனை வாளின் முனையை விட வலிமையானது.

2. **Winners don't do different things, they do things differently.**
   வெற்றியாளர்கள் மாறுபட்ட செயலைச் செய்வதில்லை. செய்வதையே வித்தியாசமாகச் செய்கிறார்கள்.

3. **A picture is worth a thousand words.**
   ஓர் ஓவியம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம்.

4. **Work while you work and play while you play.** (மார்ச்.19)
   உழைக்க வேண்டிய நேரத்தில் உழை! விளையாட வேண்டிய நேரத்தில் விளையாடு!

5. **Knowledge rules the World.**
   அறிவே உலகை ஆள்கிறது.

## பிறமொழிச்சொற்களைத் தமிழ்ப்படுத்துக.

| | | |
|---|---|---|
| 1. | வாடகை | குடிக்கூலி |
| 2. | மாதம் | திங்கள் |
| 3. | போலீஸ் | காவல் |
| 4. | நிச்சயம் | உறுதி |
| 5. | உத்திரவாதம் | உறுதி |
| 6. | சந்தோஷம் | மகிழ்ச்சி |
| 7. | சம்பளம் | ஊதியம் |
| 8. | ஞாபகம் | நினைவு |
| 9. | வருடம் | ஆண்டு |
| 10. | தேசம் | நாடு |
| 11. | வித்தியாசம் | வேறுபாடு |
| 12. | உற்சாகம் | மகிழ்ச்சி / பூரிப்பு |
| 13. | விசா | நுழைவு இசைவு |
| 14. | பாஸ்போர்ட் | கடவுச்சீட்டு |
| 15. | கம்பெனி | நிறுவனம் |
| 16. | பத்திரிகை | நாளிதழ் |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



| | | | |
|---|---|---|---|
| 17. கோரிக்கை | - வேண்டுகோள் | 21. முக்கியத்துவம் | - முதன்மை |
| 18. யுகம் | - ஊழி | 22. சொந்தம் | - உறவு |
| 19. ராச்சியம் | - நாடு | 23. சமீபம் | - அருகில் |
| 20. சரித்திரம் | - வரலாறு | 24. தருணம் | - வேளை / தக்க பொழுது |

2. **கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலைப் படித்து நாளிதழில் செய்தியாக வெளியிட வேண்டி முதன்மை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

**''அரியன கேள் புதியன செய்'' (திங்கள் கூடுகை)**

| நேரம் : 2.30 பிற்பகல் | இடம் : அ.மே.நி.பள்ளி |
|---|---|
| 2.30 | தமிழ்த்தாய் வாழ்த்து |
| 2.35 | வரவேற்புரை - மாணவர் இலக்கியச் செல்வன் |
| 2.40 | தலைமையுரை - திரு.எழிலன், தலைமை ஆசிரியர் |
| 2.50 | சிறப்புரை - கவிஞர் வாணி ''புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை'' |
| 3.45 | நன்றிபுரை - மாணவர் ஏஞ்சலின் |
| 4.00 | நாட்டுப்பண் |

**அனுப்புநர்**

தலைமை ஆசிரியர்,
நகராட்சி மேனிலைப்பள்ளி,
திருவண்ணாமலை.

**பெறுநர்**

முதன்மை ஆசிரியர் அவர்கள்,
தமிழ் இந்து நாளிதழ்,
திருவண்ணாமலை.

**மதிப்பிற்குரிய ஐயா,**

வணக்கம்.

**பொருள்** : எங்கள் பள்ளியில் நடந்த திங்கள் கூடுகை நிகழ்ச்சியை நாளிதழில் வெளியிட வேண்டுதல் தொடர்பாக.

-----

எங்கள் பள்ளியில் ''அரியன கேள் புதியன செய்'' என்னும் தலைப்பில் திங்கள் கூடுகை நிகழ்ச்சி சென்ற வாரம் 01.04.2019-ஆம் நாள் திங்கள்கிழமை அன்று நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக கவிஞர் தமிழினி நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். தலைமை ஆசிரியர் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சி பற்றிய செய்திக் கட்டுரையைக் கடிதத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். தங்கள் நாளிதழில் அதனை வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

நன்றி!

**இடம் :** திருவண்ணாமலை
**நாள்** : 15.04.2019

இப்படிக்கு,
தலைமையாசிரியர்,
நகராட்சி மேல்நிலைப்பள்ளி,
திருவண்ணாமலை.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



### செய்திக்கட்டுரை

ஏப்ரல் திங்கள் முதல்நாள் திங்கட்கிழமையன்று எங்கள் நகராட்சி மேனிலைப்பள்ளியில் பிற்பகல் 2.30 மணியளவில் 'அரியன கேள் புதியன செய்' என்ற திங்கள் கூடுகை நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இவ்விழாவில் மாணவர் இலக்கியச் செல்வன் வரவேற்புரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து எமது பள்ளித் தலைமையாசிரியர் திரு.எழிலன் அவர்கள் தலைமையுரை ஆற்ற, சிறப்பு அழைப்பாளராக வருகை புரிந்த கவிஞர் வாணி அவர்கள் 'புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை' என்ற தலைப்பில் சிறப்புரை நல்கினார். பின்னர் மாணவர் ஏஞ்சலின் நன்றியுரைக்க, நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

---

## பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

''அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்'' என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் ''பல்கலைப் புலமை'' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. ''தமிழ்கெழு கூடல்'' என்றவிடத்திலும் ''கலைப்புலமை'' என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் ''தமிழ் தழீஇய சாயலவர்'' என்னும் இடத்து, 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்' பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன ''தமிழ் இவை பத்துமே'', மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் ''தமிழ் மாலை'' என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும். ('பண்பாட்டு அசைவுகள்' - தொ.பரமசிவன்)

1. **தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?**

   தமிழ் எனும் சொல்லுக்கு

   - இனிமை
   - பண்பாடு
   - அகப்பொருள்
   - பாட்டு
   - கவிதை
   - அழகு
   - மென்மை
   - பல்கலைப்புலமை

   எனப் பல்வேறு பொருள்கள் உண்டு.

---

2. **பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.**

   தமிழ் தழீஇய சாயலவர் :- சொல்லிசையளபெடை, அதூஉம் - செய்யுளிசை அளபெடை.

---

3. **தமிழ் என்றவுடன் உங்கள் மனத்தில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.**

   தமிழ் என்ற உடன் அமிழ்து அமிழ்து என மனதில் தோன்றுகிறது.

---

4. **திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?**

   தமிழ்மாலை

---

5. **பத்தியின் மையக்கருத்திற்கேற்ப ஒரு தலைப்பிடுக.**

   தமிழ் இனிமை.

---



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## மொழியோடு விளையாடு (பக்கம் – 24)

### எண்ணங்களை எழுத்தாக்குக.



பாடிப் பாடி பறந்த பறவை
பருக நீரின்றி.......
தேடித் தேடி அலைந்ததே!
காய்ந்து கிடந்த குளமும்
ஓடி மறைந்த ஏரியும்
தாகம் தீர்க்க இயலாதே!
சொட்டும் நீரைக்கண்டு
சோர்வை தீர்த்துக் கொள்ளும் பறவை!
அந்தோ பரிதாபம்!
இனியேனும் வாழவிடுங்கள்
வன உயிரிகளை............

### 2. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.

**(எ.கா.) ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்**
அ) மயில் ஓர் அழகான பறவை.
ஆ) பயிர் வளரத் தண்ணீர் வேண்டும்.

**அ) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி.**
அ) ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடம் போக வேண்டும்.
ஆ)கலைகள் எல்லாம் மகிழ்ச்சி தருபவை.

**ஆ) நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை.** (மார்ச்.20)
அ) தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது.
ஆ) மாலை நிலவு மனதை மகிழ்விக்கும்.

**இ)பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை**
அ) பிறர் செய்த உதவியை மறக்கக் கூடாது.
ஆ) நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக்கூடாது.

**ஈ) நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?**
அ) நேற்று வந்த பையன் யார் தெரியுமா?
ஆ) பக்கத்தில் ஏன் இருக்கவில்லை?

**உ) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.**
அ) கோசல நாடு ஒரு சிறந்த நாடு. ஆ) மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

### 3. வேர்ச்சொற்களை எடுத்துக்காட்டில் உள்ளவாறு தொடர்களாக மாற்றுக.

**(எ.கா.) வா - வேர்ச்சொல்**
அருணா வீட்டுக்கு வந்தாள். (வினைமுற்று)
அங்கு வந்த பேருந்தில் அனைவரும் ஏறினர். (பெயரெச்சம்)
கருணாகரன் மேடையில் வந்து நின்றார். (வினையெச்சம்)
என்னைப் பார்க்க வந்தவர் என் தந்தையின் நண்பர். (வினையாலணையும் பெயர்)

**ஆ) பேசு - வேர்ச்சொல்**

அவன் பேசினான் (வினைமுற்று)
அவன் பேசிய வார்த்தை நன்று (பெயரெச்சம்)
அவன் பேசி முடித்தான். (வினையெச்சம்)
அவனுடன் பேசியவர் அவன் தந்தை (வினையாலணையும் பெயர்)

**ஆ) தா - வேர்ச்சொல்**

அவள் பேனா தந்தாள் (வினைமுற்று)
அது அவள் தந்த பேனா (பெயரெச்சம்)
எனக்கே அதைத் தந்துவிட்டாள் (வினையெச்சம்)
அவளுக்கு அப்பேனாவை தந்தவர் அவள் தந்தை (வினையாலணையும் பெயர்)

**இ) ஓடு - வேர்ச்சொல்**

பூனை ஓடியது (வினைமுற்று)
ஓடிய பூனையை நாய் துரத்தியது (பெயரெச்சம்)
பூனை ஓடி மறைந்தது (வினையெச்சம்)
நாயைத்தேடி ஓடியவர் விழுந்தார். (வினையாலணையும் பெயர்)

**ஈ) பாடு - வேர்ச்சொல்**

குயில் பாடியது (வினைமுற்று)
குயில் பாடிய பாட்டு இனிமையாக இருந்தது (பெயரெச்சம்)
குயில் பாடி முடித்தது. (வினையெச்சம்)
குயில் போலப் பாடியவர் யார் எனத்தெரியவில்லை. (வினையாலணையும் பெயர்)

## கலைச்சொல் அறிவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அழகியல் | - Aesthetics | கலை விமர்சகர் | - Art Critic | புலம்பெயர்தல் | - Migration |
| இதழாளர் | - Journalist | புத்தக மதிப்புரை | - Book Review | மெய்யியலாளர் | - Philosopher |

## நன்னூல் பாயிரம்

### இலக்கணக்குறிப்பு

**மாநகர்** - உரிச்சொற்றொடர்
**காட்டல், கோடல்** - தொழிற்பெயர்கள்
**கேட்போர்** - வினையாலணையும் பெயர்
**ஐந்தும்** - முற்றும்மை

### பகுபத உறுப்பிலக்கணம்

**வைத்தார் - வை + த் + த் + ஆர்**
வை - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

### புணர்ச்சி விதி

**அணிந்துரை - அணிந்து + உரை**

- உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் - அணிந்த் + உரை
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - அணிந்துரை

**பொதுச்சிறப்பு - பொது + சிறப்பு**

- இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் - பொதுச்சிறப்பு.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## கூடுதல் வினாக்கள்

## கவிதைப்பேழை! யுகத்தின் பாடல் - சு.வில்வரத்தினம்

### பலவுள் தெரிக

1. கவிதையை இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் ஆற்றல் கொண்டவர் யார்?
அ) சு.வில்வரத்தினம் ஆ) இந்திரன் இ) அ.முத்துலிங்கம் ஈ) பாரதியார்
[அ) சு.வில்வரத்தினம்]

2. மனித இனத்தின் ஆதி அடையாளமாகத் திகழ்வது ______.
அ) நாடு ஆ) மொழி இ) இனம் ஈ) சாதி [ஆ) மொழி]

3. யாழ்ப்பாணம் புங்குடுத்தீவில் பிறந்தவர் யார்?
அ) சு.வில்வரத்தினம் ஆ) இந்திரன் இ) அ.முத்துலிங்கம் ஈ) முத்துராமன்
[அ) சு.வில்வரத்தினம்]

4. உயிர்த்தெழும் காலத்துக்காக என்னும் கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்
அ) சு.வில்வரத்தினம் ஆ) இந்திரன் இ) அ.முத்துலிங்கம் ஈ) இராசேந்திரன்
[அ) சு.வில்வரத்தினம்]

5. 2001-இல் வெளிவந்த சு.வில்வரத்தினத்தின் கவிதைத் தொகுப்பு
அ) உள்ளமும் முகமும் ஆ) கப்பல் இல்லா நகரம்
இ) உயிர்த்தெழும் காலத்துக்காக ஈ) காலத்துயர் [இ) உயிர்த்தெழும் காலத்துக்காக]

6. நிறைமணி தந்தவள் என்று குறிப்பிடப்படுபவள்
அ) மணிமேகலை ஆ) ஔவையார் இ) பாரதத்தாய் ஈ) தமிழன்னை [ஈ) தமிழன்னை]

### குறுவினா

1. புதுக்கவிதை விளக்கம் தருக.
   - மரபின்கட்டுப்பாட்டிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட செய்யுள் வடிவமே புதுக்கவிதை ஆகும்.
   - படிப்போரின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்துவதே இதன் தலையாய பண்பாகும்.
   - எளியோரும் தன் உணர்வைக் கவிதையாய் வடிக்கும் வாயில் புதுக்கவிதையாகும்.

2. 'காலத்தை வென்ற மொழி' என்ற தலைப்பில் கவிதை படைக்க.

ஆதியும் அந்தமும் இல்லா
அழகிய மொழி எம்மொழி!
அகிலத்தை ஆளவந்த
ஆயிரங்காலத்துப் பயிர் எங்கள் மொழி
அமுதத்தில் ஊற்றெடுத்த
ஆவென்னும் உயிர்ப்புடன் குலவிடும் மொழி
எங்கள் மூச்சினிலே!
பேச்சினிலே!
காற்றினிலே கலந்திட்ட
காலத்தை வென்றுவிட்ட மொழி!



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



3. **சு.வில்வரத்தினம் குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| **ஆசிரியர்** | : | சு.வில்வரத்தினம் |
| **பிறப்பு** | : | 1950 |
| **ஊர்** | : | யாழ்ப்பாணம் - புங்குடுத்தீவு |
| **இறப்பு** | : | 2006 |
| **சிறப்பு** | : | இவர் கவிதைகள் இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் திறனும் கொண்டவர். இவருடைய கவிதைகள் மொத்தமாக, 'உயிர்தெழும் காலத்துக்காக' என்னும் தலைப்பில் 2001-இல் தொகுக்கப்பட்டது. |

4. **மனித இனத்தின் ஆதி அடையாளம் எது?**
   - ➢ மொழி, மனித இனத்தின் ஆதி அடையாளமாகும்.

5. **நம் இருப்பின் அடையாளம் எது?**
   - ➢ நம் இருப்பின் அடையாளம் மொழி ஆகும்.

6. **மொழி பற்றி சிறுகுறிப்பு வரைக?**
   - ➢ மொழி, மனித இனத்தின் ஆதி அடையாளம்.
   - ➢ பண்பாட்டுப் பரிணாம வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு உருவானது.
   - ➢ ஓர் இனத்தின் மையப்புள்ளியாக விளங்குவதும் மொழியேயாகும்.
   - ➢ மொழி, நம் இருப்பின் அடையாளம்.

## உரைநடை பேச்சுமொழியும் கவிதைமொழியும் - இந்திரன்

### பலவுள் தெரிக

1. **கலைகளின் உச்சம் எது?**

அ) கட்டுரை ஆ) கவிதை இ) கதை ஈ) உரைநடை **[ஆ) கவிதை]**

2. **கவிதையினைப் பேசுவதுபோல எழுதுவதே உத்தமம் அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்று கூறியவர்: (மார்ச்.20)**

அ) மகாகவி பாரதியார் ஆ) இராசேந்திரன் இ) எர்னஸ்ட் காசிரர் ஈ) வால்ட் விட்மன்

**[மகாகவி பாரதியார்]**

3. **மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிகிறது என்றுக் கூறியவர் யார்?**

அ) வால்ட் விட்மன் ஆ) எர்னஸ்ட் காசிரர் இ) பாப்லோ நெரூடா ஈ) மல்லார்மே

**[ஆ) எர்னஸ்ட் காசிரர்]**

4. **ஆசிரியர் இந்திரன் அவர்கள் பேச்சுமொழியினைக் கவிதைகளில் பயன்படுத்துபவர்கள் ______ வகையினர் என்று குறிப்பிடுகிறார்.**

அ) 3 ஆ) 4 இ) 6 ஈ) 5 **[அ) 3]**

5. **புதுக்கவிதையின் இயக்கத்தைத் தோற்றுவித்தவர் யார்? எந்த நாட்டைச் சார்ந்தவர்?**

அ) பாப்லோ நெரூடா, கனடா ஆ) வால்ட் விட்மன், அமெரிக்கா

இ) ஸ்டெஃபான் மல்லார்மே, பிரான்சு ஈ) எர்னஸ்ட் காசிரர், எசிலி

**[ஆ) வால்ட் விட்மன், அமெரிக்கா]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

6. ஸ்டெஃபான் மல்லார்மே எந்நாட்டைச் சேர்ந்தவர்?

அ) பிரான்ஸ் ஆ) அமெரிக்கா இ) கனடா ஈ) சிலி [அ) பிரான்ஸ்]

7. 'தமிழின் கவிதையியல்' நூலாசிரியர் யார்?

அ) இந்திரன் ஆ) பாரதியார் இ) கா. சிவத்தம்பி ஈ) பாரதிதாசன்

[இ) கா. சிவத்தம்பி]

8. உரையாசிரியர் இந்திரனின் இயற்பெயர் ______.

அ) இராசேந்திரன் ஆ) இராமலிங்கம் இ) இராமச்சந்திரன் ஈ) இராமசுந்தர்

[அ) இராசேந்திரன்]

9. மொழியில் மிதந்துகொண்டுதான் நான் பிறந்திருக்கிறேன்! என்று கூறியவர் யார்?

அ) எர்னஸ்ட் காசிரர் ஆ) பாரதியார் இ) இந்திரன் ஈ) கவிமணி [இ) இந்திரன்]

10. நேரடி மொழி எனக்குறிப்பிடப்படுவது ______.

அ) எழுத்துமொழி ஆ) பேச்சுமொழி இ) சைகை மொழி ஈ) ஒலிக்குறிப்பு

[ஆ) பேச்சுமொழி]

11. 'புல்லின் இதழ்கள்' என்ற உலகப்புகழ் பெற்ற நூல் யாருடைய படைப்பாகும்?

அ) பாப்லோ நெரூடா ஆ) மல்லார்மே இ) வால்ட்விட்மன் ஈ) எர்னஸ்ட் காசிரர்

[இ) வால்ட் விட்மன்]

12. வால்ட் விட்மன் தன்னுடைய கவிதையில் தோற்காத நகரம் என்று எதனைச் சுட்டுகிறார்?

அ) தன்னுடைய நகரம் ஆ) நண்பர்களின் நகரம் இ) எதிரிகளின் நகரம் ஈ) குடும்பத்தாரின் நகரம்

[ஆ) நண்பர்களின் நகரம்]

13. பின்வரும் கவிஞர்களுள் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவர் யார்?

அ) பாப்லோ நெரூடா ஆ) வால்ட் விட்மன்

இ) ஸ்டெஃபான் மல்லார்மே ஈ) எர்னஸ்ட் காசிரர் [இ) ஸ்டெஃபான் மல்லார்மே]

14. குறியீட்டுக் கவிதை எழுதுவதில் தேர்ந்தவர் யார்?

அ) பாப்லோ நெரூடா ஆ) வால்ட் விட்மன்

இ) ஸ்டெஃபான் மல்லார்மே ஈ) எர்னஸ்ட் காசிரர் [இ) ஸ்டெஃபான் மல்லார்மே]

15. களைத்துப்போன உம் கத்தரிக்கோலால் காலத்தை வெட்ட முடியாது என்ற வரிகள் யாருடையன?

அ) பாப்லோ நெரூடா ஆ) வால்ட் விட்மன்

இ) ஸ்டெஃபான் மல்லார்மே ஈ) எர்னஸ்ட் காசிரர் [அ) பாப்லோ நெரூடா]

16. 'பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்' இது எந்த மொழியின் கவிதை தொகுப்பு?

அ) இத்தாலி ஆ) ஒரியா இ) பிரெஞ்சு ஈ) கிரேக்கம் [ஆ) ஒரியா]

17. ''இதோ கேள் என் நெஞ்சே மாலுமிகளின் பாடலை'' என்று எழுதியவர்

அ) வால்ட் விட்மன் ஆ) மல்லார்மே இ) பாப்லோ நெரூடா ஈ) எர்னஸ்ட் காசிரர்

[ஆ) மல்லார்மே]

18. ஆற்றூர் ரவிவர்மா எம்மொழிக்கவிஞர்?

அ) கன்னடம் ஆ) சிங்களம் இ) மலையாளம் ஈ) தெலுங்கு [இ) மலையாளம்]



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**19. மனோரமா பிஸ்வாஸ் எம்மொழிக் கவிஞர்?**

அ) ஒரிய ஆ) வங்காளம் இ) மராட்டியம் ஈ) பஞ்சாபி **[அ) ஒரிய]**

**20. 'பறவைகள் ஒரு வேளை தூங்கப்போயிருக்கலாம்' என்பது**

அ) வழி நூல் ஆ) மொழிபெயர்ப்பு நூல் இ) முதல் நூல் ஈ) சார்பு நூல் **[இ) முதல்நூல்]**

## குறுவினா

**1. மொழியால் அதிகாரம் பிறப்பது எப்பொழுது?**

- மொழி வழியாக ஒன்றைப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கியவுடன் அப்பொருளின் மீது தமக்கு அதிகாரம் பிறந்துவிடுவதாக ஆசிரியர் கூறுகிறார்.

**2. கவிஞர்கள் நேரடி மொழி என்று எதைக் கருதுகிறார்கள்?**

- கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரில் இருக்கும் வாசகனுடன் பேசுவது போல அமைக்கின்றனர்
- இதையே அவர்கள் நேரடிமொழி எனக் கருதுகின்றனர்.

**3. சொற்களை எவ்வாறு பயன்படுத்தி பொருள் வேறுபாட்டினை ஏற்படுத்த முடியும்?**

- ஏற்றம், இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பித் திருப்பிச் சொல்லுதல், இடையில் கொடுக்கும் மௌனம் இவற்றால் பொருள் வேறுபாட்டினை ஏற்படுத்த முடியும்.

**4. மலையாள கவிஞர் ஆற்றூர் ரவிவர்மா பேச்சுமொழி குறித்துக் கூறுவன யாவை?**

- நேரடி மொழியாகிய பேச்சுமொழிக்குப் பழமை தட்டுவதில்லை.
- அது வேற்றுமொழியாவதுமில்லை.
- எப்பொழுதும் உயிர்ப்புடன் மாறிக்கொண்டே இருக்கும்.
- பேச்சுமொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா, இறந்த காலத்தவரா என நிர்ணயிக்கிறது.

**5. கவிதை என்பது யாது என்ற வினாவிற்கு இந்திரன் அளிக்கும் விடை யாது?**

- கவிதை என்பது ஒரு பொருளன்று.
- அது மொழிக்குள் உலகையும், உலகிற்குள் மொழியையும் முழுவதுமாக நுழைத்து விடுவதற்காக முயலும் தொடர்ந்த ஒரு படைப்புச் செயல்பாடு ஆகும்.

**6. இந்திரனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் எது? அது எம்மொழியின் மொழிப் பெயர்ப்பு நூலாகும்?**

- மனோரமா பிஸ்வாஸின் 'பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்' எனும் ஒரிய மொழி நூலின் மொழிபெயர்ப்புக்காக இந்திரன் சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளார்.

**7. பேச்சு மொழியைத் தம் கவிதைகளில் வெளிப்படுத்திய மூன்று வகை கவிஞர்கள் யார்யார் என இந்திரன் தம் கட்டுரையில் சுட்டுகிறார்?**

- வால்ட் விட்மன்
- கவிஞர் மல்லார்மே
- பாப்லோ நெரூடா

**8. மொழி பற்றி எர்னஸ்ட் காசிரர் கூறும் கருத்துகள் யாவை?**

- மொழி என்ற ஒன்று பிறந்தவுடன் 'உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலை நிறுத்திக் கொள்கின்றன.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**9. மொழி வெளிப்பாட்டின் பகுதிகள் எவை?**

- கை, கால், அசைவுகள், முகத்தின் தசை நார் சுருக்க அபிநயங்கள் போன்றவை மொழி வெளிப்பாட்டின் கூறுகள் ஆகும்.

**10. இந்திரன் நடத்திய இதழ்கள் எவை?**

- வெளிச்சம், நுண்கலை

**11. வால்ட்விட்மன் எவ்வாறெல்லாம் விளங்கினார்?**

- கவிஞராகவும், இதழாளராகவும், கட்டுரையாளராகவும் விளங்கினார்.

**12. மானுடத்திற்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை யாது எனப் பாரதி கூறுகிறார்?**

- கவிதையினை இயன்ற வரை பேசுவதுபோல எழுதுவதுதான் உத்தமம்.
- மானுடத்திற்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை இதுவே ஆகும் எனப் பாரதி கூறுகிறார்.

**13. வால்ட் விட்மன் பற்றி சிறுகுறிப்பு வரைக?**

- வால்ட் விட்மன் அமெரிக்காவைச் சேர்ந்தவர்.
- கவிஞர், இதழாளர், கட்டுரையாளர், புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்.
- வால்ட் விட்மனின் 'புல்லின் இதழ்கள்' என்ற நூல் உலகப் புகழ் பெற்றது.

**14. ஸ்டெஃபான் மல்லார்மே பற்றி சிறு குறிப்பு வரைக?**

- ஸ்டெஃபான் மல்லார்மே பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர்.
- ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியவர்.
- ஸ்டெஃபான் மல்லார்மேவைப் புரிந்து கொள்வதன் மூலமே குறியீட்டியத்தையும் புரிந்து கொள்ள முடியும்.

**15. பாப்லோ நெரூடா பற்றி சிறு குறிப்பு வரைக?**

- தென் அமெரிக்காவிலுள்ள சிலி நாட்டில் பிறந்தவர்.
- இலத்தீன் அமெரிக்காவின் மிகச்சிறந்த கவிஞர்.
- தன்னுடைய கவிதைகளுக்காக 1971 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்.

**16. பேச்சுமொழி மற்றும் எழுத்து மொழியில் கவிதை செயல்படும் விதத்தை எழுதுக?**

- பேச்சுமொழியில் ஒரு கவிதை செய்யப்படுகிறபோது அஃது உடம்பின் மேல் தோல் போல் இயங்குகிறது.
- எழுத்து மொழியில் அதே சொற்கள் கவிதையின் உணர்வை, உணர்ச்சியற்ற ஆடைபோல் போர்த்தி மூடிவிடுகின்றன.

## சிறுவினா

**1. கவிஞனிடம் மொழி எப்படி மூவகை நிலையில் செயல்படுகிறது?**

- மொழி என்பது திரவநிலையில், கவிஞன் விரும்பும் வகையில் அவனிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்கிறது.
- எழுத்து மொழியாகப் பதிவு செய்யும் நிலையில் உறைந்துவிட்ட பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைந்து விடுகிறது.
- அச்சிடப்பட்ட ஒரு கவிதையாய் மாறும்போது, அம்மொழி கவிஞனிடமிருந்து பிரிந்து சென்று விட்ட பொருளாய் மாறிவிடுகிறது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

2. **பேச்சுமொழி பற்றி இந்திரன் கூறும் கருத்துகள் யாவை?**

- எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் உள்ளது.
- இலக்கிய வழக்கைக் கைவிட்டுப் பேச்சுமொழிக்குத் திரும்பியவுடனே கவிஞனுடைய கவிதையின் மொழி, அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறிவிடும்.
- ஆனால், எழுத்து மொழி அப்படியன்று. எழுதுவதை மட்டுமே மனிதனின் கை செய்கிறது.
- முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.
- அதனால்தான் பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

---

3. **தமிழின் கவிதையியல் நூலில் கா.சிவத்தம்பி கவிதையைப் பற்றிக் கூறுவனவற்றை எழுதுக?**

- ஒவ்வொரு மொழியிலும் தோன்றும் கவித்துவ வெளிப்பாடுகளை ஒன்றாக வைத்து நோக்கும் பொழுது கவிதைகள் கேட்போரால் / வாசகர்களால் உள்வாங்கப்பட்டு ரசிக்கப்பெறும் முறையில் காலத்துக்குக் காலம் அழுத்த வேறுபாடுகள் ஏற்படுவது வழக்கம்.
- கவிதை என்பது யாது; அது எவற்றைப் பற்றிப் பேசுதல் வேண்டும்; எப்பொழுது எந்த நிலையில் ஒரு கவிதையாக்கம் கவர்ச்சிகரமான கவிதையாக அமையும் என்பன பற்றி, அவற்றின் ஆக்கத்தில் ஈடுபடுவோருடைய கருத்து நிலைப்பாடுகள், கவிதை, கவிதையெனக் கொள்ளப்படுவதற்கான எடுத்துக்கூறல் முறைமைகள் ஆகியன யாவும் ஒருங்கு சேர்கின்ற பொழுதுதான் மேலே கூறிய கவித்துவ உணர்வுச் செவ்வியலிலே மாற்றம் தெரியவரும்.

---

## நெடுவினா

1. **பேச்சுமொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்களை இந்திரன் எத்தனை வகையாகப் பிரித்துள்ளார்? அவற்றை விளக்குக?**

- பேச்சுமொழியைக் கவிதையில் பயன்படுத்துபவர்களை இந்திரன் மூன்று வகையாகப் பிரித்துள்ளார்.
  - முதல் வகையினர்.
  - இரண்டாம் வகையினர்.
  - மூன்றாம் வகையினர்.
- **முதல் வகையினர்**
  - வால்ட் விட்மனைப் போன்றவர்கள் முதல் வகையினர்.
  - முதல் வகையினரின் கவிதைகளில் எந்தவொரு சொல்லும் மற்றொரு சொல்லைவிட முக்கியமானதாகி விடுவதில்லை.
  - எழுத்துகள் எப்படிச் சொற்களில் கரைந்து போகின்றனவோ அது போன்று சொற்கள் கவிதைகளில் கரைந்து போவதில்லை.
  - இக்கவிதைகள் இறுக்கிச் சுற்றப்பட்ட கம்பிச்சுருளைப் போன்று அல்லாமல் பேச்சுமொழிக்கே உரிய தளர்வோடு கட்டப்பட்டவை.
  - பலநேரங்களில் கவிதை என்பது நடனமாடிக் கொண்டிருப்பவன், அவ்வப்போது நடப்பதற்குத் தாவிவிடுவது போல வெறுமனே ஒரு பேச்சு என்ற நிலைக்கு நழுவி விடும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



➢ **இரண்டாம் வகையினர்**

- ❖ கவிஞர் மல்லார்மே போன்றவர்கள் இரண்டாம் வகையினர்.
- ❖ இரண்டாம் வகையினரின் கவிதைகள், எதிராளியை விளித்துப் பேசுவது போன்றது அன்று.
- ❖ மின்சார ரயிலின் நெருக்கத்தில் படியில் தொங்கிக் கொண்டு போகிற போது வெளியில் பரந்து கிடக்கும் தனிமையைச் சாட்சியாக வைத்துத் தங்களுக்குத் தாங்களே உதடு பிரித்துப் பேசிக் கொள்ளும் வகை.
- ❖ தனிப்பட்ட ஒவ்வொரு சொல்லும் பிறிதொன்றைப் பேசுவதோடு மட்டுமல்லாமல் தன்னையே பேசிக் கொள்கிறது.
- ❖ குறியீடுகளின் கூட்டம் ஒரு முனையிலும் மொழி மறுமுனையிலும் இருக்கையில் கவிதையின் பேச்சு, இடையில் இருக்கும் வெளியில் புழங்குகின்றது.
- ❖ குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று; நினைவு கூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.

➢ **மூன்றாம் வகையினர்**

- ❖ மூன்றாம் வகையினர் ஸ்பானிஷ் மொழிக் கவிஞராகிய பாப்லோ நெரூடா போன்றவர்கள்.
- ❖ மூன்றாம் வகையினரின் கவிதைகள் ஒரு பொருளைப் பற்றியது என்று தோன்றினாலும் அஃது அப்பொருளைப் பற்றியது அன்று.
- ❖ அது வாழ்க்கையின் வடிவமற்ற தன்மையைப் பற்றிப் பேசுகிறது.
- ❖ ஒரு வடிவம் கொள்ளுதல் என்பதை நோக்கி வாழ்க்கை தொடர்ந்து முயல்கிறபோதும் அதில் வெற்றி கொள்வதில்லை.
- ❖ எந்த வித முன் கூட்டிய திட்டமோ, ஒழுங்கமைதியோ இன்றி ஒன்றைச் சுட்டுவது போலக் காட்டி உடனே எதையும் சுட்டாமல் முடிந்து போகிறது.
- ❖ அறியப்பட்டிராததை நோக்கி நகர்கிற அதே நேரத்தில் நெரூடாவின் கவிதை விரிந்ததாகவும் மையத்தை நோக்கி நகர்வதாகவும் இருக்கிறது.

---

**கவிதைப்பேழை!** **நன்னூல் பாயிரம்** **- பவணந்தியார்**

## பலவுள் தெரிக

1. **தமிழின் முதல் இலக்கண நூல் எது?**
   அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்
   இ) யாப்பருங்கலகாரிகை ஈ) வீரசோழியம் **[அ) தொல்காப்பியம்]**

2. **நன்னூல் எத்தகைய நூல்?**
   அ) வழி நூல் ஆ) சார்பு நூல் இ) தழுவல் நூல் ஈ) மொழிபெயர்ப்பு நூல்
   **[அ) வழி நூல்]**

3. **நன்னூல் கூறும் இலக்கண வகைகள் எவை?**
   அ) எழுத்து, பொருள் ஆ) எழுத்து, சொல்
   இ) எழுத்து, சொல், பொருள் ஈ) எழுத்து, அணி **[ஆ) எழுத்து, சொல்]**

4. **பவணந்தியார் நன்னூலை யார் வேண்டுகோளுக்கு இணங்க பாடினார்?**
   அ) சீயகங்கன் என்ற சிற்றரசர் ஆ) தொல்காப்பியர்
   இ) சடையப்பர் ஈ) தொண்டைமான் என்ற சிற்றரசர்
   **[அ) சீயகங்கன் என்ற சிற்றரசர்]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

5. **'ஆடமைத்தோள்' இதில் அமை - எனும் சொல்லின் பொருள் யாது?**
அ) காற்று ஆ) தென்றல் இ) மூங்கில் ஈ) அமைத்தல் **[இ) மூங்கில்]**

6. **நன்னூலின் ஆசிரியர் யார்?**
அ) பவணந்தி முனிவர் ஆ) தொல்காப்பியர் இ) தண்டி ஈ) காரியாசான்
**[அ) பவணந்தி முனிவர்]**

7. **பவணந்தியாரின் ஊர்**
அ) மேட்டுப்புதூர் ஆ) சனகாபுரம் இ) கனகாபுரம் ஈ) மேல்புரம் **[இ) கனகாபுரம்]**

8. **பவணந்தியாரின் உருவச்சிற்பம் அமைந்துள்ள ஊர்**
அ) கனகாபுரம் ஆ) மேட்டுப்புதூர் இ) புதூர் ஈ) நாமக்கல் **[ஆ) மேட்டுப்புதூர்]**

9. **நன்னூலுக்கு உரை எழுதியவர்**
அ) விசாகப்பெருமாளையர் ஆ) பேராசிரியர்
இ) அரும்பதவுரைகாரர் ஈ) நச்சினார்க்கினியர் **[அ) விசாகப்பெருமாளையர்]**

10. **பொருத்தமில்லாத இணையைக் கண்டறி.**
அ) மாடங்கள் - ஓவியங்கள் ஆ) கரங்கள் - காவியங்கள்
இ) மகளிர் - அணிகலன் ஈ) நகரங்கள் - கோபுரங்கள் **[ஆ) கரங்கள் - காவியங்கள்]**

11. **'வைத்தார்' என்னும் சொல்லின் சரியான பகுபத உறுப்பிலக்கண முறை**
அ) வை+த்+தார் ஆ) வைத்து+ஆர் இ) வை+த்+த்+ஆர் ஈ) வை+த்(ந்)+த்+ஆர்
**[இ) வை+த்+த்+ஆர்]**

12. **'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்னும் விதிக்குரிய சொல்**
அ) தற்சிறப்பு ஆ) புனைந்துரை இ) அணிந்துரை ஈ) பொதுச்சிறப்பு
**[ஈ) பொதுச்சிறப்பு]**

## குறுவினா

1. **நூலின் பெருமையை அலங்கரித்துச் சொல்லுவது எது?**
   - அணிந்துரை, புனைந்துரை

2. **பாயிரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   - இரண்டு வகைப்படும்.
   - அவை பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் ஆகும்.

3. **பொதுப்பாயிரத்தின் வாயிலாக அறியப்படும் செய்திகள் யாவை?**
   - நூலின் இயல்பு
   - ஆசிரியரின் இயல்பு
   - கற்பிக்கும் முறை
   - மாணவர் இயல்பு
   - கற்கும் முறை
   - இந்த ஐந்து கருத்துகளும் பொதுப்பாயிரத்தின் வாயிலாக அறியப்படும் கருத்துகள் ஆகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**4. பாயிரத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?**

- முகவுரை
- பதிகம்
- அணிந்துரை
- புனைந்துரை
- நூல்முகம்
- புறவுரை
- தந்துரை

**5. அணிந்துரையை விளக்குக.**

- மாடங்களுக்கு (மாளிகை) ஓவியங்களும்
- நகரங்களுக்குக் கோபுரங்களும்
- அழகிய மகளிருக்கு அணிகலன்களும் அழகுதருவது போல
- எல்லாவகை நூல்களுக்கும் முகப்பில் அழகு தருவது அணிந்துரை ஆகும்.

**6. பவணந்தியாரின் உருவச் சிற்பம் எங்கே அமைக்கப்பட்டுள்ளது?**

- ஈரோடு மாவட்டம்
- மேட்டுப்புதூர் (சீனாபுரம் அருகில் - பெருந்துறையிலிருந்து கோபி செல்லும் வழி)

**7. நன்னூலில் உள்ள எழுத்ததிகார இயல்களை எழுதுக.**

- எழுத்தியல்
- பதவியல்
- உயிரீற்றுப்புணரியல்
- மெய்யீற்றுப் புணரியல்
- உருபு புணரியல்
- என ஐந்து இயல்களைக்கொண்டது எழுத்ததிகாரமாகும்.

**8. நன்னூலில் உள்ள சொல்லதிகார இயல்களை எழுதுக.**

- பெயரியல்
- வினையியல்
- பொதுவியல்
- இடையியல்
- உரியியல்
- என ஐந்து இயல்களைக் கொண்டது சொல்லதிகாரமாகும்.

**9. பாயிரம் என்றால் என்ன?**

- நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும் அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறைபற்றிப் பேசுவது பாயிரமாகும்.

**10. பாயிரம் அல்லது பனுவல் அன்றே - விளக்குக?**

- ஆயிரம் முகத்தைப் பெற்றது போன்று பல்வேறு துறைச் செய்திகளை விரிவாகக் கூறினாலும் பாயிரம் இல்லையேல் அது சிறந்த நூலாக மதிக்கப்படாது.

**11. நன்னூலை யாருடைய வேண்டுகோளுக்கு ஏற்ப பவணந்தி முனிவர் இயற்றினார்?**

- சீயகங்கன் என்ற சிற்றரசர் கேட்டுக் கொண்டதால் பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார் எனப் பாயிரம் குறிப்பிடுகிறது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## சிறுவினா

1. **சிறப்புப் பாயிரத்தால் அறியலாகும் செய்திகள் யாவை?**

   - நூலாசிரியர் பெயர்
   - நூல் பின்பற்றிய வழி
   - நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு
   - நூலின் பெயர்
   - தொகை, வகை, விரி ஆகியவற்றுள் இயற்றப்பட்ட யாப்பு வகை
   - நூலில் குறிப்பிடப்படும் கருத்து
   - நூலைக் கேட்போர் (மாணவர்)
   - நூலைக் கற்பதால் பெறுகின்ற பயன்
   - ஆகிய எட்டு செய்திகளைத் தெரிவிப்பது சிறப்புப் பாயிரமாகும்.

2. **நூல் ஒன்றின் முகவுரையில் இடம் பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?**

   - முகவுரை - நூலுக்கு முன் சொல்லப்படுவது
   - பதிகம் - ஐந்து பொதுவும் பதினொரு சிறப்புமாகிய பல்வகைப் பொருள்களையும் தொகுத்து சொல்வது.
   - அணிந்துரை - நூலுக்கு அழகு தருவது அணிந்துரை
   - புனைந்துரை - நூலின் பெருமை முதலியவை விளங்க அலங்கரித்துச் சொல்வது
   - நூன்முகம் - நூலுக்கு முகம்போல இருப்பது
   - புறவுரை - நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றை நூலின் புறத்திலே சொல்வது
   - தந்துரை - நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றைத் தந்து சொல்வது.

3. **பாயிரத்திற்குரிய ஏழு பெயர்களை விளக்குக?**

   - பாயிரத்திற்குரிய ஏழு பெயர்கள்: முகவுரை, பதிகம், அணிந்துரை, புனைந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை.
   - **முகவுரை**
     - ✓ நூலுக்கு முன் சொல்லப்படுவது.
   - **பதிகம்**
     - ✓ ஐந்து பொதுவும் பதினொரு சிறப்புமாகிய பலவகைப் பொருள்களையும் தொகுத்துச் சொல்வது.
   - **அணிந்துரை, புனைந்துரை**
     - ✓ நூலின் பெருமை முதலியவை விளங்க அலங்கரித்துச் சொல்வது.
   - **நூன்முகம்**
     - ✓ நூலுக்கு முகம் போல முற்பட்டிருப்பது.
   - **புறவுரை**
     - ✓ நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றை நூலின் புறத்திலே சொல்வது.
   - **தந்துரை**
     - ✓ நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றைத் தந்து சொல்வது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## விரிவானம் ஆறாம் திணை - அ. முத்துலிங்கம்

### பலவுள் தெரிக

1. அ.முத்துலிங்கம் இலங்கையில் எங்கு பிறந்தார்?
அ) யாழ்ப்பாணத்தில் ஆ) புங்குடுத்தீவில் இ) கொக்குவில் ஈ) லவுண்யா
[இ) கொக்குவில்]

2. அ.முத்துலிங்கம் இலங்கையில் தங்கி இருந்த இடத்தின் பெயர் எது?
அ) கண்டி ஆ) மவுண்லவினியா இ) புங்குடுத்தீவு ஈ) யாழ்பாணம்
[ஆ) மவுண்லவினியா]

3. ராபின்சன் குரூசோ - என்ற நூலின் ஆசிரியர் யார்?
அ) டேனியல் டிஃபோ ஆ) இந்திரன் இ) சாண்டில்யன் ஈ) டேனியல் டிகூசா
[அ) டேனியல் டிஃபோ]

4. கடல்புறா என்னும் நூலின் ஆசிரியர் யார்?
அ) அகிலன் ஆ) இந்திரன் இ) சாண்டில்யன் ஈ) புதுமைப்பித்தன்
[இ) சாண்டில்யன்]

5. ஓர் இனத்தை அழிப்பதற்கு அவர்கள் நூலை எரித்தால் போதும் - என்று குறிப்பிடும் நூல் எது?
அ) ஃபாரன்ஹீட் 451 ஆ) ஃபாரன்ஹீட் 461 இ) ஃபாரன்ஹீட் 541 ஈ) ஃபாரன்ஹீட் $100^{\circ}$
[அ) ஃபாரன்ஹீட் 451]

6. தமிழர் பாரம்பரிய நாள் எது?
அ) ஜனவரி 14 ஆ) பிப்ரவரி - 14 இ) நவம்பர் - 14 ஈ) டிசம்பர் 14 [அ) ஜனவரி 14]

7. உலகின் 2-வது பெரிய தேசம் எது?
அ) அமெரிக்கா ஆ) இந்தியா இ) கனடா ஈ) சீனா [இ) கனடா]

8. ஜி.யு.போப் பிறந்த நாடு எது?
அ) அமெரிக்கா ஆ) இந்தியா இ) கனடா ஈ) இத்தாலி [இ) கனடா]

9. உலகம் முழுவதும் எத்தனை கோடி தமிழர்கள் இருக்கிறார்கள்?
அ) 10 கோடி ஆ) 8 கோடி இ) 6 கோடி ஈ) 9 கோடி [ஆ) 8 கோடி]

10. சூரியன் மறையாத அரசு என அழைக்கப்பட்ட அரசு எது?
அ) கனடா ஆ) பிரிட்டன் (பிரித்தானியம்)
இ) இத்தாலி ஈ) நார்வே [ஆ) பிரிட்டன் (பிரித்தானியம்)]

11. அ.முத்துலிங்கத்தின் சிறுகதைத் தொகுப்பில் இலங்கை அரசின் சாகித்யப் பரிசினைப் பெற்ற நூல் எது?
அ) வடக்கு வீதி ஆ) வம்சவிருத்தி இ) மகாராஜாவின் ரயில் வண்டி ஈ) அக்கா
[ஆ) வம்சவிருத்தி]

12. ஆறாம் திணை எது?
அ) பனியும் - பனிசார்ந்த இடமும் ஆ) மணலும் மணல் சார்ந்த இடமும்
இ) காடும் காடு சார்ந்த இடமும் ஈ) மழையும் மழை சார்ந்த இடமும்
[அ) பனியும் - பனிசார்ந்த இடமும்]

13. அகதிகள் கூடத்தில் மதிய உணவிற்காக யாரைப்போல் நின்றதாக முத்துலிங்கம் கூறுகிறார்?
அ) மறியல் கைதிகள் ஆ) சிறை கைதிகள் இ) ஆயுள் கைதிகள் ஈ) தூக்குத்தண்டனை கைதிகள்
[அ) மறியல் கைதிகள்]



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



14. காகத்திற்குப் பறக்கும் எல்லை ______ தூரம்.
அ) 10 மைல் ஆ) 4 மைல் இ) 2 மைல் ஈ) 3 மைல் [இ) 2 மைல்]

15. கனடாவில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை
அ) 3 இலட்சம் ஆ) 7 இலட்சம் இ) 4 இலட்சம் ஈ) 5 இலட்சம் [அ) 3 இலட்சம்]

16. கொக்குவில் கிராமத்தில் காணப்பட்ட பறவைகள்
அ) ஆறுமணிக்குருவி - கழுகு ஆ) ஆறுமணிக்குருவி - வானம்பாடி
இ) ஆறுமணிக்குருவி - காகம் ஈ) ஆறுமணிக்குருவி - புறா
[இ) ஆறுமணிக்குருவி - காகம்]

17. பின்வருவனவற்றில் அ.முத்துலிங்கம் எழுதாத சிறுகதைத் தொகுப்பு
அ) சித்தன் போக்கு ஆ) திகடசக்கரம்
இ) அக்கா ஈ) மகாராஜாவின் ரயில்வண்டி [அ) சித்தன் போக்கு]

18. 1981-ஆம் ஆண்டு மே மாதம் 31-ஆம் நாள் தமிழரால் மறக்க இயலாத நிகழ்வு
அ) யாழ்ப்பாணம் போர் ஆ) அகதிகள் படுகொலை
இ) தமிழர் படுகொலை ஈ) நூல்கள் எரிப்பு [ஈ) நூல்கள் எரிப்பு]

19. புலம் பெயர்தல் சங்க இலக்கியத்தில் எவ்வாறு குறிப்பிடப்படுகிறது? - பொருள்வயின் பிரிவு
20. திருக்குறளையும், திருவாசகத்தையும் மொழிபெயர்த்தவர் யார்? - ஜி.யு.போப்
21. எதனைச் சாகடித்தால் மனிதன் செத்துவிடுவான்? - அறிவை
22. கனடாவில் எத்தனை லட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள்? - 3 இலட்சம்
23. தமிழர் திருநாளாக ஜனவரி 14 ஆம் நாளை எந்த ஆண்டு அறிவித்தார்கள்? - 2012
24. வன்னி வீதி எங்கு உள்ளது? - கனடாவில்
25. ஒவ்வொரு திணைக்கும் நூறு பாடல்களைக் கொண்ட நூல் எது? - ஐங்குறுநூறு
26. ஆறு மணிக்குருவி எவ்வளவு தூரம் வரை பறக்கும்? - எல்லையே கிடையாது
27. அக்கா, மகாராஜாவின் ரயில்வண்டி, திகடசக்கரம் - சிறுகதைகளின் ஆசிரியர் - அ.முத்துலிங்கம்

## இனிக்கும் இலக்கணம் மொழி முதல், இறுதி எழுத்துகள்

### பலவுள் தெரிக

1. இன்றைய வழக்கில் வராத அக்கால வழக்கில் இடம்பெற்றுள்ள இறுதி எழுத்துகள் யாவை?
அ) ம், ன், ய் ஆ) வ், ழ், ள் இ) ஞ், ந், வ் ஈ) ஞ், ண், ந் [இ) ஞ், ந், வ்]

2. இலக்கண வகையால் சொற்கள் எத்தனை வகைப்படும்?
அ) 3 ஆ) 6 இ) 2 ஈ) 4 [ஈ) 4]

3. சொல்லின் முதலில் வரும் குற்றியலுகரத்திற்கான சான்று எது?
அ) நெஞ்சு ஆ) நெடு இ) நேற்று ஈ) நுந்தை [ஈ) நுந்தை]

4. பின்வரும் சொற்களில் எது தமிழ்ச்சொல்லாகும்?
அ) றெக்கை ஆ) டப்பா இ) கோதை ஈ) ராக்கி [இ) கோதை]

5. 'ஙனம்' என்னும் சொல்தரும் பொருள் யாது?
அ) மன்றம் ஆ) மக்கள் இ) விவாதம் ஈ) விதம் [ஈ) விதம்]



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



6. **மொழி இறுதியில் வரும் தமிழ் எழுத்துகள் எத்தனை?**
அ) 12 ஆ) 24 இ) 18 ஈ) 22 [ஈ) 22]

7. **தவறான இணையைத் தெரிவு செய்க.**
அ) கயல் + விழி = பெயர் + பெயர் ஆ) தமிழ் + கற்றாள் = பெயர் + வினை
இ) படித்தான் + குமரன் = வினை + வினை ஈ) வந்தான் + குமரன் = வினை + பெயர்
**[இ) படித்தான் + குமரன் = வினை + வினை]**

## குறுவினா

1. **சுட்டெழுத்துகள் எத்தனை? அவை யாவை?**
   - சுட்டெழுத்துகள் மூன்று. அவை,
   - அ, இ, உ

2. **'ஙனம்' எனும் சொல் எவ்வெழுத்துகளுடன் இணைந்து வரும்?**
   - அ, இ, உ என்ற சுட்டெழுத்துகளுடனும்
   - எ, யா என்ற வினா எழுத்துகளுடனும் இணைந்து வரும்.
   - எ.கா.- அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம்

3. **உங்ஙனம் என்னும் தமிழ்ச்சொல்லைத் தற்போது பயன்படுத்தும் தமிழர்கள் யார்?**
   - எங்ஙனம் என்னும் தமிழ்ச்சொல்லைத் தற்போது பயன்படுத்தும் தமிழர்கள் இலங்கைத்தமிழர்கள்.

4. **புணர்ச்சி என்பது யாது?**
   - நிலைமொழியின் ஈற்றெழுத்தும், வருமொழியின் முதலெழுத்தும் சேர்வது புணர்ச்சி ஆகும்.

5. **குற்றியலுகரத்தின் ஆறுவகைகளையும் சான்றுடன் விளக்குக.**
   - நெடில் தொடர்க் குற்றியலுகரம் - வீடில்லை - வீடு + இல்லை
   - உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் - முரட்டுக்காளை - முரடு + காளை
   - வன் தொடர்க் குற்றியலுகரம் - அச்சுப்பலகை - அச்சு + பலகை
   - மென் தொடர்க் குற்றியலுகரம் - பஞ்சுபொதி - பஞ்சு + பொதி
   - இடைத்தொடர்க் குற்றியலுகரம் - மார்பு கூடு - மார்பு + கூடு
   - நெடில் தொடர்க் குற்றியலுகரம் - எஃகுகம்பி - எஃகு + கம்பி

6. **இலக்கண வகையில் சொற்கள் எத்தனை வகைப்படும்?**
   - இலக்கண வகையில் சொற்கள் நான்கு வகைப்படும்.
   - **அவை:** பெயர், வினை, இடை, உரி ஆகும்.

7. **உயிரீறு, மெய்யீறு - சான்றுடன் விளக்குக:**
   **எ.கா:** தீ + எரிந்தது
   - இதில் நிலைமொழி 'தீ' அதில் (த்+ஈ) - 'ஈ' என்னும் உயிர் உள்ளது. எனவே, இதை உயிரீறு என்பர்.
   **எ.கா:** அவள் + அழகி
   - இதில் நிலைமொழி 'அவள்' அதில் ஈற்றில் உள்ள எழுத்து 'ள்' என்னும் மெய்யாகும்.
   - எனவே, இதை 'மெய்யீறு' என்பர்.

8. **நிலைமொழி ஈறும், வருமொழி முதலும் புணர்வது எத்தனை வகைப்படும்? விளக்குக.**
   - நிலைமொழி ஈறும், வரும்மொழி முதலும் புணர்வது நான்கு வகைப்படும்.
     1. உயிர்முன் உயிர் - பிள்ளை + அழுதது (ள்+ஐ) + அழுதது → உயிர்முன் உயிர்
     2. உயிர்முன் மெய் - பிள்ளை + தமிழ் (ள்+ஐ) + தமிழ் (த்+உ) → உயிர்முன் மெய்
     3. மெய்முன் உயிர் - அவள் + அழகி (ள்) + அழகி → மெய்முன் உயிர்
     4. மெய்முன் மெய் - அவள் + சிரித்தாள் (ள்) + சிரித்தாள் (ச்+இ) → மெய்முன் மெய்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



9. **பெயரையும் வினையையும் சார்ந்து வரும் சொற்கள் எவை?**
   - பெயரையும் வினையையும் சார்ந்து வரும் சொற்கள் இடைச்சொற்கள் மற்றும் உரிச்சொற்களாகும்.
   - இடைச்சொற்களும், உரிச்சொற்களும் தனியே இயங்கா.

## மொழிப்பயிற்சி

### தமிழாக்கம் தருக.

1. **One flower makes no garland.**
   தனிமரம் தோப்பாகாது.
2. **Truth alone triumphs.**
   வாய்மையே வெல்லும்
3. **Time and tide wait for none.**
   ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்காது.
4. **Too much of anything is good for nothing.**
   அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
5. **Don't mourn for hire.**
   கூலிக்கு மாரடிக்காதே.
6. **Cast no your pearls before swine.**
   கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை.
7. **Depent not on quicksand.**
   மண்குதிரை நம்பி ஆற்றில் இறங்காதே.
8. **He who restrains his lips is wise.**
   நாவடக்கமுடையார்; ஞானமுடையார்
9. **Mercy surpasses justice.**
   நீதியை மிஞ்சுவது இரக்கம்
10. **The noisy floer catcheth no birds.**
    துள்ளுகின்ற மாடு பொதி சுமக்காது.

### பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க

| | |
|---|---|
| அசல் | - முதல் |
| கிஸ்தி | - வரி |
| சர்க்கார் | - அரசு |
| பந்தோபஸ்து | - பாதுகாவல் |
| தராசு | - துலாக்கோல் |
| தபால் | - அஞ்சல் |
| உருமால் | - மேலாடை |
| ஜல்தி | - விரைவாக |
| புகார் | - குறைகூறல் |
| கெஜம் | - மூன்றடி |
| பிரார்த்தனை | - நேர்த்திக்கடன் |
| வயது | - அகவை |
| ஜென்மம் | - பிறவி |
| ஜேஷ்டபுத்திரன் | - மூத்தமகன் |
| அவசரம் | - விரைவு |
| மிருகம் | - விலங்கு |
| ஜோதிடன் | - கணியன் |
| ஆசிர்வாதம் | - வாழ்த்து |
| சஷ்டியப்த பூர்த்தி | - அறுபதாம் ஆண்டு |
| கிரகம் | - கோள் |
| ரெக்கார்ட் | - ஆவணம் |
| ஃபைல் | - கோப்பு |
| செகரட்டரி | - செயலர் |
| பால்கனி | - முகப்பு மாடம் |
| புல்லிடின் | - பருவ வெளியீடு |
| செக் | - காசோலை |
| பாஸ்போர்ட் | - கடவுச்சீட்டு |
| இபிகிராப் | - கல்வெட்டு |
| விசா | - நுழைவு இசைவு |
| புரோட்டோகால் | - மரபுத்தகவு |




Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# இயல் 3 பீடு பெற நில்



## கற்றல் நோக்கங்கள்

- இலக்கியங்கள்வழி தமிழர் பண்பாட்டுக்கூறுகளை அறிந்து தமதாக்கிக் கொண்டு வாழ்தல்
- பண்புகளோடு இணைந்த வாழ்க்கையே மனிதம் என்பதை உணர்ந்து பின்பற்றுதல்
- வீட்டிலும் சமூகத்திலும் பின்பற்றப்படும் பண்பாட்டு நிகழ்வுகளைப் பொறுப்புடன் கடைப்பிடித்தல்
- சொற்களைப் பொருள்புரிந்து காலத்திற்கேற்பப் பயன்படுத்தும் திறன் பெறுதல்

## பாடப் பகுதி

மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு – ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப.

காவடிச்சிந்து – சென்னிகுளம் அண்ணாமலையார்

குறுந்தொகை – வெள்ளிவீதியார்

புறநானூறு – கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

வாடிவாசல் – சி.சு. செல்லப்பா

பகுபத உறுப்புகள்

திருக்குறள் – திருவள்ளுவர்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## புத்தகப் பயிற்சி வினாக்கள்

### இலக்கணத் தேர்ச்சிகொள் (பக்கம்.76)

**1. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?**

- பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும். அவை 1. பகுதி, 2. விகுதி, 3. இடைநிலை, 4. சந்தி, 5.சாரியை, 6. விகாரம்.

**2. காலம் காட்டும் இடைநிலைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.**

- ஒரு வினைப் பகுபதத்தில், பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வந்து, காலம் உணர்த்தும் உறுப்பு காலம் காட்டும் இடைநிலை ஆகும்.
- இறந்த கால இடைநிலை - த், ட், ற், இன் (வந்தான், கண்டான், சென்றான், எழுதினான்)
- நிகழ்கால இடைநிலைகள் - கிறு, கின்று, ஆநின்று (வருகிறார், வருகின்றார், வாராகின்றார்)
- எதிர்கால இடைநிலைகள் - ப், வ் (படிப்பான், தருவான்)

**3. பகுபதத்தில் சந்தி, சாரியை எவ்வெவ்விடங்களில் அமையும்?**

- **சந்தியானது** பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் அமையும்.
- அசைத்தான் - அசை + த் + த் + ஆன் (த் - சந்தி, த் - இடைநிலை)
- **சாரியை** ஆனது இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் அமையும்.
- பார்த்தனன் - பார் + த் + த் + அன் + அன் (த் - இடைநிலை, அன் - சாரியை, அன் - விகுதி)

**4. விகுதிகள் எவற்றை உணர்த்தும்?**

- விகுதிகள் திணை, பால், எண், இடம் ஆகியவற்றை உணர்த்தும்.

**5. பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

| | பகுதி | சந்தி | விகாரம் | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| அமைந்து | அமை | த் | ந் | த் | - | உ |
| பார்த்தான் | பார் | த் | - | த் | - | ஆன் |
| தோன்றி | தோன்று | - | - | - | - | இ |
| வருகிறார் | வா | - | வரு | கிறு | - | ஆர் |
| செய்க | செய் | - | - | - | - | க |
| நடந்தனன் | நட | த் | ந் | த் | அன் | அன் |
| கொடுத்த | கொடு | த் | - | த் | - | அ |

**6. பின்வருவனவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்க.**

அன் - வந்தனன் இன் - முறிந்தது கு - காண்குவன் அ - சென்றன **[இன் - முறிந்தது]**

**7. பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.**

பேசு / எழுது / வணங்கு — இன் / கிறு / வ் / ஆ — ஆன்

- பேசினான், எழுதினான், வணங்கினான்,
- பேசுகிறான், எழுதுகிறான், வணங்குகிறான்,
- பேசுவான், எழுதுவான், வணங்குவான்,
- பேசான், எழுதான், வணங்கான்




Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



8. **வேர்ச்சொல், எதிர்மறை இடைநிலை, விகுதி ஆகியவற்றைச் சேர்த்துச் சொற்களை உருவாக்குக.**




---

## நம்மை அளப்போம் (பக்கம்.77)

### பலவுள் தெரிக

1. **கூற்று :** ''கோடு'' என்பது தமிழ்ச்சொல் ஆகும்.

**விளக்கம் :** கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.

அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி

இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

**[ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி]**

2. **காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?**

அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

**[ஆ) அண்ணாமலையார்]**

3. **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1) வெள்ளி வீதியார் - அ. புறநானூறு

2) அண்ணாமலையார் - ஆ. சி.சு.செல்லப்பா

3) வாடிவாசல் - இ. குறுந்தொகை

4) இளம்பெருவழுதி - ஈ. காவடிச்சிந்து

i) அ ஆ இ ஈ ii) ஆ ஈ அ இ iii) இ ஈ ஆ அ iv) இ ஈ அ ஆ **[iii) இ ஈ ஆ அ]**

4. **''இனிதென'' - இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.**

அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

**[அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே]**

5. **பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?**

அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம் ஆ) பகுதி, இடைநிலை, சாரியை

இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, விகுதி **[ஈ) பகுதி, விகுதி]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## குறுவினா

**1. ''கோட்டை'' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?**

மலையாளம் - கோட்ட, கோடு
கன்னடம் - கோட்டே, கோண்டே
தெலுங்கு - கோட்ட
துளு - கோட்டே
தோடா - க்வாட், எனத் திராவிட மொழிகளில் எடுத்தாளப்பட்டுள்ளது.

**2. காவடிச்சிந்து என்பது யாது?**

- தமிழ்நாட்டில் பண்டைக் காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசைமரபே காவடிச்சிந்து எனலாம்.
- முருகப்பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் காவடிகளில் கொண்டு செல்வோர், ஆடல் பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர்.
- அவர்களின் வழிநடைப்பாடல் வகைகளிலிருந்து காவடிச்சிந்து என்ற பாவடிவம் தோன்றியது.

**3. குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?**

- அகத்திணை சார்ந்த 401 பாடல்களை உடையது. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- 'நல்ல குறுந்தொகை' என்னும் அடைமொழியைக் கொண்டது.
- உரையாசிரியர்களால் அதிகமாக மேற்கோள்களாக எடுத்தாளப்பட்டுள்ளன.
- தொகை நூலில் இதுவே முதல் நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளது எனக் கருதப்படுகிறது.
- இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ.
- இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார்.

**4. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது? (மார்ச்.2019,20)**

- புகழ் வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பர்.
- பழி வரும் என்றால் உலகம் முழுவதும் கிடைத்தாலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்

## சிறுவினா

**1. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.**

- திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள். மனித சமூகத்தின் ஆதிநிலம் மலை.
- திராவிடர்களை, 'மலைநில மனிதர்கள்' என்று அழைக்கிறார் கமில் சுவலபில்
- ''சேயோன் மேய மைவரை உலகம்'' - என்று தொல்காப்பியம் உரைக்கிறது.
- ''விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ'' என்று திருமுருகாற்றுப்படை உரைக்கிறது.
- மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடல்கள் தமிழரின் கடவுளையும் மலையையும் தொடர்பு படுத்திய பதிவுகளாகும்.
- கடையெழு வள்ளல்களும் மலைப்பகுதிகளின் தலைவர்களாகத் திகழ்ந்தவர்கள்.
- தமிழ்நாட்டில் மட்டும் 'மலை' என்ற சொல் 17 இடப்பெயர்களில் முன்னொட்டாகவும், 84 இடங்களில் பின்னொட்டாகவும் இடம்பெற்றுள்ளன.
- இவ்வாறு மலையானது அன்றும் இன்றும் மனிதவாழ்வில் சிறப்பிடம் பெற்றுத்திகழ்கிறது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**2. தமிழ் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.**

- காவடி தமிழர் பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்கிறது.
- உலகெங்கும் வாழும் தமிழர்கள் குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில், காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது.
- வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் கொண்டு செல்வோர் வழிநடைப் பாடலாகப் பாடும் பாடல்வகைக்குக் காவடிச்சிந்து என்று பெயர்.

---

**3. பகுபத உறுப்பிலக்கணம் கூறுக.**

**அ) வருகின்றாள் - வா (வரு) + கின்று + ஆள்**

**வா** - பகுதி (வரு - விகாரம்)
**கின்று** - நிகழ்கால இடைநிலை
**ஆள்** - பெண்பால் வினைமுற்று விகுதி

**ஆ) வாழ்வான் - வாழ் + வ் + ஆன்**

**வாழ்** - பகுதி
**வ்** - எதிர்கால இடைநிலை
**ஆன்** - ஆண்பால் வினைமுற்று விகுதி

**இ) காண்பிப்பார் - காண்பி + ப் + ப் + ஆர்**

**காண்பி** - பகுதி
**ப்** - சந்தி
**ப்** - எதிர்கால இடைநிலை
**ஆர்** - பலர்பால் வினைமுற்று விகுதி

**ஈ) பிரிந்த - பிரி + த்(ந்) + த் + அ**

**பிரி** - பகுதி
**த்** - சந்தி (ந் விகாரம்)
**த்** - இறந்தகால இடைநிலை
**அ** - பெயரெச்ச விகுதி

---

**4. சங்க காலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு வெள்ளிவீதியார் பாடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது; இக்காலச் சமூக நிகழ்வுகள் எழுத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை ஒப்பிட்டு விளக்குக.**

**சங்ககால நிகழ்வு:**

- மணம் முடிக்க வரும் தலைவன் பெரியோர் முன்னிலையில் தன் பரிசுப்பொருள்களை வைத்து அவர்களிடம் சம்மதம் பெறுதல்
- தலைவன் கொண்டு வந்த பொருட்களைக் கண்டு நிறைவு அடைந்த பின் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க முன்வருகிறார்கள்.
- இக்கருத்துகள் வெள்ளி வீதியார் பாடிய குறுந்தொகை வாயிலாக நாம் அறிகிறோம்.

**இக்கால நிகழ்வு:**

- மாப்பிள்ளை வீட்டார் பெண்ணை மணம் முடிக்க வாய் கூசாமல் பொருட்களைக் கேட்டல்.
- பெண் வீட்டார் அவர்கள் கேட்ட பொருள்களைக் கொடுத்து, அவர்கள் நிறைவு அடைந்த பின் மணமகன் வீட்டார் மணமுடிக்கச் சம்மதம் தெரிவிப்பர்.
- மாப்பிள்ளை பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்காகப் பொருளைப் பெற்றுக்கொண்டு திருமணம் செய்து கொண்டு, பெண்ணை அழைத்துச் செல்வர்.
- சங்ககால வழக்கம் வியப்புக்குரியது, தற்கால வழக்கம் இழிவுக்குரியது.

---

**5. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.**

**புறநானூறு:**

- ‘‘உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
‘‘புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்’’



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**திருக்குறள்:**

- விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
  மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று
- கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
  தூக்கங் கடிந்து செயல்
- வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
  வாழ்வாரே வாழா தவர்.
- பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃதுஇன்றேல்
  மண்புக்கு மாய்வது மண்.
- அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
  அஞ்சல் அறிவார் தொழில்.

## நெடுவினா

1. **இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க.**

இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - என்னும் கூற்றை இக்கட்டுரை மூலம் மெய்ப்பிக்கலாம்.

**மலையும், மலைக்குடியிருப்புகளும்:**

- மலை மனித சமூகத்தின் ஆதிநிலம். மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி என்று தமிழ் இலக்கியம் பாடியது. திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள். திராவிடர்களை 'மலைநில மனிதர்கள்' என்று கமில்சுவலபில் அழைக்கிறார்.
- 'சேயோன் மேய மைவரை உலகம்' என்று உரைக்கிறது தொல்காப்பியம். 'விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ' என்கிறது திருமுருகாற்றுப்படை.
- பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் கடையெழு வள்ளல்கள் எழுவருமே மலைப்பகுதிகளின் தலைவர்களாகவே விளங்கியுள்ளனர்.
- திராவிட மலைவாழ் மக்களின் குடியிருப்புகள், அப்பழங்குடியினருடைய மலை சார்ந்த வாழ்வியலின் சமூக சமயக் கூறுபாடுகள் குறித்த புரிதலைத் தருகின்றன.
- நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள். எனவே அவற்றைச் சுற்றி உயர்ந்த மதிற்சுவர்களை அமைத்திருந்தனர். அவர்களின் வீடுகளில் திண்டுகள் (மேடைகள்) முக்கிய இடம் பெறுகின்றன.
- குறும்பர் மொழியில் தாழ்வாரத்தைக் குறிக்கும் 'மெட்டு' என்ற சொல் அதன் உயரமான மேடான அமைப்பை விளக்குகின்றது.

**மலை - குன்று - வரை:**

- தமிழில் குறிஞ்சி நிலம் தொடர்பான சொற்களில் 'மலை' என்பது 'உயரமானது' என்றும், 'குன்று' என்பது 'உயரம் குறைவானது' என்றும் பொருள்படுவன.
- 'வரை' என்னும் சொல் தமிழ்மொழியில் கோடு, மலை, சிகரம், விளிம்பு, கரை, எல்லை, நுனி போன்ற பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது.

**கோட்டை - கோடு:**

- ❖ தமிழ்மொழியில் 'கோட்டை' என்ற சொல், காவல் மிகுந்த காப்பரண் கொண்ட மதில் சுவர்களால் சூழப்பட்ட கட்டமைப்பைக் குறிக்கிறது. 'கோடு' என்ற சொல்லுக்கு மலையுச்சி, சிகரம் என்ற பொருளோடு வல்லரண், கோட்டை என்ற பொருள்களும் உண்டு. இதைப்போலவே 'கோடை' என்ற தமிழ்ச்சொல் 'மலை' என்னும் பொருளில் வழங்குவதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.
- ❖ திராவிடர்களின் மலைப்பெருமிதத்தின் நீட்சியாக விளங்கும் இடப்பெயர்கள் வடமேற்கு நாடுகளிலும் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாறு தமிழர்கள் வாழ்வில் மலைகள் பெறும் சிறப்புக் குறிப்பிடத்தக்கது.

---

2. **காவடிச்சிந்து ஒரு வழிநடைப்பாடல் - இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க.**

(மார்ச்.2019)

வழிநடைப் பாடலாகக் காவடிச்சிந்து உள்ளது என்பதை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்வோம்.

**காவடிச்சிந்தின் தந்தை:**

19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் சென்னிகுளம் அண்ணாமலையார். இவர் பாடிய காவடிச்சிந்து அருணகிரியாரின் திருப்புகழ்த் தாக்கத்தால் விளைந்த சிறந்த சந்த இலக்கியமாகும். இப்பாடலின் மெட்டு அண்ணாமலையாராலேயே அமைக்கப்பட்டது. தமிழில் முதன்முதலில் வண்ணச்சிந்து பாடியதால் 'காவடிச் சிந்தின் தந்தை' என்று இவர் அழைக்கப்பட்டார்.

**காவடியாட்டம்:**

தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று காவடி. உலகெங்கும் வாழும் தமிழர்கள் குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில் காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது. காவடியைத் தூக்கிச் செல்பவர்கள் அதனைச் சுமையாக எண்ணாமல் பாடியவாறே செல்வதற்கு வழிநடைப் பாடல்களாக காவடிச்சிந்து அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**காவடிச்சிந்து:**

தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசை மரபே காவடிச்சிந்து எனலாம். முருகப்பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் கொண்டுசெல்வோர், ஆடல் பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர். அவர்களின் வழிநடைப் பாடல் வகைகளிலிருந்து 'காவடிச்சிந்து' என்னும் பாவடிவம் தோன்றிது.

**கழுகுமலை முருகன்:**

கழுகுமலை முருகன் கோவில் சிறப்பு, அடியார்கள் பாடும் திருப்புகழ் முழக்கம், முருகன் அருள் புரியும் திறம், பக்தர்களின் காவடி வழிபாடு ஆகியவற்றைத் தம் பாடலில் அண்ணாமலையார் சிறப்பித்துக் கூறுகிறார்.

இவ்வாறு வழிநடைக் களைப்பின்றி, முருகனுடைய நல்லருளைப் பெற வழிகாட்டுவதாக, அண்ணாமலையாருடைய காவடிச்சிந்து அமைந்துள்ளது.

---

3. **வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.** (மார்ச்.20)

'வாடிவாசல்' கதை வாயிலாக நான் உணர்ந்த கருத்துக்களைக் கீழே கட்டுரை வடிவில் காண்போம்.

**முன்னுரை:**

அமரர். சி.சு.செல்லப்பா அவர்கள் எழுதிய குறும்புதினம் 'வாடிவாசல்'. 'கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும் புல்லாளே, ஆயமகள்' என்னும் கலித்தொகை வரிகளின் கதை வடிவமே 'வாடிவாசல்'.

**வாடிவாசல்:**

ஒத்தைக்கு ஒத்தையாகக் கோதாவில் இறங்கும் மிருகத்துக்கும் மனுசனுக்கும் நடக்கும் விவகாரத்துக்கு இரண்டிலொரு முடிவு காணும் இடம் வாடிவாசல். அந்த வாடிவாசலில் மனுஷ ரத்தம் சிந்தலாம்; காளை உடலில் ஒரு சொட்டு ரத்தம் காணக்கூடாது. எதன் கை ஓங்குதோ அதுதான் தூக்கும். மனுஷன் இதை விளையாட்டாக நினைத்தாலும் மிருகத்துக்கு அது விளையாட்டன்று. அதுதான் ஜல்லிக்கட்டு.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**ஜல்லிக்கட்டு:**

ஜல்லிக்கட்டு ஒரு வீர நாடகம். அது விளையாட்டும் கூட. புயவலு, தொழில்நுட்பம், சாமர்த்தியம் எல்லாம் அதற்கு வேண்டும். தான் போராடுவது மனிதனுடன் அல்ல, ரோஷமூட்டப்பட்ட ஒரு மிருகத்துடன் என்பதை நினைவில் கொண்டு வாடிவாசலில் நிற்க வேண்டும், மாடு அணைபவன். அந்த இடத்தில் மரணம்தான் மனிதனுக்குக் காத்துக் கொண்டிருக்கும். காளைக்குத் தன்னோடு மனுஷன் விளையாடுகிறான் என்று தெரியாது. அதற்கு விளையாட்டிலும் அக்கறை இல்லை.

**ஆதிக்க எதிர்ப்பு:**

அதிகாரம், சாதி ஆதிக்கம் ஆகியவற்றின் மீதான எதிர்ப்புச் சலனங்கள் வெளிப்படும் இடமாகவும் ஜல்லிக்கட்டுக்களம் இருக்கிறது. இது போர்க்களம். போரின்போது வெளிப்படும் எல்லா வகையான முகங்களையும் இங்கே காணமுடிகிறது. ஜல்லிக்கட்டு என்பதே இங்கு ஓர் எதிர்ப்பின் வடிவமாக மாறிவிடுகிறது.

அதனை மையமாக வைத்துப் புனையப்பட்ட இந்தக் கதையில் ஜல்லிக்கட்டு பற்றிய வர்ணனை தத்ரூபமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. நுட்பமாகவும் கூட. ஒரு குறிப்பிட்ட வட்டாரத்துப் பேச்சு வழக்கிலேயே முழுக்க முழுக்க எழுதப்பட்டுள்ளது. படிக்கும்போது இக்கதை சிலிர்ப்பை ஏற்படுத்துகிறது.

## மொழியை ஆள்வோம் (பக்கம் – 78)

### சான்றோர் சித்திரம்



'தமிழ்ப் பதிப்புலகின் தலைமகன்' என்று போற்றப்படும் சி.வை.தாமோதரனார் இலங்கை, யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். தமிழ்நாட்டுக்கு வருகைபுரிந்து, தம் இருபதாவது வயதிலேயே 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூலை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டு, அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்தார். 1868-ஆம் ஆண்டு, தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் உரையையும் பின்னர் கலித்தொகை, இறையனார் அகப்பொருள், வீரசோழியம் உள்ளிட்ட பல நூல்களையும் செம்மையாகப் பதிப்பித்துப் புகழ்கொண்டார். அத்துடன் நில்லாது, கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். ஆறாம் வாசகப் புத்தகம் உள்ளிட்ட பள்ளிப்பாடநூல்களையும் எழுதினார்.

அவருடைய தமிழ்ப்பணியைக் கண்ட பெர்சிவல் பாதிரியார், அவரைத் தாம் நடத்திய 'தினவர்த்தமானி' என்னும் இதழுக்கு ஆசிரியராக்கினார். அவ்வமயம் அவர் ஆங்கிலேயர் பலருக்கும் தமிழ் கற்றுத் தந்தார். அரசாங்கத்தாரால், சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பட்டார். பிறகு, பி.எல்.தேர்விலும் தேர்ச்சி பெற்று, கும்பகோணத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி, 1884-ஆம் ஆண்டில் புதுக்கோட்டை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். தாமோதரனார் எந்தப் பணி ஆற்றினாலும் தமது சொந்தப் பணியாகக் கருதிக் கடமையாற்றினார்.

1. **மாநிலக்கல்லூரி – புணர்ச்சி விதி கூறுக.**
   - மாநிலக்கல்லூரி - மாநிலம் + கல்லூரி
   - ''மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்'' (மாநில + கல்லூரி)
   - ''இயல்பினும் விதியினும்நின்ற உயிர்முன் கசதப மிகும்'' (மாநிலக்கல்லூரி)

2. **ஆசிரியராக்கினார் – இதன் பகுதி**

அ) ஆசு ஆ) ஆசிரி இ) ஆசிரியராக்கு ஈ) ஆசி **[அ) ஆசு]**

3. **சிறு சிறு தொடர்களாக மாற்றி எழுதுக.**

தாமோதரனார் நீதிநெறி விளக்கம் என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட்டுக் கலித்தொகை வீரசோழியம் உள்ளிட்ட நூல்களைப் பதிப்பித்துக் கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை சூளாமணி வசனம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

- தாமோதரனார் நீதிநெறி விளக்கம் என்ற நூலைப் பதிப்பித்தார்.
- தாமோதரனார் அந்நூலைத் தாமே வெளியிட்டார்.
- அவர் கலித்தொகை, வீரசோழியம் போன்ற நூல்களையும் பதிப்பித்துள்ளார்.
- தாமோதரனார் கட்டளைக் கலித்துறை, நட்சத்திரமாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

4. **பெரும்புகழ் - இலக்கணக்குறிப்புத் தருக.**

பெரும்புகழ் - பண்புத்தொகை

5. **கல்லூரி, உயர்நீதிமன்றம், வரலாறு, பணி ஆகியவற்றிற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுதுக.**

College, Highcourt, History, Job / Work

## வல்லினமெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

1. **குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.**

குமரனைப் பற்றித் தெரிந்து_கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகை_தாருங்கள். என் வீட்டிற்குப் பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

2. **அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.** (மார்ச்.20)

அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே_பெண்களும் அரசுப் பணியைப் பெறவேண்டும்.

3. **கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.**

கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மை_ தீமைகளைப் புரிந்து பேசுவர்.

4. **தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.**

தமிழர் ஆற்றுத் தண்ணீரைத் தேக்கிச் சேமித்துக் கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

5. **சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.**

சான்றோர் மிகுந்த_ பொறுப்புடன் சிறப்பான சேவை புரிந்து கொள்கையை நிலைநாட்டச் செய்தனர்.

## தமிழாக்கம் தருக.

1. **Education is the most powerful weapon, which you can use to change the world.**

கல்வி ஓர் ஆற்றல் வாய்ந்த கருவி, அதைக் கொண்டு உலகை மாற்றலாம்.

2. **Looking at beauty in the world is the first step of purifying the mind.**

இயற்கை அழகை ரசிப்பது மனதைத் தூய்மைப்படுத்துவதற்கான முதல் படியாகும்.

3. **Culture does not make people. People make culture.** (மார்ச்.19)

கலாச்சாரம் மக்களை உருவாக்கவில்லை, மக்கள் கலாச்சாரத்தை உருவாக்குகிறார்கள்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



4. **A People without the knowledge of their past history and culture is like a tree without roots.**

கடந்த கால வரலாறு மற்றும் நாகரிகம் குறித்த அறிவைப் பெறாத மக்கள், வேரில்லாத மரத்திற்கு ஒப்பாவர்.

5. **A nation's culture resides in the hearts and in the soul of its people.**

ஒரு நாட்டின் கலாச்சாரம் அந்த மக்களின் மனதிலும், ஆன்மாவிலும் இருக்கிறது.

## கீழ்க்காணும் செய்தியைப் படித்து அறிவிப்புப் பதாகை ஒன்றை உருவாக்குக.

### தமிழ்ப்பண்பாட்டுக் கருத்தரங்கு

| | |
|---|---|
| ஜனவரி - 10, மதுரை. தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புக் குறித்தும், பண்பாடு குறித்தான தேடலின் தேவை குறித்தும் சிறகுகள் சமூக அமைப்பின் சார்பாக ஒருநாள் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. | மதுரையை மையமாகக் கொண்டு இயங்கி வரும் சமூகநல அமைப்பான சிறகுகள் சார்பில் ஒருநாள் கருத்தரங்கம் தெப்பக்குளம் அருகில், பாரதி கலைக்கூட அரங்கில் ஜனவரி 13-ஆம் நாள் நடைபெற உள்ளது. இதில் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புக் குறித்தும் தொலைத்த பண்பாட்டை மீட்டெடுப்பது குறித்தும் ''பண்பாடுகளால் வாழும் தமிழர்'' என்னும் தலைப்பில் சமூக ஆர்வலரும் கவிஞருமான அன்பரசி பேசவிருக்கிறார். இதன் இறுதிப்பகுதியாகக் கலந்துரையாடலும் நடைபெற இருக்கிறது. விருப்பம் உள்ள சமூக ஆர்வலர்கள், கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள் கலந்து கொள்ளலாம் என்று சிறகுகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான இனியன் தெரிவித்துள்ளார். |

### தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்கு

**நாள்** : 13.01.2018
**இடம்** : பாரதி கலைக்கூடம் (மதுரை தெப்பக்குளம் அருகில்)
**சிறப்புரை** : கவிஞர் அன்பரசி, சமூக ஆர்வலர்
**தலைப்பு** : பண்பாடுகளால் வாழும் தமிழர்
**குறிப்பு** : பங்கேற்போர் கலந்துரையாடலும் உண்டு.

அனைவரும் வருக! பங்கேற்று மகிழ்க!

இனியன்,
ஒருங்கிணைப்பார், சிறகுகள் அமைப்பு.

## மொழியோடு விளையாடு (பக்கம் – 79)

## கட்டுரை எழுதுக.

**''பண்பாட்டைப் பாதுகாப்போம்**
**பகுத்தறிவு போற்றுவோம்'' - என்னும் பொருள்பட ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுக.**

**முன்னுரை:**

''பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்'' ஆம்! பண்புடையவர்களால்தான் இவ்வுலகம் இன்றளவும் நிலைத்து நிற்கிறது. உலகில் இறைவனால் படைக்கப்பட்ட ஒவ்வொரு உயிரினத்திற்கும் தனிப்பட்ட பண்பு உண்டு. இதில் மனிதப்பிறவி என்பது மிகவும் மகத்தான பிறவி ஆகும். தகுந்தது இது தகாதது இது, என அறியும் ஆறாவது அறிவினை இறைவன் நமக்குப் படைத்தளித்துள்ளான். இவ்வறிவால் பண்பாளராக வாழ்வது மனிதர் ஒவ்வொருவரின் தலையாய கடமை ஆகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**சுதந்திரம் எனும் பெயரில்:**

இன்று நாம் பண்பாட்டுடன் திகழ்கிறோமா? என்றால், வினாவிற்கு விடை இல்லாமல் திணறத்தான் வேண்டும். ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் உண்டு என்ற காரணத்தால், எதற்கும் அச்சப்படாமல், மனிதன் என்பதை மறந்து, மனித நேயத்தைத் துறந்து, 'தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன்' என்பது போல் பண்பற்ற செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம்.

**ஏன் என்ற கேள்வி:**

ஏன் என்ற கேள்வி, அறிவை வளர்க்கும் என்றார்கள். ஆனால் இன்று, பண்பை, கலாச்சாரத்தைப் பேணுதல் அவசியம் என்றால், ஏன்? இதனால் என்ன? என்ற தேவையற்ற விவாதங்கள் நம் நடை, உடை, நாகரிக கலாச்சார மாற்றத்தை உருவாக்கி பண்பாட்டைச் சீரழித்து, பாரதத்திற்கே கேடு விளைவிக்கிறது.

**பகுத்தறிவால் பண்பாட்டைக் காப்போம்:**

முன்னோர் மொழிந்ததைக் கண் மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கூறவுமில்லை. கண்டிப்பாக கைவிடுங்கள் என்றும் கூறவில்லை.

**''எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு''**

என்பதற்கு ஏற்ப, உண்மையை உணருங்கள். மூத்தோர் வார்த்தையைக் கடைப்பிடியுங்கள், அன்பும் பாசமும் உடையவர்களாகத் திகழுங்கள். ஒவ்வொரு நொடிப்பொழுதும் மனித நேயத்துடன் வாழுங்கள். பண்பாடு தானாக உருவெடுக்கும்.

**முடிவுரை:**

''கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய்'' வாழ்ந்தது போதும். மனிதனுக்கே உண்டான பண்பை உணர்ந்து, சாதி, மத, பேதத்தைக் களைந்து, வெறுப்பு, பகை, கோபத்தை விரட்டி, நாகரிகம் எனும் பெயரால் சகதியில் விழாமல் நம் பண்பாட்டைப் பாதுகாப்போமாக!

## சித்திரக்கவி

**மாலைமாற்று**






**தேரு வருதே நீ வா பாப்பா**
**பாப்பா வா நீ தேரு வருதே**

**நீ விகடகவி**
**விகடகவி நீ**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| இனக்குழு | - Ethnic Group | பின்னொட்டு | - Suffix |
| முன்னொட்டு | - Prefix | வேர்ச்சொல் அகராதி | - Etymological Dictionary |
| புவிச்சூழல் | - Earth Environment | பண்பாட்டுக் கூறுகள் | - Cultural Elements |

## காவடிச்சிந்து

### இலக்கணக்குறிப்பு

**தாவி** - வினையெச்சம்

**மாதே** - விளி

### பகுபத உறுப்பிலக்கணம்

**வருகின்ற - வா (வரு) + கின்று + அ**

**வா** - பகுதி, வரு எனத் திரிந்தது விகாரம்

**கின்று** - நிகழ்கால இடைநிலை

**அ** - பெயரெச்ச விகுதி

### புணர்ச்சி விதி

**திருப்புகழ் - திரு + புகழ்**

- இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும் = திருப்புகழ்

**உயர்ந்தோங்கும்- உயர்ந்து + ஓங்கும்**

- உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் = உயர்ந்த் + ஓங்கும்
- உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே = உயர்ந்தோங்கும்.

## குறுந்தொகை

### இலக்கணக்குறிப்பு

பிரிந்தோர் - வினையாலணையும் பெயர்

நன்றுநன்று - அடுக்குத்தொடர்

### பகுபத உறுப்பிலக்கணம்

**பிரிந்தோர் - பிரி + த் (ந்) + த் + ஓர்**

**பிரி** - பகுதி

**த்** - சந்தி 'ந்' ஆனது விகாரம்

**த்** - இறந்தகால இடைநிலை

**ஓர்** - பலர்பால் வினைமுற்று விகுதி

### புணர்ச்சி விதி

**தண்டுடை - தண்டு + உடை (மார்ச்.20)**

- ➢ உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் = தண்ட் + உடை
- ➢ உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = தண்டுடை



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## புறநானூறு

**இலக்கணக்குறிப்பு**

1. **அம்ம** - அசைநிலை
2. **உண்டல், துஞ்சல்** - தொழிற்பெயர்
3. **முயலா** - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
4. **பெரும்புகழ்** - பண்புத்தொகை

**பகுபத உறுப்பிலக்கணம்**

1. **துஞ்சல் - துஞ்சு + அல்**

   **துஞ்சு** - பகுதி

   **அல்** - தொழிற்பெயர் விகுதி

2. **முனிவிலர் - முனி + வ் + இல் + அர்**

   **முனி** - பகுதி

   **வ்** - உடம்படுமெய் சந்தி

   **இல்** - எதிர்மறை இடைநிலை

   **அர்** - பலர்பால் வினைமுற்று விகுதி

**புணர்ச்சி விதி**

**இயைவதாயினும் - இயைவது + ஆயினும்**

- உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் = இயைவத் + ஆயினும்
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = இயைவதாயினும்

**புகழெனின் - புகழ் + எனின்**

- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = புகழெனின்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



வாழ்வியல்

# இயல் 3

# திருக்குறள்



## கற்பவை கற்றபின் – 87

1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.

அ) வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

ஆ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.



**[இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



2. **துன்பப்படுபவர்-----**

அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்

இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர் **[ஈ) நாவைக் காக்காதவர்]**

---

3. **பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

**மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்**
**தலைமிசைக் கொண்ட குடையர் - நிலமிசைத்**
**துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்**
**எஞ்சினார் இவ்வுலகத் தில்**

அ) ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்

ஆ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு

இ) அளவறிந்து வாழதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

**[ஆ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு]**

---

4. **கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.**

பூக்களுக்கும் முட்களுக்கும் இடையில்
புழங்குகிறது யோசனை
பாசத்துக்கும் நியாயத்துக்கும் நடுவில்
நசுங்குகிறது அறம்
இன்பத்துக்கும் பேராசைக்கும் நடக்கும்
போராட்டத்தில் வெடிக்கின்றன
வெளியில் குண்டுகளும்
வீட்டில் சண்டைகளும்
ஆசை அறுத்தல் எளிதல்ல!
முயன்று பார்க்கலாம் வா!

அ) அருவினை யென்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

ஆ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

இ) இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்

**[இ) இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்**
**துன்பத்துள் துன்பம் கெடின்]**

---

5. **ஒப்புரவு என்பதன் பொருள் -----**

அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது

இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது **[இ) ஊருக்கு உதவுவது]**

---



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



6. **பொருத்துக.**

அ) வாழ்பவன் - 1.காத்திருப்பவன்
ஆ) வாழாதவன் - 2. மருந்தாகும் மரமானவன்
இ) தோன்றுபவன் - 3. ஒத்ததறிபவன்
ஈ) வெல்ல நினைப்பவன் - 4. புகழ் தரும் பண்புடையவன்
உ) பெரும் பண்புடையவன் - 5. இசையொழித்தவன்
- 6. வீழ்பவன்

அ) 3 5 4 1 2 ஆ) 1 2 3 4 5 இ) 4 5 2 3 1 ஈ) 5 2 1 4 3 **[அ) 3 5 4 1 2]**

---

7. **இலக்கணக்குறிப்பு தருக.**

**அ) சுடச்சுடரும்** - மூன்றாம் வேற்றுமைத் தொகை (சுடுவதால் சுடரும்)
**ஆ) சுடச்சுடரும் பொன்** - பெயரெச்சத் தொடர் (சுடரும் பொன் - வினைத்தொகை)
**இ) சுடச்சுட** - அடுக்குத்தொடர்

---

8. **விரைந்து கெடுபவன் யார்?**

அ) பிறருடன் ஒத்துப்போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைப்பவன்
ஆ) பிறருடன் ஒத்துப்போதாவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்
இ) பிறருடன் ஒத்துப்போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்
ஈ) பிறருடன் ஒத்துப்போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

**[ஈ) பிறருடன் ஒத்துப்போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்]**

---

9. **வேளாண்மை செய்தற் பொருட்டு - பொருள் கூறுக.**

பிறருக்கு உதவி செய்து வாழ்வதன் பொருட்டு - என்பது இவ்வடியின் பொருளாகும்.

---

10. **பற்று நீங்கியவனுக்கு உண்டாவது - பற்றற்றவனைப் பற்றுவதால் உண்டாவது**

அ) பற்றுகள் பெருகும் - பொருள்களின் இன்பம் பெருகும்
ஆ) பற்றுகள் அகலும் - பொருள்களின் துன்பம் அகலும்
இ) பொருள்களின் துன்பம் அகலும் - பற்றுகள் அகலும்
ஈ) பொருள்களின் இன்பம் பெருகும் - பற்றுகள் பெருகும்

**[ஆ) பற்றுகள் அகலும் - பொருள்களின் துன்பம் அகலும்]**

---

11. **அருவினை - புணர்ச்சி விதி கூறுக.**

அருவினை - அருமை + வினை
ஈறுபோதல் - அருவினை

---

## குறுவினா

1. **தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவம் கூறுவது ஏன்?**

- புண் எளிதில் ஆறிவிடும்.
- வடு என்பது மாறாது. என்றும் மறையாது. அது புறத்தோலில் அழியாமல் அப்படியே இருக்கும்.
- எனவே தீயினால் சுட்டதைப் புண் என்றும், நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவம் கூறுகிறது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



2. **''மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்'' - உவமையைப் பொருளோடு பொருத்துக.**

- உவமை : தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தரும் மரம்.
- உவமேயம் : பிறர்க்கு உதவி செய்யும் பெருந்தன்மை உள்ளவனிடத்தில் உள்ள செல்வம்.
- பொருத்தம் : பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம் தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தரும் மரத்தைப் போன்றது.

---

3. **எதற்கு முன் நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும் என்று குறள் கூறுகிறது?**

- நாக்கு அடைத்து, விக்கல் வந்து, உயிர்க்கு இறுதி வரும் முன், நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும்.

---

4. **சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?**

- செயலின் வலிமை
- தன்வலிமை
- பகைவனின் வலிமை
- தனக்குத் துணையாக இருப்பவரின் வலிமை

---

5. **மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?**

- பெருந்தகையாளன்
- மருந்து : பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம்.

---

## சிறுவினா

1. **தீயினால் சுட்ட புண் - இக்குறட்பாவில் வரும் அணியை விளக்குக.**
**அணி:** இக்குறட்பாவில் வேற்றுமை அணி பயின்று வந்துள்ளது.
முதலில் இரு பொருள்களுக்கு இடையே உள்ள ஒப்புமை கூறி, பின்னர் வேறுபடுத்தி, ஒன்றை விட மற்றொன்று உயர்ந்ததாகக் கூறுதல் வேற்றுமை அணி ஆகும்.
**விளக்கம்:**

- நெருப்பால் சுட்டபுண் விரைந்து ஆறும். நாவினால் சுட்ட வடு ஆறாது.
- தீயும், நாவும் சுடும் என்ற ஒப்புமை கூறி
- தீப் புண் ஆறிவிடும், நாவினால் உண்டான வடு ஆறாது என வேறுபடுத்திக் கூறியுள்ளதால் - இது வேற்றுமையணி ஆகும்.

---

2. **புகழுக்குரிய குணங்களாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறை வழி நின்று கூறுக.**

- **புகழுக்குரிய குணங்கள் :** அன்பு, ஈகை, ஒழுக்கம், பொறுமை, அடக்கம், இரக்கம், வாய்மை, உலகநடை அறிந்து, அடக்கத்தோடு பிறருக்கு உதவி செய்து வாழ்வதே, புகழுக்குரிய குணங்களாகும்.
- **பொதுமறை வழி :** இணையற்ற உயர்ந்த புகழைப் போல உலகத்தில் ஒப்பற்ற ஒன்றாக நிலைத்து நிற்பது வேறொன்றும் இல்லை.
- ''ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்'' - என்பது வள்ளுவம் கூறும் வழியாகும்.

---



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



3. **நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை மேற்சென்று செய்யப் படும். - இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக.**

| சொல் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| நாச் / செற் / று | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| விக் / குள் / மேல் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| வா / ரா / முன் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| நல் / வினை | நேர் நிரை | கூவிளம் |
| மேற் / சென் / று | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| செய் / யப் | நேர் நேர் | தேமா |
| படும் | நிரை | மலர் |

4. **சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.**
**வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்.**

**அணி விளக்கம்:**

செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து, தந்த பொருளையே மீண்டும் தருமாயின் அது சொற்பொருள் பின்வருநிலையணி எனப்படும்.

**சான்று விளக்கம்:**

செயலின் வலிமையும், தன் வலிமையும், பகைவனின் வலிமையும், துணையாளர் வலிமையும் சீர்தூக்கிச் செயல்படுக.

**பொருத்துக:**

இக்குறட்பாவில் 'வலி' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து 'வலிமை' என்ற ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆயிற்று.

5. **விரும்பியதை அடைவது எப்படி? குறள் வழி விளக்குக.**

- விரும்பியதை விரும்பியவாறே பெற முடியும் என்பதால் செய்ய முடிந்த தவத்தை இப்பொழுதே செய்கின்ற முயற்சியில் ஈடுபட வேண்டும்.
- ''வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
  ஈண்டு முயலப் படும்''
- உரிய காலத்தில், பொருத்தமான இடத்தில் தக்க செயலை மேற்கொண்டால், உலகத்தையே பெறக் கருதினாலும் கிடைத்துவிடும் எனக் குறள் வழிகாட்டுகிறது.

## நெடுவினா

1. **கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.**
**கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழியாக நிறுவுதல்**

**ஒப்புரவு:**

ஒப்புரவு என்றால் உலக நிலையை அறிந்து உதவி புரிதல் ஆகும். இதன் மூலம் அறிவுடைய மனிதன், பிற உயிர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை உய்த்துணர்ந்து உபகாரம் செய்ய வேண்டும் என்று வள்ளுவர் விளக்குகிறார்.

**தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



ஒருவன் முயன்று ஈட்டிய பொருளெல்லாம் தகுதியானவருக்கு உதவி செய்வதற்கே என்பது இதன் பொருளாகும்.

இங்கு தான் என்பது தேக முயற்சி. தக்கார்க்கு என்றது உபகாரம் செய்ய உரியவரைப் பெருமையாக உணர்த்துகிறது. தாளாண்மையால் வந்த பொருளை வேளாண்மை செய்வது மண்ணைப் பொன்னாக மாற்றிக் கொள்வது போன்றது. தன் பொருளைப் பிறர்க்கு அன்பாகக் கொடுத்து உதவும் ஒருவன் பேரும் சீரும் பெற்று, உயர்ந்து என்றும் பேரின்ப நிலையில் விளங்குகிறான் என்று வள்ளுவம் வழிகாட்டுகிறது.

**(எ.கா)** கடையெழு வள்ளல்களுள் ஒருவனான பாரியின் வாழ்க்கை.

**ஒத்த தறிவான் உயிர் வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்**

உயர்ந்தவர்களின் உலக நடைமுறைகளோடு ஒத்துப்போகிறவனே உயிர் வாழ்பவன் மற்றவன் செத்தவர்களுள் ஒருவனாகவே கருதப்படுவான்.

ஒத்தது = உரிமையாய் உணரத்தக்கது. அரிய பிறவியான மனிதப் பிறவியை அடைந்தவன், அதற்குரிய தகுதியை உணர்ந்து, எல்லா உயிர்களுக்கும் இனியவனாக வாழ்ந்து வர வேண்டும்.

ஆடு மாடுகள் போல மனிதனும் தன்னளவில் வாழ்ந்து வந்தால் அவன் பிறந்த சிறந்த பிறவிக்கு என்ன பயன்? அயலாருக்குச் செய்யும் உபகாரமே உயிர்க்கு இன்பம் தருவது. அதனைச் செய்யாதவன் ஆன்மாவைத் துன்பத்திற்கு உள்ளாக்குகிறவன். ஆகவே அவன் உயிரோடு இருந்தாலும் செத்தவன் என்று உயர்ந்தோரால் இகழப்படுவான் என்று வள்ளுவம் எச்சரித்து வழிகாட்டுகிறது.

**மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின்**

பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம், தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தரும் மரத்தைப் போன்றது.

நெல்லி, முருங்கை, வேம்பு, சுரபுன்னை முதலிய மரங்கள் சிறந்த மருந்துகளைத் தந்து உதவிப் பிணிகளை நீக்கி அருளுகின்றன. இலை, தளிர், மலர், காய், கனி, கட்டை, பட்டை, வேர் முதலிய எல்லா உறுப்புகளும் நல்ல மருந்துகளாய் நின்று நலம் பல தரும் மரம் போல பெருந்தகையாளரும் உதவுவர்.

நல்லோர் தமது செல்வத்தையும் கொடுத்துத் தம் உடலாலும் உழைத்து பிறர்க்கு நலமாய் உதவி புரிவர்; இன்னுயிரையும் ஈந்து இடர் தீர்ப்பர் என்பது இங்கு எண்ணத்தக்கது.

**(எ.கா.)** வள்ளல் சீதக்காதியின் வாழ்க்கை.

---

2. **அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.**

**'அடக்கமுடைமை வாழ்வினில் உயர்த்தும்'**

**அடக்கமுடைமை:**

மனம், மொழி, மெய்களால் அடங்கியிருத்தல். நேர்மையாளருக்கு மேலும் சீர்மை தரத்தக்கது.

**''நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது''**

நேர்வழி மாறாது அடக்கமாய் இருப்பவனின் உயர்வு, மலையின் மாண்பைக் காட்டிலும் பெரியது.

நிலை என்பது இல்லற நிலை, துறவற நிலை என இருவகைப்படும். தோற்றம் என்பது உயர்ந்து ஓங்கிய மேன்மையைக் குறிக்கிறது. எந்நிலையாக இருந்தாலும் மனிதன் தன் நிலையில் வழுவாமல் அடங்கியுள்ளவனுடைய விழுமிய மேன்மை நெடிய மலையை விடப் பெரிதாகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



மலை அளவிடற்கரியது; உயர்ந்த தோற்றம் உடையது; வற்றாத வளங்கள் பல தருவது. எனவே உயர்வான மேலோர் நிலைக்கு உவமையாகக் கூறப்பட்டது.

உலகம் அடங்க ஒருவன் உயர்ந்து விளங்க வேண்டுமானால் அவன் நிலை திரியாமல் அடங்கி ஒழுக வேண்டும். அந்த ஒழுக்கமே அரிய பெரிய தவம். அடக்கம் மனிதனை மகான் ஆக்கும். அவனது மகிமை வானுயர் தோற்றமாய் வையம் அறிய விரிகிறது.

**யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு**

ஒருவர் எதைக் காக்காவிட்டாலும் நாவைக் காக்க வேண்டும். அவ்வாறு காக்காவிட்டால் சொல் குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்.

யா = எல்லாப் பொருள்களிலும் காக்கத் தக்கவை இரண்டு வகைப்படும். வெளியே பொருள்; உள்ளே அறம், காத்தல் என்பது தவறான வழிகளில் போகவிடாமல் அடக்கி ஆளுதல்.

மனிதனுடைய வாழ்க்கை வாக்கால் நடந்து வருகிறது; வாக்கை நாக்கு அருளுகிறது; அந்த நாக்கு, சிறிது வழுவினாலும் பெரிய அழி துயர்கள் வந்து சேரும். நாவின் அடக்கம் நலங்கள் பல அருளும்.

**"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு"**

தீயினால் சுட்ட புண்ணால் உடலில் வடு உண்டானாலும் உள்ளே ஆறிவிடும். நாவினால் சுட்ட புண்ணால் உடலின் புறத்தே வடு உண்டாகாவிட்டாலும் உள்ளே ஆறாது.

எதையும் எரித்துத் தீய்த்துவிடுவது தீ. தீ உடம்பை மட்டும் சுடும்; சுட்ட புண்ணும் விரைவில் ஆறிவிடும். சுடுசொல் உள்ளத்தைச் சுட்டு, உயிரைத் தகித்து என்றும் கொடிய வேதனையாய் நெடிது வதைத்து நிற்கும். நல்ல அறிவுக்குப் பயன் நாவை நயமாகக் காப்பதே!

---

## வெற்றி என்பது......

*ஒவ்வொரு முறையும் முதல் இடத்தைப் பெறுவது என்று பொருள் அன்று.*
*உன் செயல் சென்ற முறையைவிட இம்முறை சிறப்பாக அமைந்துள்ளது என்று பொருள்.*

– பான்னி ப்ளேயர்



**உலகத்தைப் பார்த்து வாழ்பவன் சராசரி மனிதன்!**
**உலகமே பார்க்க வாழ்பவன் சாதனை மனிதன்!**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## கூடுதல் வினாக்கள்

## உரைநடை மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு ஆர்.பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.

### பலவுள் தெரிக

1. **கோடு, மலை, சிகரம், விளிம்பு, எல்லை முதலிய பொருள்களைத் தரும் சொல்: (மார்ச்.19)**
   அ) மரை ஆ) திரை இ) வரை ஈ) உரை

1. **கூற்று** : நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள்
   **காரணம்** : எனவே அவற்றைச் சுற்றி உயர்ந்த மதிற்சுவர்களை அமைத்திருக்கின்றனர்.
   அ) கூற்று சரி காரணம் தவறு ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி
   இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு
   **[ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி]**

2. **கூற்று** : திராவிடச் சொல்லான 'மலை' என்பது சமஸ்கிருத மொழியில் மலே என்று வழங்கப்படுகிறது.
   **காரணம்** : அதன் காரணமாக பாண்டிய மன்னன் ஒருவன் 'மலயத்துவஜ' என்று அழைக்கப்பட்டான்.
   அ) கூற்று சரி காரணம் தவறு ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி
   இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு
   **[இ) கூற்று தவறு, காரணம் சரி]**

3. **கருத்து 1** : குறும்பர் மொழியில் தாழ்வாரத்தைக் குறிக்கும் 'மெட்டு' என்ற சொல் அதன் உயரமான, மேடான அமைப்பை விளக்குகிறது.
   **கருத்து 2** : தமிழில் குறிஞ்சி நிலம் தொடர்பான சொற்களில் 'மலை' என்பது 'உயரமானது' என்றும் 'குன்று' என்பது 'உயரம் குறைவானது' என்றும் பொருள்படுவனவாகும்.
   அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
   இ) கருத்து 1, 2 இரண்டும் தவறு ஈ) கருத்து 1, 2 இரண்டும் சரி
   **[ஈ) கருத்து 1, 2 இரண்டும் சரி]**

4. **தவறான தொடரைக் கண்டறிக.**
   அ) ஆந்திர மாநிலத்தில் 'மலை' எனும் சொல் 'மலா' என வழங்கப்படுகிறது.
   ஆ) கர்நாடகத்தில் 'மலை' எனும் சொல் 'மலே' என வழங்கப்படுகிறது.
   இ) சமஸ்கிருதத்தில் 'மலை' எனும் சொல் 'மலய' என வழங்கப்படுகிறது.
   ஈ) தமிழில் 'மலை' எனும் சொல் 'கோப்பை' என வழங்கப்படுகிறது.
   **[ஈ) தமிழில் 'மலை' எனும் சொல் 'கோப்பை' என வழங்கப்படுகிறது]**

5. **சரியான இணையைத் தேர்ந்தெடு.**
   அ) மலையாளம் - கோட்டே
   ஆ) தெலுங்கு - கோடு
   இ) தோடா - க்வாட்
   ஈ) கன்னடம் - கோட்ட
   **[இ) தோடா - க்வாட்]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**6. பீடு பெற நில் எனும் இயலின் நோக்கம் யாது?**

அ) வெற்றி நடை போடுதல் ஆ) வாழ்வில் முன்னேறுதல்

இ) நம் பண்பாட்டைக் காப்பாற்றுதல் ஈ) அடுத்தவரை எதிர்பார்த்து வாழ்தல்

**[இ) நம் பண்பாட்டைக் காப்பாற்றுதல்]**

**7. மனித சமூகத்தின் ஆதி நிலம் ----**

அ) வயல் ஆ) காடு இ) கடல் ஈ) மலை **[ஈ) மலை]**

**8. மலை, குன்றுகளின் பெயர்கள் குறித்த ஆய்வை என்னவென்று அழைப்பர்-**

அ) ஓராலாஜி (அ) ஆராலாஜி (OROLOGY) ஆ) ஆர்க்கிடெக்

இ) ஹோமோலாஜி ஈ) பெத்தாலஜி

**[அ) ஓராலாஜி (அ) ஆராலாஜி (OROLOGY) ]**

**9. திராவிடர்களை 'மலைநில மனிதர்கள்' என அழைத்தவர் யார்?**

அ) ஆர். பாலகிருஷ்ணன் ஆ) வி.கிருஷ்ணமூர்த்தி இ) கமில் சுவலபில் ஈ) பிரமிள்

**[இ) கமில் சுவலபில்]**

**10. சேயோன் என அழைக்கப்படும் கடவுள் --**

அ) முருகன் ஆ) திருமால் இ) இந்திரன் ஈ) சிவன் **[அ) முருகன்]**

**11. நீலகிரி மலையில் உள்ளவர் ---- இனத்தவர்**

அ) குறும்பர் ஆ) போயர் இ) படுகர் ஈ) தோடர் **[ஈ) தோடர்]**

**12. தாழ்வாரத்தை 'மெட்டு' எனக் குறிப்பவர் யார்?**

அ) குறும்பர் ஆ) போயர் இ) படுகர் ஈ) தோடர் **[அ) குறும்பர்]**

**13. 'மலய' என்ற சமஸ்கிருதச்சொல்லின் பொருள் ----**

அ) அரண் ஆ) மலே இ) பரண் ஈ) மலை **[ஈ) மலை]**

**14. மலை என்ற சொல் எந்த நிலப்பகுதியில் வழங்கப்படவில்லை?**

அ) சிந்துவெளிப் பண்பாட்டு நிலத்தில் ஆ) கேரளப் பகுதியில்

இ) பாண்டிய நாட்டில் ஈ) தென்னிந்தியாவில்

**[அ) சிந்துவெளிப் பண்பாட்டு நிலத்தில்]**

**15. தவறான கூற்றினைக் கண்டறிக.**

அ) தினமணி நாளிதழில் துணையாசிரியராகப் பணியாற்றியவர் ஆர் பாலகிருஷ்ணன்

ஆ) கணையாழி என்ற இலக்கிய இதழின் ஆலோசகராகத் திகழ்ந்தவர் ஆர்.பாலகிருஷ்ணன்

இ) முதன் முதலாக இந்திய ஆட்சிப்பணியைத் தமிழில் எழுதி வெற்றிக் கண்டவர் ஆர்.பாலகிருஷ்ணன்.

ஈ) மலை இடப்பெயர் - ஓர் ஆய்வு எனும் கட்டுரையை எழுதாதவர் ஆர்.பாலகிருஷ்ணன்

**[ஈ) மலை இடப்பெயர் - ஓர் ஆய்வு எனும் கட்டுரையை எழுதாதவர் ஆர்.பாலகிருஷ்ணன்]**

**16. கோட்டை என முடியும் இடப்பெயர்கள் தமிழ் நாட்டில் எத்தனை உள்ளன?**

அ) 248 ஆ) 428 இ)842 ஈ) 284 **[அ) 248]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**17. முருகனைச் ''சேயோன் மேய மைவரை உலகம்'' எனக் கூறும் நூல்**

அ) நன்னூல் ஆ) வீரசோழியம் இ) தண்டியலங்காரம் ஈ) தொல்காப்பியம்

**[ஈ) தொல்காப்பியம்]**

**18. ''விண்பொரு நெடுவரை குறிஞ்சிக் கிழவ'' எனக் குறிப்பிடும் நூல்**

அ) திருமுருகாற்றுப்படை ஆ) பெரும்பாணாற்றுப்படை

இ) சிறபாணாற்றுப்படை ஈ) தொல்காப்பியம் **[அ) திருமுருகாற்றுப்படை]**

**19. 'கொண்டா தோரா' இனக்குழுவினர் வாழும் பகுதி**

அ) பீஹார் ஆ) ஆந்திரா இ) தமிழ்நாடு ஈ) ஒடிஸா **[ஆ) ஆந்திரா]**

**20. கீழ்க்காண்பவற்றில் கர்நாடகத்தை சார்ந்த இனக்குழு**

அ) மலவேடா ஆ) மலேரு இ) மலயன் ஈ) மலபணிக்கர் **[ஆ) மலேரு]**

**21. ஒடிஸாவில் வாழும் இனக்குழுக்கள்**

அ) கொண்டதோரா ஆ) மலேரு, மலவேடா இ) கோண்டு, கொய்ட்டெர் ஈ) கோட்டா

**[இ) கோண்டு, கொய்ட்டெர்]**

**22. KYT COMPLEX என்பதன் பொருள்**

அ) குறிஞ்சி வஞ்சி தொண்டி வளாகம் ஆ) குறிஞ்சி வஞ்சி திருநெல்வேலி வளாகம்

இ) கொற்கை வயலூர் தொண்டி வளாகம் ஈ) கொற்கை வஞ்சி தொண்டி வளாகம்

**[ஈ) கொற்கை வஞ்சி தொண்டி வளாகம்]**

**23. மலை இடப்பெயர்கள் - ஓர் ஆய்வு என்னும் பாடப்பகுதி எடுத்தாளப்பட்ட நூல்**

அ) சிந்துவெளிப் பண்பாடும் திராவிட மொழிகளும்

ஆ) சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்

இ) சிந்துவெளிப் பண்பாடும் திராவிடப் பண்பாடும்

ஈ) சிந்துவெளிப் பண்பாட்டில் தமிழர்களின் அடித்தளம் **[ஆ) சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்]**

**24. கூற்று** : 'கோட்டை' என்பது கன்னட மொழியில் வழங்கும் சொல்

**விளக்கம்** : காவல் மிகுந்த காப்பரண் கொண்ட மதில் சுவர்களில் சூழப்பட்ட கட்டமைப்பைக் குறிப்பது 'கோட்டை' என்பதாகும்.

அ) கூற்று, விளக்கம் - சரி ஆ) கூற்று தவறு, விளக்கம் தவறு

இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்று சரி, விளக்கம் தவறு

**[இ) கூற்று தவறு, விளக்கம் சரி]**

**25. பொருத்தித் தேர்க.**

**அ. மால் பஹாடியா** - 1. எர்நாட்

**ஆ. மல அரயன்** - 2. நெடுமங்காடு

**இ. மல குறவன்** - 3. மேற்கு தொடர்ச்சி மலைகள்

**ஈ. மல மூத்தன்** - 4. ஜார்கண்ட்

அ) 3 2 4 1 ஆ) 1 2 3 4 இ) 4 3 2 1 ஈ) 2 4 3 1 **[இ) 4 3 2 1]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

26. அ. கோட்ட, கோடு - 1. துளு
ஆ. கோட்டே, கோண்டே - 2. தெலுங்கு
இ. கோட்ட - 3. கன்னடம்
ஈ. கோட்டே - 4. மலையாளம்

அ) 4 2 1 3 ஆ) 2 3 1 4 இ) 3 2 4 1 ஈ) 4 3 2 1 **[ஈ) 4 3 2 1]**

27. திராவிடர்களின் மலை நீட்சி எந்தெந்த நாடுகளில் தொடர்கிறது? **[பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான்]**

## குறுவினா

1. **சங்க இலக்கியத்தில் மலை பற்றிக் குறிப்பிடும் மேற்கோள்களைக் குறிப்பிடுக.**
   - ‘சேயோன் மேய மைவரை உலகம்’ - தொல்காப்பியம்
   - ‘விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ’ - திருமுருகாற்றுப்படை

2. **மலைக்குடியிருப்புகள் எதைத் தருகின்றன?**
   - திராவிட மலைவாழ் மக்களின் குடியிருப்புகள், அப்பழங்குடியினர் தம் மலை சார்ந்த வாழ்வியலின் சமூக, சமயக் கூறுபாடுகள் குறித்த புரிதலைத் தருகின்றன.

3. **பழங்குடியினர் எத்தகைய இயல்புடையவர்கள்?**
   - ஓடும் நீரையே தங்கள் குடிநீராகப் பயன்படுத்தும் இயல்புடையவர்கள்.
   - தங்கள் குடியிருப்புப் பகுதியைவிட உயரமான இடத்திலோடும் சிற்றாறுகள், ஓடைகள் இவற்றிலிருந்து நீர் எடுத்துப் பருகுகிறார்கள்.

4. **தோடர் பற்றிக் குறிப்பு வரைக.**
   - நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள். எனவே அவற்றைச் சுற்றி உயர்ந்த மதிற்சுவர்களை அமைத்திருக்கின்றனர்.
   - அவர்களின் வீடுகளில் திண்டுகள் (மேடைகள்) முக்கிய இடம் பெறுகின்றன.

5. **‘ஜதாப்பு’ என்பவர்கள் யார்?**
   - ஆந்திராவிலும், ஒடிஸாவிலும் வாழும் திராவிடப்பழங்குடியினர்.

6. **பழங்குடியினரின் உயரமான தாக்கம் குறித்து எழுதுக.**
   - பழங்குடித்தலைவரின் வீடு, மற்ற வீடுகளை விட உயரமான இடத்தில் அமைந்துள்ளது.
   - உயரமான மேடை, திண்ணை, சுற்றுச்சுவர்கள், மேலோடை நீர் ஆகியவை திராவிடப் பழங்குடியினரின் வாழ்வைவிட வடிவமைப்பிலும் வாழ்வியலிலும் உயரமான இடங்கள் செலுத்தும் தாக்கத்தைக் காட்டுகின்றன.

7. **மலை, குன்று விளக்கம் தருக.**
   - மலை என்பது உயரமானது.
   - குன்று என்பது உயரம் குறைவானது.

8. **மலைக்கு வழங்கும் வேறு சொற்களைக் குறிப்பிடுக.**
   - வரை, கோடு, மலை, சிகரம், விளிம்பு, கரை, எல்லை, நுனி



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**9. வரை எனும் சொல் விளக்கம் தருக.**

- ‘நுனி முதல் அடி வரை’ மற்றும் ‘அடி முதல் நுனி வரை’ என்னும் தொடரில் ‘வரை’ என்ற சொல் விளிம்பு என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது.

**10. தென்னிந்தியாவில் மலை - குறிப்பு வரைக.**

- தமிழ்நாட்டில் மட்டும் மலை என்ற சொல் 17 இடப்பெயர்களில் முன்னொட்டாக உள்ளது.
- 84 இடப்பெயர்களில் பின்னொட்டாக உள்ளது.

**11. கர்நாடகா, கேரளா மாநிலங்களில் மலை இடப்பெயர்கள் குறித்து எழுதுக.**

- கர்நாடகத்தில் ஒரு இடப்பெயர் - தோணி மலை
- மலையைக் குறிக்கும் சொல்லான மலே - 15 இடங்களில் உள்ளது.
- கேரளாவில் 10 இடப்பெயர்கள் மலை விகுதி பெற்று வந்துள்ளன.

**12. கோட்டை - வரையறு.**

- தமிழ் மொழியில் ‘கோட்டை’ என்னும் சொல், காவல் மிகுந்த காப்பரண் கொண்ட மதில் சுவர்களால் சூழப்பட்ட கட்டமைப்பைக் குறிக்கிறது.

**13. கோடு என்ற தமிழ்ச் சொல்லுக்குரிய இணைச் சொற்கள் யாவை?**

- மலையுச்சி , சிகரம், மலை, வல்லரண், கோட்டை

**14. இயற்கை அரண்கள் எவை?**

- மலையரண், காட்டரண்

**15. வடமொழி இலக்கியங்கள் பதிவு செய்யாத அடையாளங்கள் எவை?**

- கொற்கை, வஞ்சி, தொண்டி

**16. வரலாற்றின் அடையாளச் சின்னங்களாகத் திகழும் ஊர்களாக ஆர்.பாலகிருஷ்ணன் கூறுவது யாது?**

- கொற்கை, வஞ்சி , தொண்டி

**17. ஆர்.பாலகிருஷ்ணன் ஆசிரியர் குறிப்பு வரைக.**

- 28 ஆண்டுகளாக இடப்பெயராய்வில் ஈடுபட்டவர்.
- தமிழ் மொழியில் முதன்முதலில் ஆட்சிப் பணித் தேர்வெழுதி முதல் முயற்சியில் வெற்றி கண்டவர்.
- தினமணி, கணையாழி இதழ்களில் பணியாற்றியவர்.
- தற்போது ஒடிசா மாநிலத்தின் கூடுதல் தலைமைச் செயலர்.

**18. ஆர்.பாலகிருஷ்ணன் இயற்றிய நூல்களைக் குறிப்பிடுக.**

- அன்புள்ள அம்மா, சிறகுக்குள் வானம்

**19. திராவிடப் பழங்குடி இனப்பெயர்கள் எதன் அடிப்படையில் ஆக்கப்பெற்றுள்ளன?**

- இந்தியாவில் வாழும் பல்வேறு திராவிடப் பழங்குடி இனக்குழுப் பெயர்கள் மலை, குன்று என்று பொருள்தரும் சொற்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பெற்றுள்ளன.

**20. திராவிடர்களை கமில் சுவலபில் எவ்வாறு அழைக்கின்றார்?**

- திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள்.
- திராவிடர்களை, ‘மலைநில மனிதர்கள்’ என்று அழைக்கிறார் கமில் சுவலபில்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

21. **OROLOGY என்றால் என்ன?**

- மலை, குன்றுகளின் பெயர்கள் குறித்த ஆய்வை OROLOGY என்ற கலைச்சொல்லால் அழைப்பர்.

22. **'மெட்டு' - சிறு குறிப்பு வரைக.**

- குறும்பர் மொழியில் தாழ்வாரத்தைக் குறிக்கும் 'மெட்டு' என்ற சொல் அதன் உயரமான மேடான அமைப்பை விளக்குகின்றது.

23. **KVT COMPLEX என்பதன் தமிழாக்கம் தருக?**

- கொற்கை, வஞ்சி , தொண்டி வளாகம் - KVT COMPLEX.

24. **'சிந்து வெளிப்பண்பாட்டின் திராவிட அடித்தளம்' - என்னும் நூலை எழுதியவர் யார்?**

- 'சிந்து வெளிப்பண்பாட்டின் திராவிட அடித்தளம் என்னும் நூலை ஆர். பாலகிருஷ்ணன் எழுதியுள்ளார்.

25. **தமிழரின் கடவுளையும் மலையையும் தொடர்புபடுத்தும் பண்டைய பதிவுகளை கூறுக?**

- 'சேயோன் மேய மைவரை உலகம்' - தொல்காப்பியம்.
- 'விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ' - திருமுருகாற்றுப்படை.

## சிறுவினா

1. **கடந்தகால வரலாற்றிற்கான அடையாளச் சின்னங்களான கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம் பற்றிக் குறிப்பு வரைக.**

- கொற்கை, வஞ்சி, தொண்டி என்னும் ஊர்ப்பெயர்கள், பழந்தமிழரின் அரசியல், பொருளியல், பண்பாடுகளின் விளைவால் உருவானவை ஆகும்.
- சங்ககாலப் பழந்தமிழ்ச் சமூகத்திற்குக் கொற்கையும், வஞ்சியும் , தொண்டியும் ஆணிவேர் அடையாளங்களாக இருக்கின்றன.
- சங்ககால மன்னர்கள், குறுநிலத் தலைவர்கள் ஆகியவர்களின் தலைநகரங்கள், துறைமுகங்கள், போர்க்களங்கள் ஆகியவற்றின் பெயர்களோடு, வடமேற்குப் பகுதியில் உள்ள ஊர்ப்பெயர்கள் பொருந்திப் போகின்றன.
- கொற்கை, வஞ்சி, தொண்டி ஆகிய இடங்கள் காட்டும் பொதுத்தன்மைகள் மிகவும் முக்கியமானவை.

2. **'மலை' என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டு உருவாகியுள்ள இனக்குழுப் பெயர்களை அட்டவணைப்படுத்துக.**

| | |
|---|---|
| மால் பஹாடியா | ஜார்கண்ட் |
| மல அரயன் | மேற்குத் தொடர்ச்சி மலைகள் - கேரளம் |
| மல குறவன் | நெடுமங்காடு - கேரளம் |
| மல மூத்தன் | எர்நாட் - கேரளம் |
| மல பணிக்கர் | வட கேரளம் |
| மலயன் | பாலக்காடு - கேரளம் |
| மலவேடா | இடுக்கி - கேரளம் |
| மலேரு | தட்சிண கன்னடா - கர்நாடகம் |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



இதைப்போலவே,

| | |
|---|---|
| கோட்டா | நீலகிரி, தமிழ்நாடு |
| கொண்டாதோரா | ஆந்திரப் பிரதேசம் |
| கோண்டு, கொய்ட்டெர் | ஒடிஸா |

ஆகிய திராவிடப் பழங்குடி இனக்குழுப் பெயர்களும் 'மலை' 'குன்று' என்ற பொருள் தரும் சொற்களையே அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் பெற்றுள்ளன.

**3. திராவிட மலைவாழ் மக்களின் வாழ்விட வடிவமைப்பை விவரி.**

- பழங்குடியினர் ஓடும் நீரையே தங்கள் குடிநீராகப் பயன்படுத்தும் இயல்புடையவர்கள்.
- அவர்கள் தங்கள் குடியிருப்புப் பகுதியைவிட உயரமான இடத்திலோடும் சிற்றாறுகள், ஓடைகளில் இருந்து நீரெடுத்துப் பருகுகிறார்கள்.
- நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள்.
- எனவே, அவற்றைச் சுற்றி உயர்ந்த மதிற்சுவர்களை அமைத்திருக்கின்றனர்.
- அவர்களின் வீடுகளில் திண்டுகள் (மேடைகள்) முக்கிய இடம் பெறுகின்றன.
- குறும்பர் மொழியில் தாழ்வாரத்தைக் குறிக்கும் 'மெட்டு' என்ற சொல் அதன் உயரமான, மேடான அமைப்பை விளக்குகின்றது.
- ஆந்திராவிலும் ஒடிஸாவிலும் உள்ள 'ஜதாப்பு' எனப்படும் திராவிடப் பழங்குடியினரின் குடியிருப்புகள் பெரும்பாலும் மலை உச்சிகளில் அமைந்துள்ளன.
- பழங்குடித் தலைவரின் வீடு, மற்ற வீடுகளை விட உயரமான இடத்தில் அமைந்துள்ளது.
- உயரமான மேடை, திண்ணை, சுற்றுச்சுவர்கள், மேலோடை நீர் ஆகியவை திராவிடப்பழங்குடியினரின் வாழ்விட வடிவமைப்பிலும் வாழ்வியலிலும் உயரமான இடங்கள் செலுத்தும் தாக்கத்தைக் காட்டுகின்றன.

**4. மலை, வரை, மலா போன்ற திராவிடச் சொற்கள் எந்தெந்த மாநிலத்திலும் மாவட்டத்திலும் பேசப்படுகின்றன என்பதை அட்டவணைப்படுத்துக.**

| திராவிடச் சொற்கள் | மாநிலம் | மாவட்டம் |
|---|---|---|
| மலை | உத்தரகாண்ட் | சமோலி |
| | ஜார்கண்ட் | கும்லா |
| | உத்திரப் பிரதேசம் | ஜவுன்பூர் |
| வரை | குஜராத் | வல்ஸ்ட் |
| | மஹாராஷ்ட்ரா | தாணே |
| | ஹிமாசலப்பிரதேசம் | காங்க்ரா |
| மலா | பஞ்சாப் | ஜலந்தர் |
| | ராஜஸ்தான் | அஜ்மீர் |
| | கர்நாடகம் | உடுப்பி |

**5. 'கோட்டை' என்ற சொல் திராவிட மொழிகளில் வழங்கும் விதத்தை விவரி?**

- தமிழ் மொழியில் 'கோட்டை' என்ற சொல், காவல் மிகுந்த காப்பரண் கொண்ட மதில் சுவர்களால் சூழப்பட்ட கட்டமைப்பைக் குறிக்கிறது.
- திராவிட வேர்ச்சொல் அகராதி, கோட்டை என்ற சொல்லோடு தொடர்புடைய பல்வேறு திராவிட மொழிச் சொற்களைக் கீழ்வருமாறு பட்டியலிடுகிறது.

| | |
|---|---|
| தமிழ் | கோட்டை, கோடு |
| மலையாளம் | கோட்ட, கோடு |
| கன்னடம் | கோட்டே, கோண்டே |
| தெலுங்கு | கோட்ட |
| துளு | கோட்டே |
| தோடா | க்வாட் |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



- இவ்வாறு, எழுத்து வழக்குக் கொண்ட திராவிட மொழிகளில் மட்டுமல்லாமல் திராவிடப் பழங்குடி மொழிகளிலும் கூட கோட்டை என்ற சொல்லாக்கத்தின் வேர்களை இனங்காண முடிகிறது.
- இந்தியாவில் 'கோட்டை' என்று முடியும் 248 இடப்பெயர்களும் தமிழ்நாட்டில்தான் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**6. கொற்கை, வஞ்சி தொண்டி வளாகம் (KVT COMPLEX) பற்றி சிறு குறிப்பு வரைக? (அல்லது) கடந்தகால வரலாற்றிற்கான அடையாளச்சின்னங்களாக ஆசிரியர் கூறியுள்ளன யாவை?**

- கொற்கை, வஞ்சி, தொண்டி என்னும் ஊர்ப் பெயர்கள் பழந்தமிழர்களின் அரசியல், பொருளியல் மற்றும் பண்பாட்டு உருவாக்கத்தின் விளைவாக உருவானவை.
- சங்க இலக்கியம் காட்டும் பழந்தமிழ்ச் சமூகத்திற்குக் கொற்கை, வஞ்சி, தொண்டி ஆகிய பெயர்கள் ஆணிவேர் அடையாளங்கள் ஆகும்.
- இப்பெயர்களில் ஒன்றைக்கூட வடமொழி இலக்கியங்கள் பதிவு செய்யவில்லை.
- சங்ககாலத் தமிழ் மன்னர்களின், குறுநிலத் தலைவர்களின் தலைநகரங்கள், துறைமுகங்கள், போர்க்களங்கள் ஆகியவற்றின் பெயர்களோடு வடமேற்குப் பகுதிகளில் உள்ள ஊர்ப்பெயர்கள் பொருந்திப் போகின்றன.
- கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம் (KVT COMPLEX) காட்டும் பொதுத் தன்மைகள் மிக முக்கியமானவை.
- இவை கடந்த கால வரலாற்றிற்கான அடையாளச் சின்னங்கள் ஆகும்.

## நெடுவினா

**1. தென்னிந்தியாவில் 'மலை' என்ற இடப்பெயரின் சிறப்பிடம் பற்றி எழுதுக?**

- மலை, மனித சமூகத்தின் ஆதி நிலமாகும். தமிழ் அகத்திணையியல், மலையும் மலை சார்ந்த பகுதியையும் குறிஞ்சி என்று குறிக்கும். குறிஞ்சி நிலம் சார்ந்த சங்கப் பாடல்கள் மலையோடு இயைந்த தமிழர்தம் சீரிய வாழ்வினைப் பேசின.
- தமிழ்நாட்டில் மட்டும் 'மலை' என்ற சொல் 17 இடப்பெயர்களில் முன்னொட்டாகவும் 84 இடப்பெயர்களில் பின்னொட்டாகவும் இடம் பெறுகின்றது.
- ஆந்திர மாநிலத்தில் 'மல்' என்ற வேர்ச்சொல் ஐகார ஈறு பெற்று மலை என வழங்கப்படுவதற்கு மாறாக ஆகார ஈறு பெற்று 'மலா' என்று வழங்கப்படுகிறது.
- கர்நாடகத்தில் மலை என்ற வடிவம் 'தோணிமலை' என்னும் இடப்பெயரில் ஒரே ஒருமுறை பயன்படுத்தப்படுகிறது. மலையைக் குறிக்கும் மற்றொரு சொல்லான 'மலே' 15 இடப்பெயர்களில் இடம்பெறுகிறது.
- கேரள மாநிலத்தில் பத்து 'மலை' விகுதி இடப்பெயர்கள் உள்ளன. மேற்சொன்ன மலை, மலா, மலே எனப்படும் சொற்கள், தென்னிந்தியாவின் எந்த ஒரு மாநிலத்திலும் முன்னொட்டாகவோ பின்னொட்டாகவோ வருகின்றனவே அன்றி, தனிச்சொல்லாக வழங்கப்படவில்லை.

**2. வடமேற்குப் பகுதிகளில் திராவிட மலைப்பெயர்கள் இடம்பெறும் பாங்கினை விவரிக்க?**

- திராவிடச் சொல்லான 'மலை' என்பது சமஸ்கிருத மொழியில் 'மலய' என்று வழங்கப்படுகிறது.
- பாண்டிய மன்னன் ஒருவன் 'மலயத்துவஜ' என்று அழைக்கப்பட்டான் என்பதும் 'மலய' என்ற சொல்லின் திராவிடத் தொடர்புக்கு அரண் சேர்க்கிறது.
- வடமொழியில் 'மலய' என்ற சொல் மலபாருக்கு மேற்கே உள்ள மலைகளையே குறிக்கிறது.
- தமிழில் குறிஞ்சி நிலம் தொடர்பான சொற்களில் 'மலை' என்பது 'உயரமானது' என்றும் 'குன்று' என்பது 'உயரம் குறைவானது' என்றும் பொருள் படுவனவாகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



- மலை, குன்று என்னும் இரண்டு சொல்லாட்சிகளும் வெளிக்கொணரும் உயர வேறுபாட்டை வடமேற்குப் பகுதிகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும் மலை சார்ந்த இடப்பெயர்கள் உறுதி செய்வது வியப்பளிக்கின்றது.
- தமிழ் மொழியில் 'வரை' என்ற சொல் கோடு, மலை, சிகரம், விளம்பு, கரை, எல்லை, நுனி போன்ற பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது.
- நுனி முதல் அடி வரை மற்றும் அடி முதல் நுனி வரை என்ற தொடர்களில் 'வரை' என்ற சொல் விளிம்பு என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தியாவின் வடக்கு, மேற்கு, கிழக்கு மாநில இடப்பெயர்களில் திராவிட இடச்சொற்களின் நேரடித் தொடர்பு இன்று வரை நீடிப்பதை, கீழுள்ள அட்டவணை உறுதிப்படுத்தும்.

| திராவிடச் சொற்கள் | மாநிலம் | மாவட்டம் |
|---|---|---|
| மலை | உத்தரகாண்ட் | சமோலி |
| | ஜார்கண்ட் | கும்லா |
| | உத்திரப்பிரதேசம் | ஜவுன்பூர் |
| வரை | குஜராத் | வல்ஸட் |
| | மஹாராஷ்ட்ரா | தாணே |
| | ஹிமாசலப்பிரதேசம் | காங்க்ரா |
| மலா | பஞ்சாப் | ஜலந்தர் |
| | ராஜஸ்தான் | அஜ்மீர் |
| | கர்நாடகம் | உடுப்பி |

## கவிதைப்பேழை! காவடிச்சிந்து - சென்னிகுளம் அண்ணாமலையார்

### பலவுள் தெரிக

1. **கூற்று** : காவடி தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்றாகும்.
**காரணம்** : குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில் காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது.
அ) கூற்று சரி காரணம் தவறு ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி
இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு
**[ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி]**

2. **வன்ன மயில் முருகேசன் - குற வள்ளி பதம் நேசன் - இவ்வரியில் வன்ன என்பதன் பொருள் யாது?**
அ) நிறம் ஆ) பலவகை இ) அழகு ஈ) வகை **[இ) அழகு]**

3. **பொருத்துக.**
அ) புயம் - 1. மதில்
ஆ) நூபுரம் - 2. மேகம்
இ) இஞ்சி - 3. சிலம்பு
ஈ) புயல் - 4. தோள்
அ) 4 3 1 2 ஆ) 2 3 4 1 இ) 3 4 2 1 ஈ) 1 3 4 2 **[அ) 4 3 1 2]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



4. **தாவி, மாதே - சரியான இலக்கணக்குறிப்பினைக் கண்டறிக.**
அ) பெயரெச்சம், உரிச்சொல் ஆ) வினையெச்சம், ஈற்றுப்போலி
இ) வினையெச்சம், விளி ஈ) வினைமுற்று, உருவகம் **[இ) வினையெச்சம், விளி]**

5. **திருப்புகழ் - இச்சொல்லிற்குத் தகுந்த புணர்ச்சி விதியினை எழுதுக.**
அ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
ஆ) இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்
இ) பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும் ஈ) இனமிகல்
**[ஆ) இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்]**

6. **உயர்ந்தோங்கும் - இச்சொல்லின் சரியான பிரிப்பு முறையினை எழுதுக.**
அ) உயிர் + ஓங்கும் ஆ) உயர்ந் + ஓங்கும் இ) உயர்ந்து + தோங்கும் ஈ) உயர்ந்து + ஓங்கும்
**[ஈ) உயர்ந்து + ஓங்கும்]**

7. **நம் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள காவடிச்சிந்து எந்த மலை முருகனைப்பற்றி பாடப்பட்டுள்ளது?**
அ) சென்னிமலை ஆ) மருதமலை இ) பழனி மலை ஈ) கழுகுமலை **[ஈ) கழுகுமலை]**

8. **வழி நடைப்பாடலாக இயற்றப்பட்ட பாடல் வடிவம் எது?**
அ) காவடிச்சிந்து ஆ) கும்மி இ) தெம்பாங்கு ஈ) நாடோடி பாடல்
**[அ) காவடிச்சிந்து]**

9. **திருப்புகழை இயற்றியவர் யார்?**
அ) அருணகிரிநாதர் ஆ) வள்ளலார் இ) அண்ணாமலையார் ஈ) தாயுமானவர்
**[அ) அருணகிரிநாதர்]**

10. **ஊற்று மலை யாருக்குச் சொந்தமானது?**
அ) குறுநிலத்தலைவர் மருதப்பத் தேவர் ஆ) வள்ளலார்
இ) அண்ணாமலையார் ஈ) தாயுமானவர் **[அ) குறுநிலத்தலைவர் மருதப்பத் தேவர்]**

11. **பின்வருவனவற்றுள் தவறான கூற்றினைச் சுட்டுக.**
அ) அண்ணாமலையார் பாடிய காவடி சிந்து அருணகிரியாரின் திருப்புகழ் தாக்கத்தால் விளந்ததாகும்.
ஆ) தமிழில் முதன்முதலில் வண்ணச்சிந்து பாடியவர் அண்ணாமலையார்
இ) காவடிச்சிந்தின் தந்தை என அழைக்கப்படுபவர் அருணகிரியார்
ஈ) வீரைத் தலபுராணம், சங்கரன்கோவில் திரிபந்தாதி, கோமதி அந்தாதி போன்ற நூல்களை இயற்றியவர் அருணகிரியார்
அ) அ,ஆ ஆ) இ, ஈ இ) அ, ஈ ஈ) ஆ, இ **[ஆ) இ, ஈ]**

12. **பொருள் கூறுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. **புயம்** - தோள் | 2. **வன்னம்** - அழகு | 3. **த்வஜஸ்தம்பம்** - கொடி மரம் | 4. **நூபுரம்** - சிலம்பு |
| 5. **மாசுணம்** - பாம்பு | 6. **இஞ்சி** - மதில் | 7. **உம்பர்** - தேவர் | 8. **அயில்** - வேல் |
| 9. **சலம்** - மலை | 10. **ஜலம்** - நீர் | 11. **சீதளம்** - குளிர்ச்சி | 12. **அண்டம்** - உலகம் |
| 13. **விலாசம்** - அழகு | | | |

13. **கூற்று 1:** வழிநடைப் பாடல் வகையிலிருந்து தோன்றிய பா வடிவம் சிந்து.
**கூற்று 2 :** நாட்டார் வழக்கியல் இசைமரபு சிந்து.
அ) கூற்று 1, 2 தவறு ஆ) கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி ஈ) கூற்று 1, 2 சரி **[ஈ) கூற்று 1, 2 சரி]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



14. **கூற்று** 1 : காவடிச் சிந்துக்கு மெட்டு அமைத்தவர் அருணகிரியார்.
**கூற்று** 2 : அண்ணாமலையார் காவடி சிந்துக்கு மெட்டுகள் அமைத்தார்.
அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று இரண்டும் சரி
இ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி ஈ) கூற்று 1 சரி 2 தவறு **[இ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி]**

15. **காவடி எடுக்கும் அடியார் பாடிய திருப்புகழ் முழக்கம் எங்குள்ள தேவர்களின் செவியை அடையும்?**
அ) வைகுண்டம் ஆ) சென்னைப்பட்டினம் இ) கைலாயம் ஈ) அமராவதிப்பட்டினம்
**[ஈ) அமராவதிப்பட்டினம்]**

16. **'ஊற்றுமலை' இருதயாலய மருதப்பத் தேவரின் அவைப் புலவர்**
அ) அண்ணாமலையார் ஆ) உமறுப்புலவர் இ) பாரதியார் ஈ) அருணகிரியார்
**[அ) அண்ணாமலையார்]**

17. **காவடிச்சிந்தின் தந்தை**
அ) காளமேகப் புலவர் ஆ) பாரதிதாசன்
இ) அருணகிரிநாதர் ஈ) சென்னிகுளம் அண்ணாமலையார்
**[ஈ) சென்னிகுளம் அண்ணாமலையார்]**

18. **அண்ணாமலையார் இயற்றிய நூல்கள்**
(i) கோமதி அந்தாதி (ii) சரஸ்வதி அந்தாதி (iii) சடகோபர் அந்தாதி (iv) சங்கரன்கோவில் திரிபந்தாதி
அ) i, iv சரி ஆ) i, iii சரி இ) i, ii சரி ஈ) இவற்றில் எதுவுமில்லை
**[அ) i, iv சரி]**

19. **தமிழில் முதன்முதலில் வண்ணச்சிந்து பாடியவர்**
அ) அருணகிரியார் ஆ) அண்ணாமலையார் இ) பட்டுக்கோட்டையார் ஈ) மாங்குடி மருதனார்
**[ஆ) அண்ணாமலையார்]**

20. **அண்ணாமலையார் ஊற்றுமலைக்குச் சென்றபோது அவருடைய வயது**
அ) 20 ஆ) 18 இ) 16 ஈ) 17 **[ஆ) 18]**

21. **'த்வஜஸ்தம்பம்' என்பதன் பொருள்**
அ) கப்பலில் பறக்கும் கொடி ஆ) மதில்மேலிருக்கும் கொடி
இ) கொடி மரம் ஈ) மரத்தடி **[இ) கொடி மரம்]**

22. **'கழுகாசலபதி' என்று குறிப்பிடப்படும் ஊர்**
அ) திருக்கழுக்குன்றம் ஆ) ஆனைமலை இ) கழுகுமலை ஈ) குடகுமலை **[இ) கழுகுமலை]**

23. **'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்னும் விதிக்குரிய சொல்**
அ) ஏழிசை ஆ) நெகிழ்ந்துருக இ) திருப்புகழ் ஈ) உயர்ந்தோங்கும்
**[இ) திருப்புகழ்]**

24. பொருத்தித் தேர்க.
**அ) விலாசம்** - 1. தேவர்
**ஆ) நூபுரம்** - 2. மதில்
**இ) இஞ்சி** - 3. சிலம்பு
**ஈ) உம்பர்** - 4. அழகு
அ) 4 2 1 3 ஆ) 3 2 1 4 இ) 2 1 3 4 ஈ) 4 3 2 1 **[ஈ) 4 3 2 1]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

25. அ) புயம் - 1. உலகம்
ஆ) ஜகம் - 2. அழகு
இ) வன்னம் - 3. மேகம்
ஈ) புயல் - 4. தோள்

அ) 2 1 4 3 ஆ) 4 1 2 3 இ) 2 1 3 4 ஈ) 3 2 1 4 **[ஆ) 4 1 2 3]**

## குறுவினா

**1. காவடிச்சிந்து எவ்வாறு தோன்றியது?**

- முருகப் பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் கொண்டு செல்வோர், ஆடல் பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர்.
- அவர்களின் வழிநடைப்பாடல் வகைகளிலிருந்து காவடிச் சிந்து என்ற பாவடிவம் தோன்றியது.

**2. சென்னிகுளம் அண்ணாமலையார் இயற்றிய நூல்கள் யாவை?**

- வீரைத் தல புராணம், வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம், சங்கரன் கோவில் திரிபந்தாதி, கருவை மும்மணிக்கோவை, கோமதி அந்தாதி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

**3. கழுகுமலைக் கோயிலின் கோபுர அழகினைக் காவடிச் சிந்து வாயிலாகத் தெரிவிக்கவும்.**

- கழுகுமலைக் கோயிலின் கோபுரக் கலசம் தங்க நிறத்திலானது.
- தேவர்களின் உலகத்தை விடவும் உயர்ந்துள்ளது.
- பார்ப்பவர்களின் கண்கள் சுடும்படியாகவும், உலகம் முழுவதும் மாசுபடாமலும் காத்துவருகிறது.

**4. கழுகு மலையின் கொடிக்கம்பம் குறித்து எழுதுக.**

- கோயிலில் நடப்பட்டிருந்த கொடிக்கம்பமானது உயர்ந்து விண்ணிற்குத் தாவுவதைப் போன்று அமைந்திருந்தது.

**5. இடியின் ஓசை என நினைத்தது எது? ஏன்?**

- இடியின் ஓசை என நினைத்தது பூமியைத் தாங்கிக் கொண்டிருக்கும் நாகம்.
- ஏனெனில் மெல்லிய இடையை உடைய பெண்கள் தம் சிலம்புகள் ஒலித்திடும்படிக் கழுகுமலையில் நடனமாடுவார்கள்.
- அவர்களின் நடனத்திற்கு மத்தளம், தாளங்களைக் கொண்டுவருவார்கள்.
- இவ்வோசையினை இடியின் ஓசை என நினைத்துப் பாம்பு அஞ்சும்.

**6. மேகங்கள் எங்கே தங்கி ஓய்வெடுத்துச் செல்லும்?**

- வானுலகையும் தொட்டு, அதையும் தாண்டிச் செல்லும் தன்மையுடையன கழுகுமலை மதிற்சுவர்கள்.
- அம்மதிலில் குளிர்ந்த முகில்கள் ஓய்வெடுத்துச்செல்லும்.
- மேகங்கள் செல்லும் பொழுது, மதிலை உரசும் காரணத்தால், மின்னலையும், இடியையும் உண்டாக்கிச் செல்லும்.

**7. தேவர்களின் காதுகளையும், உலகத்தையும் உடைப்பவை எவை?**

- திருப்புகழ் போல சந்த நயத்தோடு சிந்துப் பாடலை அடியவர்கள் பாடுவார்கள்.
- சிலர் பாடுவதைக் கேட்டுக், கேட்டு பலரும் ஒரே விதமான இசையில் கூட்டமாகப் பாடுவார்கள்.
- அது தேவர்களின் காதையும், உலகத்தையும் அடைக்கும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**8. கழுகுமலை முருகனிடம் பக்தர்கள் எத்தகைய பக்தியுடன் இருப்பார்கள்?**

- கருணை வடிவான முருகன் மீது கொண்ட பக்தியால், காவடி சுமந்து வருவார்கள்.
- அனலிடை பட்ட மெழுகுபோல் உள்ளம் உருகி நினைப்பார்கள்.
- அவனை நினைப்பது ஒன்றே தமக்கு இன்பம் எனக் கருதுவார்கள்.
- முருகனுடைய அருளைப் பெற்று மகிழ்வார்கள்.

**9. 'காவடிச்சிந்து' என்னும் நூலின் பாட்டுடைத் தலைவன் யார்?**

- 'காவடிச்சிந்து' என்னும் நூலின் பாட்டுடைத்தலைவன், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கழுகுமலையில் எழுந்திருக்கும் முருகன் ஆவான்.

**10. 'சலராசி' என்று குறிக்கப்படுபவை யாவை?**

- 'சலராசி' என்பது கடலில் வாழும் மீன் முதலிய உயிர்களைக் குறிக்கிறது.

**11. சிந்துப்பாடல் அமைப்பு பற்றிக் கூறுக**

- சிந்துப்பாடல் இசைப்பாட்டு வகையுள் ஒன்றாகும்.
- பெரும்பாலும் மூன்று சீர்களைப் பெற்றதனால், பழங்காலத்தில் சிந்து எனப்பட்டது.
- பல்லவி, அனுபல்லவி, சரணம் என்பனவற்றைக் கொண்ட கீர்த்தனை போல் அல்லாமல் அளவொத்து வழங்கும் இசைப்பாடல்களைச் சிந்து என்று வழங்கினர்.

**12. எவற்றை நடிக்கும், தாக்கும் எனக் காவடிச் சிந்து குறிப்பிடுகிறது?**

- கழுகுமலைக் கோவிலில், தங்கள் காற்சிலம்பு ஒலிக்கும்படி, சிற்றிடை கொண்ட பெண்டிர் நடனமாடுவதை 'நடிக்கும்' என்றும்,
- பாம்புகள் இது இடிமுழக்கமோ என அஞ்சித் தலை தூக்கிப் பார்க்கும்படி கோவில் பலகணியில் வைக்கப்பட்டிருக்கும் முழவினை அடிப்பதால் எழும் பேரொலி நான்கு திசைகளிலும் சென்று மோதி ஒலிப்பதைத் 'தாக்கும்' என்றும் காவடிச்சிந்து குறிப்பிடுகிறது.

**13. எது செவி அடைக்கும், அண்டம் உடைக்கும்?**

- அருணகிரியார் எழுதிய திருப்புகழ் பாடல்களைப் பலமுறை பாடிப் பழகிய பயிற்சியால் முருகன் அடியார் பலரும் அப்பாடல்களைக் கூட்டமாய்ப் பாடுவர்.
- அவர்கள் பாடும் திருப்புகழ் முழக்கமானது, விண்ணிலுள்ள அமராவதி என்னும் நகரில் வாழும் தேவர்களின் செவிகளை அடைக்குமாறு செய்யும்.
- பல உலகங்களைக் கொண்ட இந்த அண்டத்தையே அந்த முழக்கமானது உடையும் படிச் செய்யும்.

**14. கழுகுமலை முருகன் கோவில் அமைப்பை அண்ணாமலையார் எவ்வாறு கூறியுள்ளார்?**

- கடலில் வாழும் மீன், மகரம் போன்ற உருவ அமைப்புக் கொண்ட கொடிகள் எல்லாம் சிறக்கக் கழுகுமலை முருகன் கோவில் திகழ்வதாக அண்ணாமலையார் கூறுகிறார்.

## சிறுவினா

**1. சென்னிகுளம் அண்ணாமலையார் - குறிப்பு வரைக.**

- தமிழில் முதல் முதலில் வண்ணச்சிந்து பாடியதால் 'காவடிச் சிந்தின் தந்தை' எனப் போற்றப்படுகிறார்.
- அருணகிரியின் திருப்புகழ்போல், தன் காவடிச்சிந்தைப் படைத்தளித்தவர்.
- 18 வயதில் ஊற்றுமலை குறுநிலத் தலைவர் மருதப்ப தேவரின் அரசவைப் புலவரானார்.
- வீரைத்தல புராணம், வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம், சங்கரன் திரிபந்தாதி, கருவை மும்மணிக்கோவை, கோமதி அந்தாதி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

2. **அண்ணாமலையார் முருகனை எவ்வாறெல்லாம் மறவேன் எனக் குறிப்பிடுகிறார்?**

- இந்த உலகம் போற்றும் வண்ணம் நான் தொடுத்த இந்த இனிய கவிமாலையை, மலை போன்ற தன் தோள்களில் அணிந்தவன் முருகன்.
- அவன் வலிமை மிகுந்தவன்; வேலைக் கையில் கொண்டவன்; வீரம் மிகுந்தவன்; அழகிய மயில்மீது அமர்ந்திருக்கும் வீரன்.
- தன் மனைவியாகிய குறவர் குலத்தில் தோன்றிய வள்ளியின் அழகிய பாதங்களைக் காதலால் பணிகின்ற அடியவன்.
- அடியார்கள் அவனிடம் வேண்டுவனவற்றை வாரி வழங்கிக் கொண்டு, கழுகாசலம் என்னும் நகரில் எழுந்தருளியிருக்கின்ற இத்தகைய முருகனை நான் மறவேன் என அண்ணாமலையார் கூறுகின்றார்.

3. **கழுகுமலையின் வளங்களையும் அதன் தலைவன் முருகனின் பெருமைகளையும் போற்றி அண்ணாமலையார் கூறுவதைத் தொகுத்தெழுதுக?**

- சென்னிகுளம் என்னும் நகரில் வாழ்கின்ற அண்ணாமலைதாசன் ஆகிய நான் பாடிய உலகம் போற்றும் காவடிச்சிந்து என்னும் மதுரமான கவிமாலையைத் தன் மலை போன்ற அகன்ற தோளில் சார்த்திக் கொள்கிறான் முருகன்.
- அந்தக் கழுகுமலைத் தலைவன் முருகனின் கோவில் வளத்தை நான் சொல்கிறேன்.
- கோவில் கோபுரத்தின் தங்கக் கலசம் தேவர் உலகை விட உயர்ந்து ஒளி வீசுகிறது.
- அவ்வொளி உலகங்கள் பலவற்றிலும் கண்கள் கூசும்படி பரவுகிறது.
- பெண்ணே! கடலில் வாழும் மீன், மகரம் போன்ற உருவ அமைப்புகள் கொண்ட கொடிகள் எல்லாம் சிறக்க, முருகன் கோவில் திகழ்கிறது.
- காவடி எடுக்கும் அடியார்கள் பாடும் திருப்புகழ் முழக்கமானது, அமராவதிப்பட்டினத்தில் உள்ள தேவர்களின் செவியைச் சென்று அடைக்கிறது.
- கழுகுமலை நகரின் கோட்டை உயரமானது. அதில் மேகங்கள் படிகின்றன. அவற்றிலிருந்து உருவாகும் மின்னல்கள் இருளைக் கிழிக்கின்றன.
- தமது நெஞ்சம் நெகிழ்ந்துருக, தங்கத்தினும் மேலான காவடியைத் தோளில் தூக்கிக் கனலில் உருகிய மெழுகென முருகனை நோக்கி வரும் பக்தர்கள் அருளைப் பெறுவார்; இன்பம் அடைவார்.

## கவிதைப்பேழை! குறுந்தொகை - வெள்ளிவீதியார்

### பலவுள் தெரிக

1. **நன்று நன்று - இலக்கணக்குறிப்புத் தருக.**

அ) உம்மைத் தொகை ஆ) இரட்டைக்கிளவி இ) சிறப்பும்மை ஈ) அடுக்குத்தொடர்

**[ஈ) அடுக்குத்தொடர்]**

2. **பிரிந்தோர் இலக்கணக்குறிப்புத் தருக.**

அ) தொழிற்பெயர் ஆ) விளித்தொடர்
இ) வினையாலணையும் பெயர் ஈ) வினையெச்சம் **[இ) வினையாலணையும் பெயர்]**

3. **பிரிந்தோர் - சரியான பகுபத வடிவத்தினைச் சுட்டுக.**

அ) பிரி + ந் + த் + ஓர் ஆ) பிரி + த் + த் + ஓர்
இ) பிரி + த்(ந்)+ த் + ஓர் ஈ) பிரி + த்(ந்)+ ஓர் **[இ) பிரி + த்(ந்)+ த் + ஓர்]**

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



4. **தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர் - இவ்வரிகளில் சிதவலர் என்பது யாரைக்குறிக்கிறது?**
அ) சிதைப்பவர் ஆ) தலைவன்
இ) தலைப்பாகை அணிந்தவர் ஈ) சிந்திப்பவர் **[இ) தலைப்பாகை அணிந்தவர்]**

5. **திருமண வாழ்வால் விளைவன எவை என குறுந்தொகை கூறுகிறது?**
அ) அன்பும், அறனும் ஆ) வம்பும், வழக்கும்
இ) இன்பமும், துன்பமும் ஈ) வசதியும், வாய்ப்பும் **[அ) அன்பும், அறனும்]**

6. **சங்ககாலப் பெண்பால் புலவர்களுள் ஒருவர்**
அ) மணிமேகலை ஆ) ஆண்டாள் இ) வெள்ளிவீதியார் ஈ) காரைக்காலம்மையார்
**[இ) வெள்ளிவீதியார்]**

7. **தொகை நூல்களுள் முதலில் தொகுக்கப்பட்ட நூல் எது?**
அ) ஐங்குறுநூறு ஆ) குறுந்தொகை இ) நற்றிணை ஈ) அகநானூறு
**[ஆ) குறுந்தொகை]**

8. **தலைவியின் பெற்றோர் மணம் மறுத்தால் எங்கு முறையிடலாம் என்று தோழி கூறினாள்?**
அ) அரசவையில் ஆ) இருவீட்டாரிடம் இ) கிராமத்துத் தலைவரிடம் ஈ) சான்றோர் மன்றத்தில்
**[ஈ) சான்றோர் மன்றத்தில்]**

9. **'தண்டு' என்பதன் பொருள் யாது?**
அ) ஊன்றுகோல் ஆ) துலாக்கோல் இ) கம்பு ஈ) மரத்தடி **[அ) ஊன்றுகோல்]**

10. **வெள்ளிவீதியார் சங்கத்தொகை நூல்களில் பாடியுள்ள பாடல்கள் எத்தனை?**
அ) 10 ஆ) 13 இ) 12 ஈ) 15 **[ஆ) 13]**

11. **நமது பாடப்பகுதியான குறுந்தொகை பாடல் காட்டும் அக்கால சமூக நிகழ்வு**
அ) நட்பு ஆ) போர் இ) பொருளீட்டல் ஈ) மணக்கொடை கொடுத்தல்
**[ஈ) மணக்கொடை கொடுத்தல்]**

12. **'அம்ம வாழி' எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல் யார் - யாரிடம் கூறியது?**
அ) பாகன் - தலைவனிடம் ஆ) தோழி - தலைவியிடம்
இ) நற்றாய் - தோழியிடம் ஈ) தோழி - தலைவனிடம் **[ஆ) தோழி - தலைவியிடம்]**

13. **பிரிந்தோர், நன்று நன்று - இலக்கணக்குறிப்பு தருக.**
அ) தொழிற்பெயர், இரட்டைக்கிளவி ஆ) வினையெச்சம், அடுக்குத்தொடர்
இ) வினையாலணையும் பெயர், அடுக்குத்தாடர் ஈ) பெயரெச்சம், அடுக்குத்தொடர்
**[இ) வினையாலணையும் பெயர், அடுக்குத்தொடர்]**

14. **'தண்டுடை' என்னும் சொல்லுக்குரிய புணர்ச்சி விதிகள்**
(i) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் (ii) ல, ள வேற்றுமையில் வலி வரின் றடவும் ஆகும்
(iii) உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (iv) இஈஐ வழி யவ்வும்
அ) i, iii - சரி ஆ) i, ii சரி இ) iv - சரி ஈ) இவற்றில் எதுவுமில்லை
**[அ) i, iii - சரி]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



15. **‘சிதவல்’ என்பது**
அ) சிதைதல் ஆ) சிறப்பு இ) தண்டு ஈ) தலைப்பாகை
**[ஈ) தலைப்பாகை]**

16. குறுந்தொகைக்கு வழங்கும் அடைமொழி யாது? **நல்ல**
17. குறுந்தொகையின் பாடல்கள் எத்தனை? 401
18. குறுந்தொகைக்குக் கடவுள் வாழ்த்து பாடியவர் யார்? **பாரதம் பாடிய பெருந்தேவனார்**
19. தொகை நூலில் வெள்ளிவீதியார் எத்தனை பாடல்களைப் பாடியுள்ளார்? 13
20. குறுந்தொகையைத் தொகுத்தவர் யார்? **பூரிக்கோ**
21. வெள்ளிவீதியார் என்பவர் ஒரு ---- புலவர் **பெண்பாற்புலவர்**
22. சங்க இலக்கியத்தில் திருமணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை? **களவு, கற்பு என இருவகைப்படும்.**

## குறுவினா

1. **குறுந்தொகை - பெயர்க்காரணம் தருக.**
   - குறுமை + தொகை = குறுந்தொகை
   - 4 அடி முதல் 8 அடிகள் வரை குறுகிய ஆசிரியப்பாக்களைக் கொண்டு தொகுக்கப்பட்ட நூல்.
   - 400 பாடல்கள் உள்ளமையால் ‘குறுந்தொகை நானூறு’ எனவும் வழங்கப்படும்.

2. **வெள்ளிவீதியார் - குறிப்பு வரைக.**
   - சங்ககாலப் பெண் புலவர்களில் ஒருவர்.
   - சங்கத்தொகை நூல்களில் 13 பாடல்கள் வெள்ளி வீதியாரால் பாடப்பட்டவை.
   - அவற்றுள் குறுந்தொகையில் 8 பாடல்கள் வெள்ளி வீதியாரால் பாடப்பட்டவை.
   - இவர் மதுரையில் வெள்ளியம்பலத் தெருவில் வாழ்ந்தமையால் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

3. **குறுந்தொகை மூலம் நீவிர் அறியும் செய்திகள் யாவை?**
   - குறுந்தொகை மூலம் பண்டைத் தமிழரின் ஒழுக்கம், வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், பண்பாடு, நாகரிகச் சிறப்பு முதலிய செய்திகளை அறியலாம்.

4. **குறுந்தொகைத் தலைவன் பரிசுப் பொருட்களை எவ்வாறு அனுப்பினான்?**
   - தலைப்பாகை அணிந்து, கையில் தண்டுடன் சென்ற முதியவர்கள் வாயிலாகப் பெண் வீட்டார் போதும் போதும் என்று கூறும் அளவிற்குப் பரிசுப்பொருட்களைக் குறுந்தொகை தலைவன் அனுப்பினான்.

5. **சிதவல் என்பதன் பொருள் என்ன?**
   - சிதவல் - தலைப்பாகை.

## சிறுவினா

1. **‘பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர்’ - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம்:**

வெள்ளி வீதியார் என்னும் புலவர் இயற்றிய ‘அம்ம வாழி’ என்னும் குறுந்தொகை பாடலில் இவ்வடி இடம் பெற்றுள்ளது.

**பொருள்:**

‘பிரிந்தோரைச் சேர்த்து வைப்போர் உள்ளனர்’ என்பதே இப்பாடல் வரியின் பொருளாகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**விளக்கம்:**

முன்பு, தலைவன், தலைவி ஆகியோர் கொண்டிருந்த காதலுறவைத் தலைவியைப் பெற்றோரும், அவளுக்கு நெருங்கிய உறவினரும் அறிந்தனர். அதனால் அவர்கள் வீட்டை விட்டுச் செல்லாதவாறு, வீட்டிலேயே சிறையிட்டனர். இவ்வாறு அன்று, 'புணர்ந்தோர்ப் பிரிப்போராய்' இருந்தனர், தலைவியைப் பெற்றோரும், அவள் உறவினரும். ஆனால், இன்று அவர்களே தலைவியைத் தலைவனுக்கு மணம் முடித்துத் தர இசைவதன் மூலம் 'பிரிந்தோர்ப் புணர்ப்போர்' ஆயினர் என்கிறாள் - தோழி.

2. **''நன்று நன்று என்னும் மாக்களோடு இன்று பெரிதென்னும் ஆங்கண தலைவயே''- இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தரு.**

**இடம்:**

வெள்ளி வீதியார் என்னும் பெண்பாற்புலவர் இயற்றிய 'அம்ம வாழி' என்னும் குறுந்தொகை பாடலில் இவ்வடி இடம் பெற்றுள்ளது.

**பொருள்:**

தலைவன் வீட்டு வாயில் பகுதியில், தலைவன் வீட்டாரும், தலைவி வீட்டாரும் மணம் குறித்துப் பேசினர். அப்போது தலைவியின் உறவினர் கூறுவதற்கெல்லாம் தலைவன் உறவினர் ''நன்று நன்று'' என்று கூறி மகிழ்ந்தனர். தலைவியின் உறவினரோ, ''உங்கள் வருகை எங்களுக்கு பெரும் பேறாய்'' அமைந்தது என்றனர்.

**விளக்கம்:**

தலைவியே, நம் உறவினரும், தலைவன் வீட்டு உறவினரும், மணம் குறித்துப் பேசிக் கொண்டிருக்கின்றனர். நம் உறவினர் கூறுவதற்கெல்லாம், 'நல்லது நல்லது' என்று தலைவன் வீட்டார் தலையசைத்துக் கூறுகின்றனர். அவர்களிடம் நம் உறவினர்களோ, ''உங்கள் வருகை எமக்கும் பெரும் பேறாய் அமைந்தது'' என்கின்றனர். 'இதன்வழி, உங்கள் திருமணத்தை நடத்திட இரு வீட்டாரும் இசைந்தனர் என்பது வெளிப்படுகிறது எனக் கூறித் தோழி தலைவியை மகிழ்வித்தாள்.

3. **குறுந்தொகை பாடலில் வரும் தோழி தலைவியை எவ்வாறு தேற்றினாள்? (அல்லது) தலைவன் வரவை நமர் ஏற்றுக் கொண்டனர், ''நீ கவலை ஒழிவாயாக'' என்று தோழி தலைவியை நோக்கி கூறியவற்றை எழுதுக.**

- மணம் பேசத் தலைவன் சார்பாக வந்துள்ளவர்களைத் தன் பெற்றோர் மறுத்துத் திருப்பி அனுப்பி விடுவார்களோ எனத் தலைவி கவலை கொண்டாள். அவளைத் தேற்றும் வகையில் தோழி, ''ஊர் மக்களின் அவையில், முன்பு பலமுறை தலைவனின் பரிசுப் பொருள்கள் திருப்பி அனுப்பப்பட்டன.
- ஆனால்; இன்றோ, தலைப்பாகை அணிந்து, கையில் தண்டுடன் இருக்கும் முதியவர்கள் மூலமாகப் போதும் போதுமென்று கூறத்தக்க அளவிற்குப் பரிசுப் பொருள்களைத் தலைவன் அனுப்பி அவற்றை முன் வைத்து நம் பெற்றோருடன் பேசிக் கொண்டிருக்கின்றனர்.
- நம் உறவினர்கள் அவன் அனுப்பி வைத்துள்ள பரிசுப் பொருள்களைக் கண்டு 'நன்று நன்று' எனக் கூறி மகிழ்ந்தனர்.
- எனவே, ''தோழி! நம் ஊரில் முன்பெல்லாம் பரிசுத்தொகை போதாதென்று பிரித்துவிடப்பட்ட தலைவன் தலைவியரைப் போதிய பரிசுத்தொகை அளித்ததும், சேர்த்து வைப்போர் இருந்தனரா?'' என வினா எழுப்பி, விரைவில் மணம் முடியும் என்பதைத் தோழி உறுதிப்படுத்தித் தலைவியைத் தேற்றி மகிழ்வித்தாள்.

4. **குறுந்தொகை குறித்துச் சிறுகுறிப்பு வரைக?**

- குறுந்தொகை நானூறு எனவும் அழைக்கப்படும்.
- நல்ல குறுந்தொகை என அடைமொழி பெற்றது.
- எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- இஃது ஓர் அகநூல்.
- கடவுள் வாழ்த்து நீங்கலாக, அகத்திணை சார்ந்த 401 பாடல்களை உடையது.
- உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட பாடல்களைக் கொண்டது.
- எட்டுத்தொகையுள் முதலில் தொகுக்கப்பட்டது குறுந்தொகையே என்பர்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

- இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவார்.
- கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- இந்நூலின் கடவுள் வாழ்த்து முருகனைப் பற்றியது.
- முதன் முதலில் பதிப்பித்தவர் சி.வை.தாமோதரம்பிள்ளை.

**5. குறிஞ்சித்திணையின் முதற்பொருள், கரு, உரிப்பொருள்களை எழுதுக.**

**முதற்பொருள்**

- **நிலம்:-** மலையும் மலை சார்ந்த நிலமும்
- **பொழுது :-** பெரும்பொழுது → கூதிர், முன்பனி
  சிறுபொழுது → யாமம்

**உரிப்பொருள்**

- புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

**கருப்பொருள்**

- தெய்வம் - சேயோன் (முருகன்)
- பறவை - கிளி, மயில்
- விலங்கு - சிங்கம், புலி, கரடி, யானை
- ஊர் - சிறுகுடி
- பறை - தொண்டகப்பறை
- யாழ் - குறிஞ்சியாழ்
- பண் - குறிஞ்சிப்பண்

**கவிதைப்பேழை! புறநானூறு - கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி**

## பலவுள் தெரிக

**1. பொருத்துக.**

அ) முனிதல் - 1. சோர்வு
ஆ) துஞ்சல் - 2. முயற்சி
இ) அயர்வு - 3. வெறுத்தல்
ஈ) தாள் - 4. சோம்பல்

அ) 4 3 1 2 ஆ) 3 4 1 2 இ) 3 4 2 1 ஈ) 1 3 4 2 **[ஆ) 3 4 1 2]**

**2. தவறான இணையைச் சுட்டுக.**

அ) அம்ம - அசைநிலை
ஆ) துஞ்சல் - தொழிற்பெயர்
இ) முயலா - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
ஈ) உண்டல் - பெயரெச்சம் **[ஈ) உண்டல் - பெயரெச்சம்]**

**3. உண்டாலம்ம எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலைப் பாடியவர் யார்?**

அ) கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி ஆ) பூரிக்கோ
இ) பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி ஈ) இளங்கோவடிகள்

**[அ) கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி]**


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**4. தமிழரின் வாழ்வியல் கருவூலமாக அமைந்த நூல் எது?**

அ) புறநானூறு ஆ) திருக்குறள் இ) நாலடியார் ஈ) குறுந்தொகை

**[அ) புறநானூறு]**

**5. புறநானூற்றுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**

அ) புறம், புறப்பாட்டு ஆ) இசைப்பாட்டு இ) அகப்பாட்டு ஈ) சூப்பாட்டு

**[அ) புறம், புறப்பாட்டு]**

**6. வழுதி என்னும் சொல் எம்மன்னர்களைக் குறிக்கிறது?**

அ) பாண்டியர்கள் ஆ) சோழர்கள் இ) சேரர்கள் ஈ) பல்லவர்கள்

**[அ) பாண்டியர்கள்]**

**7. புறநானூறு என்பது எவ்வாறு பிரியும்?**

அ) புறம் + நாலு + நூற ஆ) புற + நானூறு

இ) புறநா + னூறு ஈ) புறம் + நான்கு + நூறு **[ஈ) புறம் + நான்கு + நூறு]**

**8.கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பாடிய மற்றொரு பாடல் அமைந்த நூல் எது?**

அ) பரிபாடல் ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) புறநானூறு **[அ) பரிபாடல்]**

**9. தவறான விடையைத் தேர்வு செய்க.**

அ) நடந்திலன் - நடந்து + அல் + இன் ஆ) எழுதிலன் - எழுது + இல் + அன்

இ காணலன் - காண் + அல் + அன் ஈ) வருந்திலன் - வருந்து + இல் + அன்

**[அ) நடந்திலன் - நடந்து + அல் + இன்]**

**10. புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?**

அ) கால்டுவெல் ஆ) ஜார்ஜ் எல்.ஹார்ட் இ) ஜி.யு.போப் ஈ) வீரமாமுனிவர்

**[இ) ஜி.யு.போப்]**

**11. கடற்செலவில் இறந்த மன்னர் யார்?**

அ) இளம்பெருவழுதி ஆ) மாறன் வழுதி இ) நெடுஞ்செழியன் ஈ) சுந்தரபாண்டியன்

**[அ) இளம்பெருவழுதி]**

**12. புறநானூறு முழுவதையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?**

அ) ஜி.யு.போப் ஆ) ஜார்ஜ் எல்.ஹார்ட் இ) வீரமாமுனிவர் ஈ) கால்டுவெல்

**[ஆ) ஜார்ஜ் எல்.ஹார்ட்]**

**13. கூற்று 1** : தமிழரின் வீரத்தையும், ஈரத்தையும் மட்டும் பேசாமல், வாழ்வின் விழுமியங்களையும் பேசும் நூல் புறநானூறு ஆகும்.

**கூற்று 2** : தனக்கென வாழா மனிதர்களைப் பற்றிப் புறநானூறு பேசுகிறது.

அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று இரண்டும் சரி

இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி **[ஆ) கூற்று இரண்டும் சரி]**

**14. பொருத்தித் தேர்க.**

**அ) தாள்** - 1. முயற்சி
**ஆ) முனிதல்** - 2. வலிமை
**இ) துஞ்சல்** - 3. வெறுத்தல்
**ஈ) நோன்மை** - 4. சோம்பல்

அ) 1 3 4 2 ஆ) 4 3 2 1 இ) 1 2 3 4 ஈ) 1 2 4 3 **[அ) 1 3 4 2]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## குறுவினா

**1. கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி எழுதிய பாடல்கள் எவற்றில் இடம்பெற்றுள்ளன?**

- புறநானூறு - 1
- பரிபாடல் - 1 மொத்தம் 2 பாடல்கள் பாடியுள்ளார்.

**2. பொருள் கூறுக.**

1. முனிதல் - வெறுத்தல், 2. துஞ்சல் - சோம்பல், 3. மாட்சி - பெருமை,
4. தாள் - முயற்சி, 5. நோன்மை - வலிமை

**3. பொதுவியல் திணை என்றால் என்ன?**

- வெட்சி முதல் பாடாண் வரை உள்ள புறத்திணைகளில், கூறப்படாத செய்திகளையும் அத்திணைகளுக்குப் பொதுவான செய்திகளையும் தொகுத்துக் கூறுவது பொதுவியல் திணையாகும்.

**4. பொருண்மொழிக் காஞ்சித் துறை - விளக்குக.**

- மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுதல் பொருண்மொழிக்காஞ்சித் துறையாகும்.

**5. புறநானூற்றை மொழிபெயர்த்தோர் யாவர்?**

- பேராசிரியர் ஜார்ஜ் எல். ஹார்ட் THE FOUR HUNDRED SONGS OF WAR AND WISDOM (ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்)
- ஜி.யு.போப் - EXTRACTS FROM PURANANOORU சிலவற்றை மட்டும் மொழிபெயர்த்துள்ளார்.

**6. புறநானூற்றில் அறியலாகும் செய்திகள் யாவை?**

- சங்ககாலத்தில் ஆண்ட அரசர்களைப் பற்றியும், மக்களின்சமூக வாழ்க்கை பற்றியும் அறியலாம்.

**7. புறநானூற்றைப் பதிப்பித்து வெளியிட்டவர் யார்? ஏன்?**

- உ.வே.சா.1894-ல் பதிப்பித்து வெளியிட்டார்.
- சுவடிகளில் உள்ள இப்பாடல்கள் அழிந்துவிடாமல் இருக்க, ஆய்ந்து இப்பாடல்களைச் சேகரித்து அச்சிட்டார்.

**8. இளம்பெருவழுதி பெயர்க்காரணம் - விளக்குக.**

- பாண்டிய வழுதிகள் பலர் இருப்பினும், அரிய குணங்கள் அனைத்தையும் இளமையில் பெற்றதால், இவரை இளம் பெரு வழுதி என அழைத்தனர்.

**9. முனிவிலர் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

முனி + வ் + இல் + அர்

**முனி** - பகுதி

**வ்** - உடம்படுமெய் சந்தி

**இல்** - எதிர்மறை இடைநிலை

**அர்** - பலர்பால் நினைமுற்று விகுதி



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**10. புணர்ச்சி விதி தருக. இயைவதாயினும், புகழெனில்**

**இயைவது + ஆயினும்**

- உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் - இயைவத் + ஆயினும்
- உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்யே - இயைவதாயினும்

**புகழ் + எனில்**

- உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே - புகழ் + எனில் = புகழெனில்

---

**11. தமிழர் எதனை உண்ணார், எதற்கு அஞ்சுவர் எனப் புறநானூறு கூறுகிறது?**

- இந்திரனுக்குரிய அமிழ்தமே கிடைப்பதாயினும் தமிழர்கள் தனித்து உண்ணும் பண்பினை உடையவராக இருக்க மாட்டார்கள்.
- உலகம் அஞ்சுவனவற்றுக்குத் தாமும் அஞ்சி நடப்பர் எனப் புநறானூறு கூறுகிறது.

---

**12. உலகம் எதனால் நிலை பெற்றிருக்கிறது?**

- தங்கள் வாழ்வினைப் பெரிதாகக் கருதாமல், பிறர் நன்மையையே நாடுபவர்கள் பலர் இவ்வுலகில் இருப்பதலால்தான் இவ்வுலகம் நிலை பெற்றிருக்கிறது.

---

**13. புறநானூறு எவற்றைப் பேசுகிறது?**

- தமிழரின் வாழ்வியல் கருவூலமான புறநானூறு, வீரத்தையும் ஈரத்தையும் மட்டும் பேசாமல், வாழ்வின் விழுமியங்களையும் பேசுகிறது.

---

## சிறுவினா

**1. புறநானூற்றுப் பாடலால் அறியும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.**

- நம் முன்னோர்கள் தமக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்தவர்கள்.
- இந்திரன் கொடுத்த அமிழ்தமானாலும், பிறருக்குக் கொடுக்காமல் உண்ணமாட்டார்கள்.
- யாரையும் வெறுக்கமாட்டார்கள்.
- சோம்பல் இன்றி உழைப்பார்கள்.
- பிறர் அஞ்சும் பழிக்கு அஞ்சுவார்கள்.
- புகழுக்காக உயிரையும் கொடுப்பர். உலகத்தையே பெறுவதாக இருந்தாலும், பழியை ஏற்க மாட்டார்கள்.
- இப்படிப்பட்டவர்களால்தான் உலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

---

**2. புறநானூறு - குறிப்பு வரைக.**

- இது ஒரு புற நூல்.
- புறம், புறப்பாட்டு எனவும் அழைப்பர்.
- புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்டது.
- அகவற்பாக்களால் ஆனது.
- இதன் சிறப்பு:- தமிழ்க் கருவூலம், தமிழர் வரலாற்றுக் கருவூலம்.
- கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



- புறநானூற்றில் 11 திணைகள் இடம் பெற்றுள்ளன.
- புறநானூற்றில் இடம் பெறாத திணை உழிஞைத் திணை.
- புறநானூற்றில் 65 துறைகள் இடம் பெற்றுள்ளன.
- புறநானூற்றை உ.வே.சா. 1894ஆம் ஆண்டு முதன் முதலாக அச்சில் பதிப்பித்து வெளியிட்டார்.
- புறநானூற்றுப் பாடல்கள் சங்ககாலத்தில் ஆண்ட அரசர்களைப் பற்றியும் மக்களின் சமூக வாழ்க்கை பற்றியும் எடுத்துரைக்கின்றன.

---

3. **உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்**
**தமியர் உண்டலும் இலரே - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம்:**

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி எழுதிய ‘உண்டால் அம்ம’ எனத் தொடங்கும் புறநானூற்ற பாடலில் இவ்வரி இடம்பெற்றுள்ளது.

**பொருள்:**

‘தேவர்களுக்குரிய அமிழ்தம் தமக்குக் கிடைத்தால் கூட அதன் இனிமை கருதித் தாமே தனித்து உண்ண மாட்டார்கள். இத்தகையோராலேயே இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது’ - என்பது இதன் பொருளாகும்.

**விளக்கம்:**

அமிழ்தத்தை உண்பவர்கள் சாகமாட்டார்கள். அத்தன்மை உடைய தேவர்களின் உணவு தமக்குக் கிடைத்தாலும், தமக்கென வாழாப் பெரியவர்கள் தாம்மட்டும் அதைத் தனித்து உண்ணமாட்டார்கள். பலரோடு அதனைப் பகிர்ந்து உண்பார்கள். இத்தகையவர்கள் இருப்பதால்தான் இந்த உலகம் நிலைபெற்றுள்ளது.

---

4. **‘‘புகழெனின் உயிரும் கொடுக்குவர், பழியெனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர்’’ - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம்:**

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி எழுதிய ‘உண்டால் அம்ம’ எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில் இவ்வடி இடம்பெற்றுள்ளது.

**பொருள்:**

புகழ் கிடைப்பதாயின் தம் உயிரையும் கொடுப்பர். பழி கிடைப்பதாயின் அதனால் உலகம் முழுவதும் கிடைப்பதாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

**விளக்கம்:**

தங்கள் வாழ்வைப் பெரிதாகக் கருதாமல், பிறர் வாழ்வை நாடும் பண்பில் சிறந்தவர்கள். புகழ் உண்டாகுமென்றால் அதற்காகத் தமது உடல் பொருள் ஆகியவற்றை மட்டுமில்லாமல், தம் அரிய உயிரையும் கூடக் கொடுப்பர். ஆனால், செய்யத்தகாத செயல்களைச் செய்து பழி ஏற்படும் என்றால் இவ்வுலகமே தமக்குக் கிடைப்பதாக இருந்தாலும் அதனை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

---

5. **கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பற்றி சிறுகுறிப்பு வரைக?**
    - பாண்டிய மன்னருள் பெருவழுதி என்னும் பெயரில் பலர் இருந்தனர்.
    - அரிய பண்புகள் அனைத்தையும் நம் இளமைக் காலத்திலேயே பெற்றிருந்த காரணத்தால் அக்கால மக்கள், இவரை இளம்பெருவழுதி என்று அழைத்தனர்.
    - கடற்பயணம் ஒன்றில் இறந்து போனமையால் இவர், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்று பிற்காலத்தவரால் அழைக்கப்படுகின்றார்.
    - இவரது பாடல்கள் புறநானூற்றில் ஒன்றும் பரிபாடலில் ஒன்றும் கிடைக்கப்பெற்றுள்ளன.

---



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

6. **இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருப்பதற்கு கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி கூறும் காரணங்களைக் கூறுக?**

- தமக்காக உழைக்காமல் பிறருக்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள், இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அஃது உயிர்க்காப்பது என்பதற்காகத் தனித்து உண்ணமாட்டார்கள்.
- யாரையும் வெறுக்க மாட்டார்கள்; சோம்பலின்றிச் செயல்படுவார்கள்.
- பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்கள்.
- புகழ்வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பார்கள்.
- உலகம் முழுவதும் கிடைப்பதாயிருந்தாலும் பழிவரும் செயல்களைச் செய்யார். எதற்கும் மனம் தளர மாட்டார்கள்.
- இத்தகைய சிறப்புடையோர் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

## விரிவானம் வாடிவாசல் - சி.சு.செல்லப்பா

### பலவுள் தெரிக

1. **சரியான நிறுத்தற்குறியினைச் சுட்டுக.**

அ) நீ மனுசனுக்குப் பொறக்கல்லேடா, புலிக்குப் பொறந்த பய! வேறெத்தைச் சொல்றது'' என்றார்.
ஆ) ''நீ மனுசனுக்குப் பொறக்கல்லேடா, புலிக்குப் பொறந்த பய! வேறெத்தைச் சொல்றது'' என்றார்.
இ) நீ மனுசனுக்குப் பொறக்கல்லேடா, புலிக்குப் பொறந்த பய! வேறெத்தைச் சொல்றது! என்றார்.
ஈ) நீ! மனுசனுக்குப் பொறக்கல்லேடா!, புலிக்குப் பொறந்த பய! வேறெத்தைச் சொல்றது!'' என்றார்.

**[ஆ) ''நீ மனுசனுக்குப் பொறக்கல்லேடா, புலிக்குப் பொறந்த பய! வேறெத்தைச் சொல்றது'' என்றார்]**

2. **கொச்சைச் சொற்களை நீக்கி எழுதுக.**

பிடியை உட்டிராதே, பிச்சி.
**பிடியை விட்டுவிடாதே, பிச்சி**

3. **வாடிவாசல் குறும் புதினத்தின் ஆசிரியர் யார்?**

அ) சி.சு.செல்லப்பா ஆ) ஜெயமோகன் இ) முத்துலிங்கம் ஈ) இந்திரன்

**[அ) சி.சு.செல்லப்பா]**

4. **தவறான கருத்தினைச் சுட்டுக.**

அ) 'எழுத்து' இதழினைத் தொடங்கியவர் சி.சு.செல்லப்பா ஆவார்.
ஆ) சாகித்ய அகாடமி விருதுபெற்ற சி.சு.செல்லப்பாவின் நூல் - சுதந்திர தாகம் 2001 ஆகும்.
இ) சி.சு.செல்லப்பா உதவி ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்கள் சந்திரோதயம், தினமணி
ஈ) தகப்பன் கொடி, மீள்கோணம் சி.சு.செல்லப்பாவின் படைப்புகளாகும்.

**[ஈ) தகப்பன் கொடி, மீள்கோணம் சி.சு.செல்லப்பாவின் படைப்புகளாகும்]**

5. **பிச்சியின் ஊர் எது?**

அ) அவணியாபுரம் ஆ) அவளியாபுரம் இ) வாடிபுரம் ஈ) உசிலனூர் **[இ) வாடிபுரம்]**

6. **பிச்சியின் தந்தை யார்?**

அ) மருதன் ஆ) முத்தன் இ) அம்பிலி ஈ) காரி **[இ) அம்பிலி]**

7. **சி.சு.செல்லப்பா தொடங்கிய இதழின் பெயர் என்ன?**

அ) கணையாழி ஆ) குயில் இ) சொல் ஈ) எழுத்து **[ஈ) எழுத்து]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



8. **சி.சு.செல்லப்பாவின் எந்தப் புதினம் சாகித்திய அகாதெமி விருது பெற்றது?**
அ) வாடிவாசல் ஆ) தாகம் இ) சுதந்திர தாகம் ஈ) ஜீவனாம்சம்
**[இ) சுதந்திர தாகம்]**

9. **சி.சு.செல்லப்பா சாகித்திய அகாதெமி விருது பெற்ற வருடம் எது?**
அ) 2000 ஆ) 2001 இ) 2002 ஈ) 2004 **[ஆ) 2001]**

10. சிறுகதைக்கும் புதினத்திற்கும் இடைப்பட்ட வடிவம் எது? **குறும்புதினம்**

11. 'ஏறு தழுவுதல்' பற்றிக் குறிப்பிடும் எட்டுத்தொகை நூல் எது? **கலித்தொகை**

12. வாடிவாசல் கதையில் 'பிச்சி' அடக்கிய காளையின் பெயர் என்ன? **காரி**

## குறுவினா

1. **சி.சு.செல்லப்பாவின் குறிப்பிடத்தக்க படைப்புகளைக் கூறுக.**
   - வாடிவாசல், சுதந்திரதாகம், ஜீவனாம்சம், பி.எஸ்.ராமையாவின் சிறுகதைப் பாணி, தமிழ்ச்சிறுகதை பிறக்கிறது.

## இனிக்கும் இலக்கணம் பகுபத உறுப்புகள்

## பலவுள் தெரிக

1. **விகுதி பெறாத ஏவல் வினையாக வருவது**
அ) இடைநிலை ஆ) பகுதி இ) வினைச்சொல் ஈ) வினைமுற்று **[ஆ) பகுதி]**

2. **ஓர் ஆக்கப்பெயர் சொல்லில் பெயர்ப்பகுதியை விகுதியோடு இணைப்பதற்கு வரும் இடைநிலை**
அ) ஆக்க இடைநிலை ஆ) எதிர்மறை இடைநிலை
இ) பெயர் இடைநிலை ஈ) கால இடைநிலை **[இ) பெயர் இடைநிலை]**

3. **பகுபத உறுப்புகளில் அடங்காமல் ஏழாவது உறுப்பாக வரும் புறத்துறுப்பு**
அ) இலக்கணப்போலி ஆ) தனிநிலை இ) புணர்ச்சி ஈ) எழுத்துப்பேறு
**[அ) இலக்கணப்போலி]**

4. **பகுபத உறுப்புகளில் பொருள் இல்லாத உறுப்பு**
அ) விகுதி ஆ) இடைநிலை இ) சாரியை ஈ) சந்தி **[இ) சாரியை]**

5. **பகுபதத்தில் பொருள் தரும் உறுப்புகள்**
அ) சாரியை, சந்தி, விகாரம்ஆ) எச்சம், முற்று, சாரியை
இ) பகுதி, விகுதி, இடைநிலை ஈ) இடைநிலை, சந்தி, விகாரம்
**[இ) பகுதி, விகுதி, இடைநிலை]**

6. **கீழ்க்காண்பவற்றுள் எது காலம் காட்டாது?**
அ) இடைநிலை ஆ) வினைச்சொல் இ) கால இடைநிலை ஈ) எழுத்துப்பேறு
**[ஈ) எழுத்துப்பேறு]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



7. **வியங்கோள், தொழிற்பெயர், பெயரெச்சம், வினையெச்சம் போன்ற பல்வேறு இலக்கண பொருண்மைகளை உணர்த்தப் பயன்படுவது**

அ) சந்தி ஆ) சாரியை இ) விகுதி ஈ) இடைநிலை **[இ) விகுதி]**

8. **கூற்று 1 :** சந்தி என்பதற்குத் தமிழில் புணர்ச்சி என்று பெயர்.
**கூற்று 2 :** சந்தி, பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவது பெரு வழக்காகும்.
அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று இரண்டும் சரி
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று இரண்டும் தவறு **[ஆ) கூற்று இரண்டும் சரி]**

9. **கூற்று 1 :** 'அன்' என்பது விகுதியாக வரும்போது 'அன்' என்பதே சாரியையாக வரும்.
**கூற்று 2 :** ஆன், ஆள், ஆர் விகுதிகள் வரும்போது 'அன்' சாரியையாக வராது.
அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி
இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று இரண்டும் சரி **[ஈ) கூற்று இரண்டும் சரி]**

## குறுவினா

1. **பதம் என்பதன் பொருள் யாது?**
   - பதம் என்பதன் பொருள் சொல் ஆகும்.

2. **பகுபதம் என்றால் என்ன?**
   - பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும் பிரித்துப் பொருள் தரும் நிலையில் இருந்தால் அது பகுபதம் எனப்படும்.

3. **பகாபதத்திற்கு உரியவை யாவை?**
   - பகாபதத்திற்கு உரியவை இடைச்சொல்லும், உரிச்சொல்லும் ஆகும்.

4. **பகுதியை என்னவென்று அழைப்பர்?**
   - பகுதியை முதனிலை என்றும் அழைப்பர்.

5. **பெயர் இடைநிலையை விளக்குக.**
   - பெயர்ப் பகுபதத்தில் பெயர்ப்பகுதியை விகுதியோடு இணைப்பதற்கு வரும் இடைநிலை பெயர் இடைநிலை ச், ஞ், ந், த், வ் ஆகிய மெய்கள் பெயர் இடைநிலைகளாக வரும்.
   - எ.கா. இளைஞர் - இளை + ஞ் + அர்

6. **சந்தி என்பதற்கு வேறு பெயர் யாது? உடம்படுமெய் சந்தி எழுத்துகள் எவை?**
   - சந்தி என்பதற்குப் புணர்ச்சி என்றும் வேறு பெயர் உண்டு.
   - உடம்படுமெய் சந்திகள் ய், வ் ஆகும்.

7. **சந்தியாக வரும் எழுத்துகள் யாவை?**
   - பெரும்பாலும் த், ப், க் ஆகியவை சந்தியாக வரும் எழுத்துகளாகும்.

8. **பகாப்பதம்- சான்றுடன் விளக்குக.**
   - பகுதி, விகுதி முதலிய உறுப்புகளாய்ப் பிரிக்கமுடியாத, பிரித்தால் பொருள் தராத இடுகுறியாய் அமைந்த சொல் பகாப்பதம் எனப்படும்.
   - **எ.கா:** நாடு, மரம்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**9. பகாப்பதம் எத்தனை வகைப்படும்? எடுத்துக்காட்டுத் தருக.**

பகாப்பதம் நான்கு வகைப்படும். அவை,

- பெயர்ப்பகாப்பதம் - தலை, கால்
- வினைப்பகாப்பதம் - பாடு, ஆடு
- இடைப்பகாப்பதம் - ஆல், மற்று
- உரிப்பகாப்பதம் - சால, உறு ஆகும்.

**10. பெயரிடைநிலை என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.**

- பெயர்ப்பகுபதத்தில் வரும் இடைநிலை பெயரிடைநிலை எனப்படும்.
- **எ.கா:** கவிஞன் - கவி + ஞ் + அன்

  இச்சொல்லில் 'ஞ்' என்பது இடைநிலை. இது காலங்காட்டாது.

**11. எதிர்மறை இடைநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

- அல், இல், ஆ என்பன எதிர்மறை இடைநிலைகள் ஆகும்.
- **எ.கா:** கண்டிலன் - காண் ( கண்) + ட் + இல் + அன்

  செல்லல்மின் - செல் + ல் + அல் + மின்

  பேசான் - பேசு + ஆ + ஆன்

## வாழ்வியல் — திருக்குறள் — திருவள்ளுவர்

### பலவுள் தெரிக

**1. திருக்குறளுக்கு உரை எழுதாதவரைக் கண்டறிக.**

அ) மணக்குடவர் ஆ) மறைமலையடிகள் இ) காலிங்கர் ஈ) பரிமேலழகர்

**[ஆ) மறைமலையடிகள்]**

**2. திருக்குறளின் சிறப்பை விளக்கும் நூல் எது?**

அ) வள்ளுவமும் வாழ்வியலும் ஆ) குறளோசை

இ) திருவள்ளுவ கீதம் ஈ) திருவள்ளுவ மாலை **[ஈ) திருவள்ளுவ மாலை]**

| | | |
|---|---|---|
| 3. | திருக்குறளின் எத்தனை இயல்கள் உள்ளன? | 9 |
| 4. | அறம், பொருள், இன்பம் - பாலுக்குரிய இயல்களை குறிப்பிடுக. | 4, 3, 2 |
| 5. | அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை? | 38 |
| 6. | பொருட்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை? | 70 |
| 7. | காமத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை? | 25 |
| 8. | பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் - அதிகாரங்களைக் குறிப்பிடுக. | 4,20,13,1 |
| 9. | அரசியல், அமைச்சியல், ஒழிபியல் - அதிகாரங்களைக் குறிப்பிடுக. | 25, 32, 13 |
| 10. | களவியல், கற்பியல் - அதிகாரங்களைக் குறிப்பிடுக. | 7, 18 |
| 11. | திருக்குறள் எந்தக் கணக்கில் அடங்கும்? | **பதினெண்கீழ்க்கணக்கு** |
| 12. | குறள் என்பது-- | **ஈரடி வெண்பா** |
| 13. | திருக்குறளின் சிறப்பினைக் கூறும் நூல்---- | **திருவள்ளுவமாலை** |
| 14. | திருக்குறளில் எத்தனை சீர் அமையப்பெற்றுள்ளது? | 7 |
| 15. | உலக மொழிகள் அனைத்திலும் மொழிப்பெயர்க்கப்பட்ட நூல் எது? | **திருக்குறள்** |
| 16. | திருக்குறளுக்கு வழங்கிய உரைகளுள் சிறந்த உரை எனக்குறிப்பிடுவது யாருடைய உரையை? | **பரிமேலழகர்** |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## குறுவினா

1. **திருக்குறள் 'உலகப்பொதுமறை' எனப் போற்றப்படக் காரணம் என்ன?**
   - உலக மக்கள் அனைவருக்கும், எந்தக் காலத்திற்கும் எவ்வகையிலும் பொருந்தும் வகையில் அமைந்தமையால் இவ்வாறு போற்றப்படுகிறது.

2. **திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் எவை?**
   - உலகப்பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, முப்பால், உத்தரவேதம், தெய்வநூல்.

3. **திருக்குறளுக்கு உரை எழுதியவர்கள் சிலரைக் குறிப்பிடுக.**
   - பரிமேலழகர், மணக்குடவர், காலிங்கர், பரிதி, பரிப்பெருமாள், தருமர், தாமத்தர், நச்சர், திருமலையர், மல்லர்.

4. **திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.**
   - தேவர், நாயனார், தெய்வப்புலவர், செந்நாப்போதர், பெருநாவலர், பொய்யில் புலவர், பொய்யாமொழிப்புலவர், மாதானுபங்கி, முதற்பாவலர்.

5. **'எவன் துன்பம் அடைதல் இலன்' - என்று குறள் கூறுகிறது? (அல்லது) 'நோதல் இலன்' - எவன்?**
   - எந்த எந்தப் பொருளினிடத்துமிருந்தும், பற்றை விட்டு நீங்கினவள், அந்த அந்தப் பொருளால் துன்பம் அடைதல் இல்லை என்று குறள் கூறுகின்றது.

6. **'ஆரா இயற்கை அவா' - விளக்குக.**
   - ஆசை ஆனது எதனை நாம் பெற்றிருந்தாலும், எதனை நாம் அனுபவித்தாலும் மேலும் ஓர் இன்பம் இருப்பதாய் செல்லும் இயல்பினை உடையது.
   - அதனால், ஆசை 'ஆரா இயற்கை அவா' என்றழைக்கப்பட்டது.

7. **மலையினும் மாணப்பெரிது எது?**
   - தனக்குரிய நேர்வழியில் மாறாது, அடக்கமாக இருப்பவரின் உயரிய தோற்றமானது, மலையின் மாண்பைக் காட்டிலும் பெரியதாகும்.

8. **உயிர்வாழ்வார், செத்தார் - எவர் எவர்?**
   - உலக நடைமுறையோடு பொருந்தி ஒத்து வாழ்பவரே உயிர் வாழ்பவராவார்.
   - உலக நடைமுறையோடு பொருந்தி வாழாதவர் செத்தவராவார்.

9. **உலகில் நிலைத்து நிற்பதாகக் குறள் கூறுவது யாது?**
   - எதற்கும் ஈடு இணையில்லாத உயர்ந்த புகழே அல்லாமல், இந்த உலகத்தில் ஒப்பற்று உயர்ந்து நிலைத்து நிற்பது வேறு எதுவுமில்லை எனக்குறள் கூறுகிறது.

10. **வாழ்வார், வாழாதவர் எவர் எவர் என வள்ளுவர் கூறுகிறார்?**
    - எந்தவிதமான பழியும் இல்லாமல் வாழ்பவரே வாழ்பவராவார்.
    - புகழ் இல்லாமல் வாழ்பவர், வாழாதவராவார்.

11. **தவமிருப்பார் பெறும் பயன் யாது?**
    - பொன்னை நெருப்பில் புடம் இட்டுச் சுடும்போது, அது மாசு நீங்கி ஒளிவிடும்.
    - அதுபோலத் தவம் இருந்து, துன்பத்தில் தங்களை வருத்திக் கொள்பவர்களுக்கு, ஞான ஒளி கிடைக்கும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**12. இவ்வுலகு எத்தகைய பெருமையை உடையது?**

- நேற்று உயிருடன் இருந்தவன், இன்று இல்லை என்று சொல்லும் நிலையாமைப் பெருமையை உடையது இவ்வுலகம்.

**13. இன்பம் எப்போது இடைவிடாது பெருகும்?**

- பேராசை என்னும் பெருந்துன்பம் தொலைந்தால் இன்பம் என்பது இடைவிடாது பெருகும்.

**14. விரைந்து கெடுபவன் யார்?**

- பிறருடன் ஒத்துப் போகாதவன்.
- தன் வலிமையின் அளவை அறியாதவன்.
- தன்னைப் பெரிதாக நினைப்பவன்.

**15. யார்க்கு அருவினை என்பது இல்லை?**

- உரிய கருவிகளுடன், தக்க காலம் அறிந்து செயலைச் செய்பவனுக்கு, செய்தற்கு அரிய செயல் என்று எதுவும் இல்லை.

**16. அரிய செயலை எப்போது செய்து முடிக்க வேண்டும்?**

- கிடைப்பதற்கு அரிய காலம் கிடைத்தால், செய்து முடிப்பதற்கு அரிய செயலை அப்போதே செய்து முடிக்க வேண்டும்.

**17. நாவை ஏன் காக்க வேண்டும்?**

- ஒருவர் எதைக் காக்கா விட்டாலும் நாவைக் காக்க வேண்டும். அவ்வாறு காக்காவிட்டால் சொல் குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்.

**18. நிற்பதொன்று இல் எது? அல்லது உலகில் நிலைத்து நிற்பது எது?**

- இணையற்ற உயர்ந்த புகழைப்போல, உலகத்தில் ஒப்பற்ற ஒன்றாக நிலைத்து நிற்பது வேறொன்றும் இல்லை.

**19. தோன்றாமை நன்று - ஏன்?**

- தோன்றினால் புகழ் தரும் பண்புகளுடன் தோன்றுக!
- இல்லையெனில் தோன்றாமல் இருப்பதே நல்லது.

**20. இங்கேயே முயன்று பார்க்கக்கூடியது எது?**

- விரும்பியதை விரும்பியவாறே பெற முடியும் என்பதால் செய்ய முடிந்த தவத்தை இங்கேயே முயன்று பார்க்கலாம்.

**21. ஞானம் எப்போது வளரும்?**

- புடமிடச் சுடுகையில் ஒளிவிடும் பொன்போலத் தவமிருப்பவரைத் துன்பம் வருத்த வருத்த ஞானம் வளரும்.

**22. எத்தகைய பெருமை உடையது இவ்வுலகம்?**

- நேற்று இருந்தவன் இன்று இல்லை என்னும் நிலையாமைப் பெருமை உடையது இவ்வுலகம்.

**23. கோடியும் அல்ல பல கருதுபவர் யார்?**

- ஒருபொழுது கூட வாழ்வின் நிலையாத்தன்மையைச் சிந்திக்காதவர்கள் எண்ணும் எண்ணங்கள் கோடி அல்ல; இன்னும் மிகுதி.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**24. பற்றில்லாதவனை ஏன் பற்றி நிற்க வேண்டும்?**

- பற்றுகளை அகற்றுவதற்காகவே பற்றில்லாதவனைப் பற்றி நிற்க வேண்டும்.

**25. நிலையான இன்பம் இயல்பாய் வர என்ன செய்ய வேண்டும்?**

- ஒருபோதும் நிறைவு செய்ய முடியாத இயல்புடைய ஆசையை விட்டொழித்தால், நிலையான இன்பம் இயல்பாய் வரும்.

**26. வலிமைக்கேற்ப செயல்பட வேண்டும் எவ்வாறு?**

- மயிலிறகுதான் என்றாலும் அளவுக்கு மிகுதியாக ஏற்றினால், ஏற்றிய வண்டியின் அச்சும் முறியும். எனவே வலிமைக்கேற்பச் செயல்பட வேண்டும்.

**27. உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும் எது?**

- தன் வருமானத்தின் அளவை அறிந்து வாழதவனின் வாழ்க்கை, உள்ளது போலத் தோன்றிக் கெடும்.

**28. ஞாலம் கருதினும் கைகூடும் எப்போது?**

- உரிய காலத்தில் பொருத்தமான இடத்தில் ஒரு செயலைச் செய்தால் உலகத்தையே பெறக் கருதினாலும் கிடைத்துவிடும்.

**29. திருக்குறளின் பெருமையைப் பற்றி பேசும் நூல் எது?**

- திருக்குறளின் பெருமையைப் பற்றி பேசும் நூல் திருவள்ளுவமாலை ஆகும்.

**30. திருக்குறளின் பகுப்புகள் யாவை?**

| | பால் | அதிகாரம் | இயல் | இயல்களின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 1 | அறம் | 38 | 4 | பாயிரவியல் 04, இல்லறவியல் 20, துறவறவியல் 13, ஊழியல் 01 |
| 2 | பொருள் | 70 | 3 | அரசு இயல் 25, அமைச்சு இயல் 32, ஒழிபியல் 13 |
| 3 | இன்பம் | 25 | 2 | களவியல் 07, கற்பியல் 18 |

## சிறுவினா

**1. 'தவம்' குறித்து வள்ளுவர் கூறும் செய்திகளை எழுதுக?**

- விரும்பியதை விரும்பியவாறே பெற முடியும் என்பதால் செய்ய முடிந்த தவத்தை இங்கேயே முயன்று பார்க்கலாம்.
- புடமிடச்சுடுகையில் ஒளிவிடும் பொன் போலத் தவமிருப்பவரைத் துன்பம் வருத்த வருத்த ஞானம் வளரும்.

**2. 'துறவு' குறித்து வள்ளுவர் கூறும் செய்திகளை எழுதுக?**

- ஒருவன், எந்தெந்தப் பொருள்களிடமிருந்து பற்று நீங்கியவனாக இருக்கின்றானோ அந்தந்தப் பொருள்களால் வரும் துன்பத்தை அவன் அடைவதில்லை.
- பற்றுகளை அகற்றுவதற்காகவே பற்றில்லாதவனைப் பற்றி நிற்க வேண்டும்.

**3. 'அவா அறுத்தல்' குறித்து வள்ளுவர் கூறும் செய்திகளை எழுதுக?**

- பேராசை என்னும் பெருந்துன்பம் தொலைந்து போனால் இன்பத்தை இடைவிடாமல் பெறலாம்.
- ஒருபோதும் நிறைவு செய்ய முடியாத இயல்புடைய ஆசையை விட்டொழித்தால், நிலையான இன்பம் இயல்பாய் வரும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**4. 'நிலையாமை' குறித்து வள்ளுவர் கூறும் செய்திகளை எழுதுக?**

- நாக்கு அடைத்து, விக்கல் வந்து, உயிர்க்கு இறுதி வரும்முன், நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும்.
- நேற்று இருந்தவன் இன்று இல்லை என்னும் நிலையாமைப் பெருமை உடையது இவ்வுலகம்.
- ஒரு பொழுது கூட வாழ்வின் நிலையாத்தன்மையைச் சிந்திக்காதவர்கள் எண்ணும் எண்ணங்கள் கோடி அல்ல; இன்னும் மிகுதி.

**5. 'வலியறிதல்' குறித்து வள்ளுவர் கூறும் செய்திகளை எழுதுக?**

- செயலின் வலிமையையும் தன் வலிமையையும் பகைவனின் வலிமையையும் துணையாளர் வலிமையையும் சீர்தூக்கிச் செயல்படுக.
- மற்றவருடன் ஒத்துப்போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னைப் பெரிதாக நினைப்பவன் விரைவாகக் கெடுவான்.
- மயிலிறகுதான் என்றாலும் அளவுக்கு மிகுதியாக ஏற்றினால், ஏற்றிய வண்டியின் அச்சும் முறியும். எனவே வலிமைக்கேற்பச் செயல்பட வேண்டும்.
- தன் வருமானத்தின் அளவை அறிந்து வாழாதவனின் வாழ்க்கை, உள்ளது போலத் தோன்றிக் கெடும்.

**6. 'காலமறிதல்' குறித்து வள்ளுவர் கூறும் செய்திகளை எழுதுக.**

- உரிய கருவிகளுடன் தக்க காலம் அறிந்து செய்தால் அரிய செயல் என்று ஒன்று இல்லை.
- உரிய காலத்தில், பொருத்தமான இடத்தில், ஒரு செயலைச் செய்தால் உலகத்தையே பெறக் கருதினாலும் கிடைத்துவிடும்.
- உலகத்தை வெல்லக் கருதுபவர், கலங்காமல் உரிய காலத்துக்குக் காத்திருப்பர்.
- கிடைப்பதற்கு அரிய காலம் வாய்த்தால், அப்போதே முடிப்பதற்கு அரிய செயலைச் செய்து முடித்து விடுக.

## அணிகள்

**1. உவமையணி**

**அணி :** உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் ஒரு வாக்கியமாகவும் வந்து போல, போன்ற உவம உருபுகள் வெளிப்பட்டு நிற்பது உவமையணி எனப்படும்.

**எ.கா :** மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்

**விளக்கம் :** பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம் தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தரும் மரத்தைப் போன்றது.

**பொருத்தம் :** இவ்வாறு பெருந்தகையாளனின் செல்வத்தை மருந்து மரத்தோடு ஒப்புமைப் படுத்திக் கூறியுள்ளதால் இதில் உவமையணி பயின்று வந்துள்ளது.

**2. வேற்றுமை அணி**

**அணி :** இரண்டு பொருளுக்கு உரிய ஒற்றுமையைக் கூறி, பிறகு வேறுபடுத்திக் கூறுவது வேற்றுமை அணி ஆகும்.

**எ.கா. :** தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

**விளக்கம் :** தீயினால் ஏற்பட்ட புண் எளிதில் ஆறிவிடும். ஒருவர் நாவினால் சுட்ட வடு என்றும் மாறாது.

**பொருத்தம் :** தீயும், தீச்சொல்லும் சுடும் தன்மை உடையன. ஆனால் தீச்சொல் மாறாத வடுவாக இருக்கும் என வேறுபடுத்திக் காட்டுவதால் இது வேற்றுமை அணிக்குப் பொருத்தமாயிற்று.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



3. **சொல் பொருள் பின்வரும் நிலையணி**

**அணி :** செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**எ.கா:** நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

**விளக்கம் :** நோயை ஆராய்ந்து, நோய்க்கான காரணத்தை ஆராய்ந்து, அது தீரும் வழியை ஆராய்ந்து, மருத்துவர் செயல்பட வேண்டும்.

**பொருத்தம் :** இவ்வாறு நாடி எனும் சொல் பலமுறை வந்து ஆராய்ந்து எனும் ஒரே பொருளைத் தருவதால் சொற்பொருள் பின்வரு நிலையணிக்குப் பொருத்தமாயிற்று.

4. **தெளிவோம்**

- உவமை அணி - மருந்தாகித் தப்பா, சுடச்சுடரும்
- வேற்றுமை அணி - தீயினால் சுட்ட புண்,
- சொல் பொருள் பின்வரு நிலை அணி - நோய் நாடி நோய் முதல் நாடி, வினைவலியும் தன் வலியும்
- பிறிது மொழிதல் அணி - பீலிபெய் சாகாடும், இளைதாக முள்மரம் கொல்க
- உருவக அணி - இரவென்னும் ஏமாப்பில்
- சொல் பின்வரும் நிலை அணி - பற்றுக.

5. **பிறிது மொழிதல் அணியை விளக்குக.** (மார்ச்.2019)

**அணி :** ஒரு கருத்தினைக் கூறி, அக்கருத்தின் வாயிலாக வேறொன்றினை அறிவுறுத்துவது பிறிது மொழிதல் அணி ஆகும்.

**எ.கா. :** பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

**விளக்கம் :** மயிலிறகுதான் என்றாலும் அளவுக்கு மிகுதியாக ஏற்றினால், ஏற்றிய வண்டியின் அச்சு முறியும். எனவே வலிமைக்கேற்பச் செயல்பட வேண்டும்.

**பொருத்தம் :** எளியவராக இருந்தாலும் பகைவர் அனைவரும் ஒன்று திரண்டால் வலியவராகிவிடுவர் என்பதே இக்குறளின் உட்கருத்தாகும். இவ்வாறு கூறப்பட்ட கருத்திலிருந்து பிறிதொன்றை உணர்த்துவது, பிறிதுமொழிதல் அணி ஆகும்.

## மொழிப்பயிற்சி

### வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

1. **இத்தனை பேருக்கு எத்தனை பழம் கொடுக்க முடியும்.**
இத்தனைப் பேருக்கு எத்தனைப் பழம் கொடுக்க முடியும்.

2. **''மன்னாக் கூறற்கச் சுடுசொல்'' என்று புலவர்க் கூறினார்.**
''மன்னா_ கூறற்க_ சுடுசொல்'' என்று புலவர்_ கூறினார்.

3. **இப்படி சொன்னால் எப்படி புரியுமென தெரியவில்லை.**
இப்படிச் சொன்னால் எப்படிப் புரியுமெனத் தெரியவில்லை.

4. **கல்லை செதுக்கித் தலைவருக்கு சிலை வடித்தான்.**
கல்லைச் செதுக்கித் தலைவருக்குச் சிலை வடித்தான்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



5. **பாடத்திட்டத்தில் குமரபருவ சிக்கல்களை தீர்க்கும் உளவியற்க் கட்டுரைகளை சேர்க்க வேண்டும்.**
   பாடத்திட்டத்தில் குமரப்பருவச்சிக்கல்களைத் தீர்க்கும் உளவியற்_கட்டுரைகளைச் சேர்க்க வேண்டும்.

6. **ஆசிரியர் நடத்தா பாடத்திலிருந்து எந்த கேள்வியும் வரவில்லை.**
   ஆசிரியர் நடத்தாப் பாடத்திலிருந்து எந்தக் கேள்வியும் வரவில்லை.

7. **அறிவுகுறைவுக் கவனகுறைவுத் திறமைகுறைவு ஆகியவற்றால் விபத்துகள் நடக்கின்றன.**
   அறிவுக்குறைவு_கவனக்குறைவு_ திறமைக்குறைவு ஆகியவற்றால் விபத்து_கள் நடக்கின்றன.

8. **பட்டடப் பகலினிலேப் பாவலர்க்கு தோன்றுகிற நெட்டை கனவு.**
   பட்டப்பகலினிலே_பாவலர்க்குத் தோன்றுகிற நெட்டைக் கனவு.

9. **பதிக கிளவி பல்வகை பொருளை தொகுதியாக சொல்லுதலாம்.**
   பதிகக்கிளவி பல்வகைப் பொருளைத் தொகுதியாகச் சொல்லுதலாம்.

10. **ஊட்டசத்து குறைவால் கருகொண்ட தாய் குறைப்பேற்றுக்கு ஆளாகலாம்.**
    ஊட்டச்சத்துக் குறைவால் கருக்கொண்டதாய் குறை_பேற்றுக்கு ஆளாகலாம்.

## தமிழாக்கம் தருக:

1. **Behave courteously.**
   மரியாதையுடன் நடந்து கொள்.

2. **Congratualtion on your success in the Examination.**
   நீ தேர்வில் வெற்றி பெற்றமைக்கு எனது பாராட்டுகள்.

3. **I anticipate your favourable reply.**
   உன் சாதகமான பதிலை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

4. **Nelson Mondela is the champion of the liberation movement of south Africa.**
   நெல்சன் மண்டேலா அவர்கள் தென்னாப்பிரிக்கா விடுதலை இயக்கத்தின் காவலர் ஆவார்.

5. **Air is a mixture of Several gases.**
   பல வாயுக்களின் கலவையே காற்று.

6. **Villages are the backbone of India.**
   இந்தியாவின் முதுகெலும்பு கிராமங்களேயாகும்.

7. **The people in Japan are quiet, industrious and intelligent.**
   ஜப்பானிய மக்கள் அமைதி, சுறுசுறுப்பு மற்றும் அறிவு மிக்கவர்கள்.

8. **The caption in the newspaper was misleading.**
   செய்தித்தாளின் தலைப்பு, தவறான வழியில் இட்டுச் சென்றது.

9. **Every one should be a law, abaidence citizen.**
   ஒவ்வொரு குடிமகனும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவனாய் இருக்க வேண்டும்.

10. **I can't make out the meaning of this word.**
    என்னால் இச்சொல்லின் பொருளை அறிய இயலவில்லை.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## நயம் பாராட்டுக.

மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா!
பங்கையக் கைந்நலம் பார்த்தலவோ - இந்தப்
பாரினில் அறங்கள் வளருமம்மா
அல்லம் பகலும் உழைப்பவரார் - உள்ளத்து
அன்பு ததும்பி எழுபவரார்?
கல்லும் கனியக் கசிந்துருகித் தெய்வக்
கற்பனை வேண்டித் தொழுபவரார்?
அன்பினுக்காகவே வாழ்பவரார்? - அன்பில்
ஆவியும் போக்கத் துணிபவரார்?
இன்ப உரைகள் தருபவரார்? - வீட்டை
இன்னகை யாலொளி செய்பவரார்?

- கவிமணி

**முன்னுரை:**

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் குழந்தைக் கவிஞர் என்ற போற்றுதலுக்கு உரியவர். குழந்தை உள்ளம் கொண்ட கவிஞர், 'மலரும் மாலையும்', 'ஆசியஜோதி' போன்ற சிறந்த கவிதை நூல்களை நமக்குக் கொடுத்துள்ளார். இக்கவிஞர் எழுதிய இனிய கவிதையின் நயத்தினைப் பின்வருமாறு காண்போம்.

**திரண்ட கருத்து:**

**வாழைக்குக் குருத்து அழகு**
**கவிதைக்குக் கருத்து அழகு**

**பாடலின் கருத்து:**

- ☑ இத்தரணியில் பெண்ணாய்ப் பிறப்பதற்கு தவம் செய்திருக்க வேண்டும்.
- ☑ இந்த உலகில் அறச்செயல்கள் பெண்களின் கைந்நலத்திலிருந்தே வருகின்றன.
- ☑ அல்லும் பகலும் உழைத்து உள்ளத்தில் அன்புத்ததும்பி நிற்பவர் பெண்களே!
- ☑ தெய்வத்திடம் கசிந்துருகி வேண்டுபவர்கள், அன்பினுக்காகவே இவ்வுலகில் வாழ்பவர்கள்.
- ☑ இன்ப உரைகளைக்கூறி, உயிரையும் விடத் துணிபவர்கள்
- ☑ வீட்டை ஒளி பெறச் செய்வார்கள்.
- ☑ இத்தகைய நலங்களையும், வளங்களையும் பெற்ற பெண்களாய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திடல் வேண்டும் எனக் கூறுகிறார்.

**மையக்கருத்து:**

உள்ளத்தையும், இல்லத்தையும் அழகு பெறச் செய்பவள் பெண். அன்பு நிறைந்தவள் பெண். அவள் பெண்ணாய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திருக்க வேண்டும்.

**தொடை நயம்:**

**தொடையற்ற பாட்டு**
**நடையற்றுப் போகும்**

**மோனைத் தொடை:**

செய்யுளில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

| | | |
|---|---|---|
| **ம**ங்கையராகப் | **அ**ல்லும் | **அ**ன்பினுக்காகவே |
| **மா**தவம் | **அ**ன்பு | **ஆ**வியும் |
| **ப**ங்கயம் | **க**ல்லும் | **இ**ன்ப உரைகள் |
| **பா**ரில் | **க**ற்பனை | **இ**ன்னகை |

போன்ற மோனைச் சொற்கள் பயின்று வந்து நயம் மிக்கதாக உள்ளது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**எதுகை தொடை:**

செய்யுளில் ஒவ்வொரு அடியிலும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை நயமாகும்.

மங்கைய அன்பினுக்

பங்கய இன்ப

அல்லும்

கல்லும்

போன்ற எதுகைச் சொற்கள் பயின்று வந்து நயம் மிக்கதாக உள்ளது.

**இயைபு தொடை:**

செய்யுளில் ஒவ்வொரு அடியிலும் இறுதி எழுத்தோ, அசையோ, சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபு நயமாகும்.

வேண்**டுமம்மா** வள**ருமம்மா**

எழுப**வரார்** தொழுப**வரார்**

போன்ற இயைபுச் சொற்கள் பயின்று வந்து நயம் மிக்கதாக உள்ளது.

**அணி நயம்:**

**ஆண்மகனுக்குப் பணி அழகு**
**கவி மகளுக்கு அணி அழகு**

இப்பாடலில் சொற்பொருள் பின்வரு நிலையணி பயின்று வந்துள்ளது.

**''மாதவம் செய்திட வேண்டுமம்மா..... அறங்கள் வளருமம்மா''**

அம்மா எனும் சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருகிறது. அணி நயம் பெற்று இப்பாடல் அழகுடன் திகழ்கிறது.

**சொல் நயம்:**

**விசயனுக்கு வில் அழகு**
**கவிதைக்குச் சொல் அழகு**

**''அன்பில் ஆவியும் போக்கத் துணிபவரார்?''** இத்தொடரில் உயிர் என்னும் பொருளில் ஆவி என்னும் சொல் பயின்று வந்து, இக்கவிதை சொல் நயம் மிக்கதாக உள்ளது.

**பொருள் நயம்:**

**காருக்கு இருள் அழகு**
**கவிதைக்குப் பொருள் அழகு**

**கல்லும் கனியக் கசிந்துருகித் -**

**தெய்வக் கற்பனை வேண்டித் தொழுபவரார்?** - இத்தொடரில் அருமையான, ஆழமான கருத்துப் பொதிந்துள்ளது. கல்லையும் கரையச்செய்யும் இதயம், இறைவனையும் இழுக்கும் இதயம் எனப் பெண்மையை பெருமைப்படுத்தியுள்ள வரிகள் அருமையிலும் அருமை.

**சந்த நயம்: சந்தம் - ஓசை**

**யானைக்குத் தந்தம் அழகு**
**கவிதைக்குச் சந்தம் அழகு**

**''மாதவம் செய்திட வேண்டுமம்மா...... அறங்கள் வளருமம்மா....'' ''உழைப்பவரார்? வாழ்பவரார்?''** என்னும் தொடர்கள் படிப்பதற்கு ஓசை நயமிக்கதாக உள்ளன.

இப்பாடலில் சிந்து எனும் ஓசை பயின்று வந்து சந்த நயமிக்கதாக உள்ளது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**சுவை நயம்:**

உணவிற்கு அறுசுவை
கவிதைக்கு அருமை சுவை

பெண்மையைப் பெருமைப்படுத்திப் பாடியுள்ளமையால் இப்பாடலில் **"பெருமிதச்சுவை"** பயின்று வந்துள்ளது.

**தலைப்பு:**

பெண் தெய்வம்

**முடிவுரை:**

நாட்டிற்கு நல்லுரை வேண்டும்
செய்யுளுக்கு முடிவுரை வேண்டும்

தமிழ் ஆர்வமிக்க கவிஞர்களால் தான் தமிழ் தழைத்து இனிது வளர்ந்து நிற்கின்றது. கவிமணிபோல் கவிதையை மணி மணியாய் வடிப்பவர் யார்? மணியாய் வடித்த கவிதையை நாமும் அணியாய் எடுத்து தமிழ் மகளுக்கு அணிவிப்போமாக.

## பழமொழி தமிழாக்கம்

1. **Man proposes; god disposes**
   நாம் ஒன்று நினைக்கத், தெய்வம் ஒன்று நினைக்கும்.
2. **Familiarity breeds contempt**
   பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
3. **Knowledge is power**
   அறிவே ஆற்றல்
4. **Strike while the iron is hot**
   காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
5. **Do not add fuel to the flame**
   எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றாதே
6. **Money makes many things**
   பணம் பத்தும் செய்யும்
7. **To the good people world apperars good.**
   நல்லோருக்கு உலகம் நல்லதாகவே தோன்றும்.
8. **Well began is half done**
   நல்ல தொடக்கம் பாதி வெற்றி
9. **East or west home is best**
   எலி வளையானாலும் தனி வளையே சிறந்தது.
10. **Make hay while the sunshines**
    காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
11. **The government announced some schemes**
    அரசாங்கம் சில திட்டங்களை அறிவித்துள்ளது.
12. **Many thanks for your kind message of greetings**
    தங்கள் வாழ்த்துச் செய்திக்கு மிக்க நன்றி.
13. **A penny saved a penny gained**
    சிறுதுளி பெரு வெள்ளம்
14. **Kindness cannot be bought**
    அன்பை விலைக்கு வாங்க முடியுமா?
15. **Where there is will; there is way**
    மனமிருந்தால் மார்க்கம் உண்டு.
16. **Indian people always dislike violence**
    இந்திய மக்கள் எப்போதும் வன்முறையை வெறுப்பவர்கள்.
17. **Barking dogs seldom bite**
    குரைக்கின்ற நாய் கடிக்காது.
18. **One flower makes no garland**
    தனி மரம் தோப்பாகாது.
19. **Many a slip between the cup and lip**
    கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை.
20. **Congratulations for your success**
    உன்னுடைய வெற்றிக்காகப் பாராட்டுகள்
21. **Think before you speak**
    சிந்தித்துப் பேசு.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## பழமொழி விளக்கம்

1. **காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு**

**பழமொழி** : காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு

**விளக்கம்** : காக்கை கருப்பாக அழகற்று இருந்தாலும், அதன் தாய் காகத்திற்கு அது அழகாகவே தோன்றும்.

**வாழ்க்கை நிகழ்வில் பழமொழி:**

மூன்று வயதுச் சிறுவன் ஒருவன் தெருவில் சேற்றில் விளையாடிக் கொண்டிருந்தான். திடீரென அழத்தொடங்கினான். அவ்வழியாகச் சென்றவர்கள் அக்குழந்தையைக் கண்டு, தூக்கி அழுகையை நிறுத்த முயலவில்லை. காரணம், அக்குழந்தை அழகற்றதாகவும், அழுக்காகவும், மேலும் மூக்கில் சளி வடிந்து கொண்டும், பார்க்கவே அறுவெறுப்பாகத் தோற்றமளித்தது. குழந்தையின் அழுகையைக் கேட்ட தாய் ஓடிச்சென்று, அக்குழந்தையைத் தூக்கி அணைத்து, அக்குழந்தைக்கு முத்தமழை பொழிந்தாள். ஆம்! தாய்க்குத் தன் குழந்தை பொன் குழந்தைதான்.

**பழமொழி உணர்த்தும் நீதி:**

யாரையும் இகழாதே

அவரவர் உள்ளத்திற்கு அவரவரே உயர்ந்தவர்கள்.

---

2. **கூடி வாழ்ந்தால் கோடி நன்மை (ஒற்றுமையே பலம்)**

நான்கு மாடுகள் - கூட்டமாக மேய்தல் - பசியால் வந்த சிங்கம் - மாட்டினைத் தாக்கத் முயல்தல் - முடியாது சென்று விடுதல் - பேராசை பிடித்த மாடு - தனியாக மேய ஆசைப்பட்டுப் பிரிதல் - சிங்கம் அதனைத் தாக்குதல்.

**பழமொழி** : கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

**விளக்கம்** : எல்லாருடனும் சேர்ந்து வாழ்ந்து வந்தால் நன்மை என்றும் கிடைக்கும்.

**வாழ்க்கை நிகழ்வில் பழமொழி :**

எங்கள் வீட்டுக்குப் பின்புறம் உள்ள மந்தைவெளியில் மாடுகள் கூட்டமாக மேய்ந்துக்கொண்டிருக்கும். தினம் தினம் நான் அதைப் பார்த்துக்கொண்டிருப்பேன். மந்தைவெளிக்குப் பின் காடு ஒன்று உள்ளது. அந்தக் காட்டில் கொடிய விலங்கினங்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு நாள் மாடுகள் மேய்ந்து கொண்டிருப்பதைக்கண்டு புலி ஒன்று ஒரு மாட்டினைத்தாக்க மெதுமெதுவாக பின்னால் வந்தது. அதைக்கண்ட மாடுகள் கூட்டம் அதை விரட்டி அடித்தன. புலியும் மாடுகளின் கூட்டத்தைக்கண்டு பயந்து சென்று விட்டது.

அக்கூட்டத்தில் இருந்த மாடு ஒன்று தனியாக மேய்ந்தால் வயிறு நிறைய மேயலாம் என்று கருதி, காட்டில் ஓரமாக இருந்த பச்சைப் புல் திட்டைக்கண்டு, தான் மட்டுமே மேய்ந்தால் போதும் என்ற பேராசையில் தனியாக வந்து மேய்ந்தது. தனியாக மேய்ந்த மாட்டினைக்கண்ட புலி எளிதாக வந்து, மாட்டை அடித்து இரையாக்கிக் கொண்டது. இரை தேட வந்த மாடு புலிக்கு இரையாகிப்போனது. தன்னைக் காப்பாற்ற யாரும் இல்லாமல் பலியானது. ஒற்றுமையாகக் கூட்டத்தோடு இருந்திருந்தால் மாட்டிற்கு இப்பேராபத்து வந்திருக்காது.

**பழமொழி உணர்த்தும் நீதி :**

- ✓ ஒற்றுமையே பலம்
- ✓ சுயநலம் பார்த்து ஒதுங்கினால் பேரழிவு நிச்சயம்

---

## கொள்குறி வகை வினாக்கள்

### 1. வாக்கியப் பிழையை திருத்துக

1. **சென்னைக்கு அருகாமையில் இருப்பது கன்னியாகுமரி அல்ல.**

சென்னைக்கு அருகில் இருப்பது கன்னியாகுமரி அன்று.

2. **அவர்தான் கூறினார் இவர்தான் கூறினார் என்று பாராது எவர்தான் கூறினாலும் மெய்ப்பொருள் காண்க.**

அவர்தாம் கூறினார் இவர்தாம் கூறினார் என்று பாராது எவர்தாம் கூறினாலும் மெய்ப்பொருள் காண்க.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



3. **கண்ணன், முருகன் மற்றும் வேலன் வந்தனர்.**
   கண்ணன், முருகன், வேலன் ஆகியோர் வந்தனர்.
4. **நல்லவைகளும், கெட்டவைகளும் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன.**
   நல்லனவும், கெட்டனவும் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன.
5. **விழாவில் பல அறிஞர்கள் பேசினர்.**
   விழாவில் அறிஞர்கள் பலர் பேசினர்.
6. **மாணவர்கள் கல்வியறிவு ஒழுக்கத்தில் சிறந்து விளங்க வேண்டும்.**
   மாணவர்கள் கல்வியறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டும்.
7. **ஒன்றோ அல்லது இரண்டோ தருக.**
   ஒன்றோ இரண்டோ தருக.
8. **எனக்குப் பல வீடுகள் உள்ளது.**
   எனக்குப் பல வீடுகள் உள்ளன.
9. **பூச் செடிகள் தோட்டத்தில் மலர்ந்து மணம் வீசியது.**
   பூச் செடிகள் தோட்டத்தில் மலர்ந்து மணம் வீசின.
10. **கயல்விழி என்னும் பெண் நாட்டியம் ஆடியது.**
   கயல்விழி என்னும் பெண் நாட்டியம் ஆடினாள்.
11. **தென்றல் மெல்ல வீசின.**
   தென்றல் மெல்ல வீசியது.
12. **இது பொது வழி அல்ல**
   இது பொது வழியன்று.
13. **செய்திகள் வாசிப்பது அழகன்.**
   செய்திகள் வாசிப்பவர் அழகன்.

## 2. வல்லின மெய்களை இட்டு எழுதுக

1. நிலவைப் பிடித்து சிலகறைகள் துடைத்து குறுமுறுவல் பதித்த முகம்
2. கொல்லைக் கிணற்றிலே வெண்ணிலாப் பந்து.
3. எள்ளுச் செடியிலே வெள்ளைப்பூப் பூத்தது.
4. பெட்டிக் கடையிலே வெற்றிலைக்குச் சுண்ணாம்பு கேட்டுவா.
5. மரக்கடைப் பக்கம் போகாதே இழைப்புளி தூசி ஒவ்வாது.

## பொருள் வேறுபாடு தருக.

| | | | |
|---|---|---|---|
| 1. | அரம் | ஒரு கருவி | மரத்தை அறுக்க உதவுவது **அரம்** |
| | அறம் | நற்செயல் | இலக்கியம் சமூகத்தை **அறம்** மிக்கதாக மாற்றும். |
| 2. | அரி | வெட்டு, திருமால் | என் தாயார் காய்கறிகளை **அரிந்தாள்** (அ) அயன், அரி, அரன் - என்பவர் முப்பெருங்கடவுளுள் ஒருவர். |
| | அறி | தெரிந்துகொள் | நாம் வள்ளுவர் கூறும் கருத்துக்களை **அறிந்து** கடைப்பிடிப்போம் |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



| | | | |
|---|---|---|---|
| 3. | அரை | பாதி, மாவாக்கு | **அரைக்கிணறு** தாண்டுவது ஆபத்தான செயலாகும். மாவு **அரைக்க** இப்போது இயந்திரங்கள் உதவுகின்றன. |
| | அறை | வீட்டின் பகுதி | எங்கள் வீட்டில் தங்குவதற்குப் பல **அறைகள்** உள்ளன. |
| 4. | இரங்கு | இரக்கப்பட்டு | ஏழைகளிடம் **இரங்கு** |
| | இறங்கு | கீழே வா | மாடியிலிருந்து **இறங்கு** |
| 5. | இரத்தல் | யாசித்தல் | ஈயென **இரத்தல்** இழிந்தன்று |
| | இறத்தல் | சாதல் | குறைந்த வயதில் **இறத்தலை** இன்று மருத்துவ வளர்ச்சி கட்டுப்படுத்தியுள்ளது. |
| 6. | உரவு | வலிமை | **உரவை** வலுப்படுத்துவோம். |
| | உறவு | சொந்தம் | **உறவினரிடம்** அன்பாகப் பழக வேண்டும். |
| 7. | எரி | தீ | குடிசை வீடுகள் தீப்பற்றி **எரிந்து** போயின. |
| | எறி | வீசு | உதவாப் பொருட்களைத் தூக்கி **எறி** |
| 8. | கரை | ஓரம் | காவிரிக்கு உயர்ந்த **கரை** அமைத்தான் கரிகாலன் |
| | கறை | அழுக்கு | வெள்ளை வேட்டியில் படிந்த **கறையைப்** போக்குவது கடினம். |
| 9. | கூரிய | கூர்மையான | வீரனுக்கு வெற்றி தருவது **கூரிய** வாளேயாகும். |
| | கூறிய | சொல்லிய | என் நண்பன் **கூறியதைக்** கேட்டு வியப்படைந்தேன். |
| 10. | சீரிய | மேலான | அனைவருக்கும் தொண்டு செய்வதே என் **சீரிய** பணி. |
| | சீறிய | கோபித்த | ஆசிரியரின் **சீறிய** முகம் கண்டு மாணவர் அஞ்சினர். |

## விரிவாக்கம்

1. **நாற்குணம்** - அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு
2. **நாற்படை** - யானை, குதிரை, தேர், காலாள்
3. **ஐம்புலன்** - கண், காது, வாய், மூக்கு, மெய்
4. **த.நா.மி.வா.** - தமிழ்நாடு மின்சார வாரியம்
5. **த.நா.கு.வ.வா.** - தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
6. **அ.மி.சௌந்தரவல்லித்தாயார்** - அருள்மிகு சௌந்தரவல்லித்தாயார்
7. **அ.நி.கு. எண்.** - அஞ்சல்நிலையக் குறியீட்டு எண் (பின்கோடு)
8. **தொ.பே.எண்** - தொலைபேசி எண்
9. **ஆ.கா.க** - ஆயுள் காப்பீட்டுக் கழகம் (எல்.ஐ.சி)
10. **இ.ஆ.ப.** - இந்திய ஆட்சிப் பணி
11. **எஸ்.எஸ்.ஏ** - (சர்வசிக்ஷா அபியான்) அனைவருக்கும் கல்வி இயக்கம்
12. **இ.எஸ்.ஏ** - தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம்
13. **டயட் (DIET)** - மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம்
14. **டி.பி.இ.பி** - மாவட்டத் தொடக்கக்கல்வித் திட்டம்
15. **பெ.ஆ.க.** - பெற்றோர் ஆசிரியர் கழகம்
16. **டிட்டி ஈ.ஆர்ட்டி (DTERT)** - ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## இலக்கணப்பிழை

| பிழை | திருத்தம் |
|---|---|
| அவன் அல்ல | அவன் அல்லன் |
| அவள் அல்ல | அவள் அல்லள் |
| அவர் அல்ல | அவர் அல்லர் |
| அது அல்ல | அது அன்று |
| அவை அன்று | அவை அல்ல |

முதல் வரிசையில் உள்ளவை யாவும் பிழையானவையாகும்.

இவற்றுள் உயர்திணைக்கு அஃறிணை முடிவு. ஒருமைக்குப் பன்மையும், பன்மைக்கு ஒருமையும் வந்துள்ளது பொருந்தாது. இரண்டாம் வரிசையிலுள்ள முறையில் எழுதுவதே திருத்தமான வடிவங்களாகும்.

| பிழை | திருத்தம் |
|---|---|
| ஒரு ஆடு | ஓர் ஆடு |
| ஒரு ஊர் | ஓர் ஊர் |
| ஓர் நாடு | ஒரு நாடு |

இவற்றுள் உள்ள ஒரு, ஓர் என்னும் இரு சொற்களும் ஒன்று என்னும் பொருளைத் தருவது எனினும், இரண்டினையும் பயன்படுத்த வேண்டிய இடங்களை அறிந்தே பயன்படுத்துதல் வேண்டும்.

வருமொழி முதலில் உயிரெழுத்து வருமாயின், நிலைமொழி ஓர் எனவும், மெய்யெழுத்து வருமாயின் ஒரு எனவும் அமைதல் வேண்டும்.

| பிழை | திருத்தம் |
|---|---|
| நாம் தான் சாப்பிட்டோம் | நாம் தாம் சாப்பிட்டோம் |
| நீர் தான் செய்தீர் | நீர் தாம் செய்தீர் |
| அவன் தாம் ஓடினான் | அவன் தான் ஓடினான் |
| அது தாம் வந்தது | அது தான் வந்தது |
| அவை தான் வந்தன | அவை தாம் வந்தன. |

தான் என்பது இருதிணைக்கும் பொதுப்பெயர்.

தன்மை முன்னிலை ஒருமைகளிலும், படர்க்கை ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால்களிலும் வரும்.



## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| அழகியல் | - Aesthetics | கலை விமர்சகர் | - Art Critic |
| இதழாளர் | - Journalist | புத்தக மதிப்புரை | - Book Review |
| புலம்பெயர்வு | - Migration | மெய்யியலாளர் | - Philosopher |
| இயற்கை வேளாண்மை | - Organic Farming | மதிப்புக்கூட்டுப் பொருள் | - Value Added Product |
| வேதி உரங்கள் | - Chemical Fertilizers | வேர்முடிச்சுகள் | - Root Nodes |
| ஒட்டு விதை | - Shell Seeds | தூக்கணாங்குருவி | - Weaver Bird |
| தொழு உரம் | - Farmyard Manure | அறுவடை | - Harvesting |
| இனக்குழு | - Ethnic Group | பின்னொட்டு | - Suffix |
| முன்னொட்டு | - Prefix | வேர்ச்சொல் அகராதி | - Etymological Dictionary |
| புவிச்சூழல் | - Earth Environment | பண்பாட்டுக் கூறுகள் | - Cultural Elements |
| ஆவணம் | - Document | உப்பங்கழி | - Backwater |
| ஒப்பந்தம் | - Agreement | படையெடுப்பு | - Invasion |
| பண்பாடு | - Culture | மாலுமி | - Sailor |
| மருத்துவமனை | - Clinic | எழுது சுவடி | - note book |
| குருதிப்பிரிவு | - blood group | விடைச்சுவடி | - answer book |
| மருந்தாளுநர் | - pharmacist | பொதுக்குறிப்புச் சுவடி | - rough note book |
| ஊடுகதிர் | - x-ray | விளக்கச்சுவடி | - prospectus |
| களிம்பு | - ointment | குடற்காய்ச்சல் | - typhoid |
| உத்திகள் | - Strategies | பன்முக ஆளுமை | - Multiple Personality |
| பட்டிமன்றம் | - Debate | தொழிற்சங்கம் | - Trade Union |
| சமத்துவம் | - Equality | புனைப்பெயர் | - Pseudonym |
| நாங்கூழ்ப்புழு | - Earthworm | விழிப்புணர்வு | - Awareness |
| கடவுச்சீட்டு | - Passport | முனைவர் பட்டம் | - Doctor of Philosophy (Ph.D) |
| உலகமயமாக்கல் | - Globalisation | பொருள்முதல் வாதம் | - Materialism |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## இலக்கணக்குறிப்பு

**வினையாலணையும் பெயர்**
தொழுதவர்
உழுதவர்
விதைத்தவர்
கேட்போர்
பிரிந்தோர்

**வினைத்தொகை**
நிறைமணி
கனைகடல்
விரிகதிர்
ஒழுகுநீர்
எறிவாள்
அலைகடல்
புகழ்பண்பு
செய்தொழில்
அலைகடல்
வீழருவி

**இரண்டாம் வேற்றுமைத்தொகை**
உடை அணிந்தேன்

**ஆறாம் வேற்றுமைத்தொகை**
அகிற்புகை

**இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை**
பொன்னகர்
பூக்குலை

**மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்**
பொற்கலம்
பொற்சிலம்பு

**அடுக்குத்தொடர்**
வழிவழி
நன்றுநன்று
உழுதுழுது
பார்த்துப்பார்த்து
நில் நில்

**இரட்டைக்கிளவி**
நெறுநெறு

**தொழில்பெயர்**
காட்டல்
கோடல்
உண்டல்
துஞ்சல்
ஒழிதல்
துய்த்தல்
தங்குதல்

**உரிச்சொல் தொடர்**
மாநர்
உறுபகை
கடிநகர்
சாலத்தகும்

**முற்றும்மை**
ஐந்தும்

**பண்புத்தொகை**
செங்கயல்
வெண்சங்கு
வெண்சுவை
தீம்பால்
பெரும்புகழ்
தெண்டிரை
அருஞ்சமம்
பேரன்பு
நெடுங்குன்று
நன்னாடு
இளமுகம்
நல்லுண்
சிறுபுல்
பேரழகு
முந்நீர்
நன்மாண்

**எண்ணும்மை**
மஞ்ஞையும் கொண்டலும்
அறிவும் ஒழுக்கமும்
தானமும் ஒழுக்கமும்
தவமும் ஈகையும்
உணவையும் உறக்கத்தையும்
கல்லையும் மண்ணையும்
சிலுவையும் பிறையும்
புழுக்களும் பூச்சிகளும்

**அசைநிலை**
ஆல்

**அண்மை விளிச்சொல்**
கண்ணி
மாதே - விளிச்சொல்

அசைநிலை
அம்ம

**ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்**
முயலா
பிழையா
ஒடியா
ஆசிலா
ஓவா

**வினையெச்சம்**
தாவி
அமர்ந்து
உருட்டி

**பெயரெச்சங்கள்**
கொண்ட
மலிந்த
மண்டிய
பூத்த
பொலிந்த
மாண்ட தவளை
பின்னிய
முளைத்த

**ஈற்றுப்போலி**
பந்தர்
இடன்
அறன்
திறன்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## பகுபத உறுப்பிலக்கணம்

**கடந்து - கட + த் (ந்) + த் + உ**

கட - பகுதி

த் - சந்தி

ந் - விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

உ - வினையெச்ச விகுதி

**நடந்து - நட + த் (ந்) + த் + உ**

நட - பகுதி

த் - சந்தி

ந் - விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

உ - வினையெச்ச விகுதி

**மெலிந்து - மெலி + த் (ந்) + த் + உ**

மெலி - பகுதி

த் - சந்தி

ந் - விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

உ - வினையெச்ச விகுதி

**அலர்ந்து - அலர் + த் (ந்) + த் + உ**

அலர் - பகுதி

த் - சந்தி

ந் - விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

உ - வினையெச்ச விகுதி

**மலிந்த - மலி + த் (ந்) + த் + அ**

மலி- பகுதி

த் - சந்தி

ந் - விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

அ - பெயரெச்ச விகுதி

**பிரிந்தோர் - பிரி + த் (ந்) + த் + ஓர்**

பிரி - பகுதி

த் - சந்தி

ந் - விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**அணிந்தேன்- அணி + த் (ந்) + த் + ஏன்**

அணி - பகுதி

த் - சந்தி

ந் - விகாரம்

த் - இறந்தகால இடைநிலை

ஏன்- தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**நெருங்கின - நெருங்கு + (இ) ன் + அ**

நெருங்கு - பகுதி

(இ) ன் - இறந்தகால இடைநிலை

அ - பெயரெச்ச விகுதி

**மருண்டனென் - மருள்(ண்) + ட் + அன் + என்**

மருள் - பகுதி

ண் (ள்) - விகாரம்

ட் - இறந்தகால இடைநிலை

அன் - சாரியை

என்- தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**துய்த்தல் - துய் + த் + தல்**

துய் - பகுதி

த் - சந்தி

தல் - தொழிற்பெயர் விகுதி

**எழுகின்ற - எழு + கின்று + அ**

எழு- பகுதி

கின்று - நிகழ்கால இடைநிலை

அ - பெயரெச்ச விகுதி

**வருகின்ற - வா (வரு) + கின்று + அ**

வா (வரு) - பகுதி

கின்று - நிகழ்கால இடைநிலை

அ - பெயரெச்ச விகுதி



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## புணர்ச்சி விதி

➢ **உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**

உரமெலாம் - உரம் + எலாம்
நீரோடை - நீர் + ஓடை
வாயொலி - வாய் + ஒலி
புகழெனின் - புகழ் + எனின்
பயமில்லை - பயம் + இல்லை
சிறகிலிருந்து - சிறகில் + இருந்து

➢ **உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்**

➢ **உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**

அணிந்துரை - அணிந்து + உரை
போதவிழ் - போது + அவிழ்
உயர்ந்தோங்கும் - உயர்ந்து + ஓங்கும்
தண்டுடை - தண்டு + உடை
இயைவதாயினும் - இயைவது + ஆயினும்
உலகனைத்தும் - உலகு + அனைத்தும்
அமுதென்று - அமுது + என்று
உழுதுழுது - உழுது + உழுது
சுழித்தோடும் - சுழித்து + ஓடும்
என்றிவை - என்று + இவை
இழுக்கின்றி - இழுக்கு + இன்றி

➢ **தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்**

➢ **உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**

மண்ணுடை - மண் + உடை
கல்லதர் - கல் + அதர்
மண்ணுயிர் - மண் + உயிர்

➢ **முற்றும் மற்று ஒரோ வழி**

வரவறிந்தான் - வரவு + அறிந்தான்
அளவறிந்து - அளவு + அறிந்து

➢ **லள வேற்றுமையில் வலி வரின் றடவும்**

கற்பொடி - கல் + பொடி
கற்பிளந்து - கல் + பிளந்து

➢ **னண வல்லினம் வர ட ற வும்**

பொற்சிலம்பு - பொன் + சிலம்பு

➢ **இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்**

பொதுச்சிறப்பு - பொது + சிறப்பு
திரைப்படம் - திரை + படம்
திருப்புகழ் - திரு + புகழ்
மணிக்குலம் - மணி + குலம்

➢ **மவ்வீறு ஒற்று அழிந்து உயிரீறு ஒப்பவும்**

➢ **இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்**

மரக்கலம் - மரம் + கலம்
காலத்தச்சன் - காலம் + தச்சன்
பாடவேளை - பாடம் + வேளை
தடந்தேர் - தடம் + தேர்
புறந்தருதல் - புறம் + தருதல்

➢ **வன்மைக்கினமாகத் திரிபவும்**

புறந்தருதல் - புறம் + தருதல்
காலங்கடந்தான் - காலம் + கடந்தான்

➢ **பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும்**

பூஞ்சோலை - பூ + சோலை
பூத்தொட்டி - பூ + தொட்டி

➢ **உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**

பூவணி - பூ + அணி
திருவடி - திரு + அடி

➢ **இ ஈ ஐ வழி யவ்வும்**

➢ **உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே மனையென**

மனையென - மனை + என
புவியாட்சி - புவி + ஆட்சி
முறையறிந்து - முறை + அறிந்து

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# இலக்கிய நயம் பாராட்டல்

**முன்னுரை**

இலக்கணச் செங்கோல்
யாப்பு சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு
மோனைத் தேர்களோடு
பவனி வருவன இலக்கியங்கள்

செய்யுள் கற்போருக்கும், கேட்போருக்கும் இனிமை தருவதற்குக் காரணம் செய்யுள்களில் அமைந்துள்ள சந்தம், சுவை, அணி, தொடை, முதலிய இலக்கிய நயங்களே!

கவிஞர் இயற்றியுள்ள இப்பாடலில் அமைந்துள்ள இலக்கிய நயங்களைக் காண்போம்.

**முன்னுரை**

- ✶ ஆசிரியர் குறிப்பு
- ✶ திரண்ட கருத்து
- ✶ மையக்கருத்து
- ✶ சொல் நயம்
- ✶ பொருள் நயம்
- ✶ தொடை நயம்
  1) மோனை
  2) எதுகை
  3) இயைபு
  4) அளபெடை
- ✶ அணிநயம்
- ✶ சுவை நயம்
- ✶ சந்த நயம்
- ✶ கற்பனை நயம்
- ✶ தலைப்பு
- ✶ முடிவுரை

**ஆசிரியர் குறிப்பு:**

தரப்பட்டுள்ள ஆசிரியரைப் பற்றிய செய்திகளை 4 வரிகளுக்குள் எழுத வேண்டும்.

**திரண்டக் கருத்து:**

பாடலைக் குறைந்தது 7 முறையாவது படித்துப் பார்க்கவும். பாடலின் முழுப்பொருளையும் (பொழிப்புரை) எழுத வேண்டும். பாடலில் உள்ள கடினமான சொற்களைக் கண்டு அஞ்ச வேண்டாம். கவிஞர் பாடல்களில் வெளிப்படுத்தும் மேலோட்டமான கருத்துகளை எழுத வேண்டும். பத்தி பத்தியாக எழுத வேண்டும்.

**மையக் கருத்து**

பாடலின் கருத்தைப் புரிந்து (மையக்கருவினை புரிந்து) ஓரிரு வரிகளில் பாடலின் சிறப்பை, பெருமிதத்தை, அவலத்தை, நகையை, தாழ்வை முன்னிறுத்திப் பாடப்பட்டுள்ளதை எழுத வேண்டும்.

**சொல் நயம்**

பாடலில் உள்ள கலைச்சொற்களைக் கண்டறியவும், அச்சொற்களை எடுத்தெழுதி அதன் பொருளை எழுதுதல் வேண்டும். கலைச்சொற்களை எழுதிய பின் அடைமொழிச் சொற்களைக் கண்டறிதல் வேண்டும் அடைமொழிச் சொல் என்பது முன்ஒட்டுச் சொல் ஆகும்.

**எ.கா.**

குயில் - கருங்குயில்

இங்குக் 'கருங்குயில்' என்பதில் உள்ள 'கருங்' என்பது குயிலின் நிறத்தினை மேலும் உணர்த்த வந்த முன்ஒட்டுச் சொல் என்பர்.

மேலும், பாடலின் அளபெடைச் சொற்கள் அடுக்குத்தொடர்ச் சொற்கள், இரட்டைக்கிளவி போன்றவை காணப்பட்டாலும் அவ்வவ் தலைப்பிட்டு எடுத்து எழுதுதல் வேண்டும்.

**பொருள் நயம்**

செய்யுளின் முழுப்பொருளையும் நன்றாக அறிதல் வேண்டும். கவிஞர் எக்கருத்தைப் பற்றி பாடியுள்ளார் என்பதை அறிதல் வேண்டும். பாடலில் கூறியுள்ள மையக்கருத்தை எப்படி நயம்படக் கூறியுள்ளார் என்பதைச் சிறுசிறு வாக்கியங்களாக எழுத வேண்டும்.

**தொடை நயம்**

'தொடுக்கப்படுவது தொடை' எனப்படும்.

தொடை நயங்களான,

- ✶ மோனை
- ✶ எதுகை
- ✶ இயைபு
- ✶ முரண்
- ✶ அளபெடை



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



ஆகிய 5 தலைப்புகளில் ஏற்புடைய நயங்களைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும். தொடை பற்றிய பழமொழிகளை மனப்பாடம் செய்து கொள்ள வேண்டும்.

''தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்''
- பழமொழி

''தொடை நிரம்பிய தோம்அறு மாக்காதை'' - கம்பர்

**மோனைத்தொடை**

''தலை எழுத்து ஒப்பது மோனை''
- தொல்காப்பியம்

''எழுவா எழுத்து ஒன்றின் மோனை''
- யாப்பருங்கலக்காரிகை

''மோனை முத்தமிழ் மும்மதம் பொழி
யானை முன்வந்து எதிர்த்தவன் யாரடா?
- ஒட்டக்கூத்தர்

பாடலின் அடிகளிலோ, அல்லது சீர்களிலோ முதல் எழுத்து ஒன்றி வரத்தொடுப்பது ''மோனை''யாகும்.

அடிகளில் உள்ள சீர்களில் முதல் எழுத்தோ, சீரோ ஒன்றி வருவது ''சீர் மோனை'' எனப்படும்.

அடிதோறும் முதல் எழுத்தோ, சீரோ ஒன்றி வருவது ''அடிமோனை'' எனப்படும்.

**எதுகை நயம்**

''தலை எழுத்து ஒப்பது மோனை
அஃது ஒழிந்தவற்றின் எதுகை யாகும்''
- தொல்காப்பியம்

''எது கை, கொடுக்கவிடினும்
எதுகை கைகொடுக்கும்'' - பழமொழி

பாடல்களில் உள்ள சீர்களிலோ, அடிகளிலோ முதல் எழுத்து அளவு ஒத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது ''எதுகை'' எனப்படும்.

அடிகளில் உள்ள சீர்களில் முதல் எழுத்து ஒத்து நின்று இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது ''சீர் எதுகை'' எனப்படும்.

அடிதோறும் முதல்எழுத்து அளவு ஒத்து நின்று இரண்டாம் எழுத்து ஒன்றி வந்தால் அஃது ''அடி எதுகை'' எனப்படும்.

**இயைபுத்தொடை**

''இறுவா ஒன்றல் இயைபின் யாப்பே''
- தொல்காப்பியம்

செய்யுளின் அடிகளிலோ, சீர்களிலோ, கடைசி எழுததோ, அசையோ, சீரோ ஒன்றி வரத்தொடுப்பது இயைபாகும்''

**முரண்தொடை**

''மொழியினும் பொருளினும் முரணுதலே முரண்''
- தொல்காப்பியம்

செய்யுளின் அடியிலோ, சீரிலோ சொல்லோ பொருளோ முரண்பட வருவது முரண் தொடையாகும்.

**அளபெடைத் தொடை**

''அளபெடுத் தொன்றும் அளபெடைத்
தொடையே''
- தொல்காப்பிம்

செய்யுளில் உள்ள சீர்களில் காணப்படும் உயிரளபெடை, ஒற்றளபெடைச் சொற்களை எடுத்து எழுத வேண்டும்.

**மாணாக்கரே!**

ஏதாவது மூன்று நயங்கள் மட்டும் எழுதினால் போதும். எனவே தேவையான நயங்களுக்குரிய விளக்கங்களை மட்டும் புரிந்து படித்துக் கொண்டால் போதும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# எளிய வழியில் இலக்கணக்குறிப்பு கண்டறியும் முறைகள்

### 1. அளபெடை

அ, இ, உ, ஒ - போன்ற உயிரெழுத்துகள் சொற்களின் நடுவிலும் இறுதியிலும் வருவதில்லை. அவ்வாறு வந்திருந்தால் அளபெடை என உணர்க.

**அ) செய்யுளிசை அளபெடை (அ) இசைநிறை அளபெடை**

1. ''இ'' என்னும் உயிரெழுத்தைத் தவிர, பிற உயிரெழுத்துகளுள் ஒன்று சொல்லில் (அளபெடுத்து) வருவது இசைநிறை அளபெடை ஆகும்.
2. அச்சொல் ஈரசைச் சீராக இருக்கும். (எ.கா.) தொழாஅர், வெரூஉம் (பெரும்பாலும் இவ்வழிமுறை சரியாக அமையும்)

**ஆ) சொல்லிசை அளபெடை**

1. சொல் ''இ'' என்னும் உயிரெழுத்தில் முடிந்தால் அது சொல்லிசை அளபெடை ஆகும்.
2. அந்த உயிரெழுத்தை நீக்கிவிட்டு, மீதி எழுத்துகள் சேர்ந்து ஓரசைச் சீராக இருக்கும். **(எ.கா.)** தழீஇ, ஓரீஇ, செலீஇய.

**இ) இன்னிசை அளபெடை**

1. சொல்லின் இடையில் ''உ'' என்னும் உயிரெழுத்து இருக்கும்.
2. சொல் மூவசைச்சீராக இருக்கும். (எ.கா.) வளர்க்குறூஉம்

(குறிப்பு : ''இ'' என்னும் எழுத்தில் முடிந்தால் அது சொல்லிசை அளபெடை ஆகும். ஏனைய உயிரெழுத்து இருந்தால் கொடுக்கப்பட்ட சொல்லை அசைபிரித்துப் பார்க்கவும். இரண்டு அசைகள் வந்தால் அது செய்யுளிசை அளபெடை எனவும் மூன்று அசைகள் வந்தால் அஃது இன்னிசை அளபெடை எனவும் கொள்க. பெரும்பாலும் இம்முறை சரியாக அமையும்.)

(செ - அ, ஒ; சொ - இ, இ - உ)

### 2. வினைத்தொகை

1. இரு சொற்களே இணைந்து வரும்.
2. முதற்சொல் வினைச் சொல்லாகவும், இரண்டாம் சொல் பெயர்ச் சொல்லாகவும் அமையும்.
3. இரு சொற்களுக்கும் இடையில் முக்காலங்களும் மறைந்திருக்கும்.

**(எ.கா.)** திருந்துமொழி, பொருந்துமொழி புனைகலம்

### 3. பண்புத்தொகை

1. குணம், நிறம், சுவை, வடிவம், அளவு - இப்பண்புகளுள் ஒன்றைப் பெற்றுவரும்.
2. முதலில் பண்புச் சொல்லும், அடுத்துப் பெயர்ச் சொல்லும் அமைந்து, இரண்டும் இணைந்து வரும்.
3. இவ்விரு சொற்களக்கும் இடையில் ''ஆகிய'', ''ஆன'' என்னும் சொற்களுள் ஒன்று மறைந்து வரும்.
4. பண்புத்தொகைச் சொற்களைப் பிரிக்கும்போது பெரும்பாலும் நிலைமொழி ஈறு ''மை'' விகுதியைப் பெற்றிருக்கும்.

**(எ.கா.)** பெருந்தேர் - பெருமை + தேர்
ஆருயிர் - அருமை + உயிர்
சேவடி - செம்மை + அடி

### 4. இருபெயரொட்டுப் பண்புத்தொகை

1. இருபெயர்ச் சொற்கள் ஒட்டி (சேர்ந்து) வரும்.
2. முதல் சொல் சிறப்புச் சொல்லாகவும் இரண்டாம் சொல் பொதுச் சொல்லாகவும் அமையும்.

**(எ.கா.) இளமைப்பருவம்**
இளமை - சிறப்புச்சொல்,
பருவம் - பொதுச்சொல்

**தமிழன்னை**
தமிழ் - சிறப்புச்சொல்,
அன்னை - பொதுச்சொல்

**கைத்தலம்**
கை - சிறப்புச்சொல்,
தலம் - பொதுச்சொல்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள அணி இலக்கணம்

## 1. உவமையணி

**இலக்கணம்:**

ஒரு பொருளை அதனோடு ஒப்புமை உடைய வேறொரு பொருளைக் கொண்டு விளக்கும்போது செய்யுளில் உவமை, உவமேயம், உவமஉருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாக வருமானால் அஃது உவமையணி ஆகும்.

**எ.கா.**

**''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை''**

**உவமை** : அகழ்வாரைத் தாங்கும் நிலம்
**உவமேயம்** : தம்மை இகழ்வாரைப் பொறுப்பவர்
**உவமஉருபு** : போல

**விளக்கம்:**

பூமி தன்மீது நின்று தன்னைத் தோண்டுபவரையும் கீழேவிழாமல் தாங்கிக் கொண்டிருக்கிறது. அதுபோல, தம்மை இகழ்வாரையும் பொறுத்தல் வேண்டும் என்பதாம்.

## 2. உருவக அணி

**இலக்கணம் :**

உவமைக்கும் பொருளுக்கும் வேறுபாடு தோன்றாமல் இரண்டும் ஒன்றே எனத் தோன்றுமாறு உவமையின் தன்மையைப் பொருளின் மேல் ஏற்றிக் கூறுவது ''உருவக அணி'' ஆகும்.

**எ.கா.**

**இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக**
**வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி**
**அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்**
**பைங்கூழ் சிறுகாலைச் செய்.**

**விளக்கம்:**

இப்பாடலில், இன்சொல் - நிலமாகவும், வன்சொல் - களையாகவும், வாய்மை - எருவாகவும், அன்பு - நீராகவும், அறம் - கதிராகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன.

## 3. எடுத்துக்காட்டு உவமையணி

**இலக்கணம் :**

உவமை ஒரு தொடராகவும், உவமேயம் மற்றொரு தொடராகவும் அமைய, இடையே உவம உருபு மறைந்து வருவது ''எடுத்துக்காட்டு உவமை அணி'' ஆகும்.

**எ.கா.:**

**''இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்**
**வன்மை மடவார்ப் பொறை''**

**விளக்கம்:**

**உவமை** : இன்மையுள் இன்மை விருந்து ஒரால்
**உவமேயம்** : வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை

இடையில் போல என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது.

**குறள் விளக்கம்:**

தன்னை நாடி வரும் விருந்தினரை உபசரிக்க முடியாதவாறு வறுமைப்பட்டிருத்தல் மிகவும் கொடியது. அதுபோல, அறிவிலார் செய்த தவறால் தனக்குப் பெருந்தீங்கு விளைவதாயினும், அது கருதி அவர்களைத் தண்டிக்கும் வலிமை தனக்கிருந்தும் தண்டிக்காமல் பொறுத்தலே வலிமைக்குள் சிறந்த வலிமையாம் என்பதாகும்.

## 4. சொற்பொருள் பின்வருநிலை அணி

**இலக்கணம்:**

செய்யுளில் முன்னர் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து தந்த பொருளையே தந்தால் அது ''சொற்பொருள்பின்வருநிலை அணி'' ஆகும்.

**எ.கா.:**

**''உதவி வரைத்தன் றுதவி உதவி**
**செயப்பட்டார் சால்பின் வரைத்து''**

**விளக்கம்:**

இக்குறளில் உதவி என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து ''நன்மை செய்தல்'' என்னும் பொருளையே தருவதால் இக்குறள் சொற்பொருள்பின்வருநிலை அணி'' ஆகும்.

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள திணைகள்

| | | குறிஞ்சி | முல்லை | பாலை |
|---|---|---|---|---|
| முதற்பொருள் | நிலம் | மலையும் மலை சார்ந்த இடமும் | காடும் காடு சார்ந்த இடமும் | மணலும் மணல் சார்ந்த இடமும் |
| | பெரும்பொழுது | கூதிர், முன்பனி | கார்காலம் | இளவேனில், முதுவேனில் |
| | சிறுபொழுது | யாமம் | மாலை | நண்பகல் |
| கருப்பொருள் | தெய்வம் | சேயோன் (முருகன்) | மாயோன் (திருமால்) | கொற்றவை (காளி) |
| | மக்கள் | வெற்பன், குறவர், குறத்தி | தோன்றல், கிழத்தி ஆயர், ஆய்ச்சியர் | விடலை, மீளி, எயினர், எயிற்றியர் |
| | பறவை | கிளி, மயில் | காட்டுக்கோழி | புறா, பருந்து, கழுகு |
| | விலங்கு | சிங்கம், புலி, கரடி, யானை | மான், முயல் | செந்நாய் |
| | ஊர் | சிறுகுடி | பாடி | குறும்பு |
| | நீர் | அருவிநீர், சுனைநீர் | குறுங்சுனை, கானாறு | நீரில்லாக்குழி, கிணறு |
| | மரம் | வேங்கை, காந்தள், குறிஞ்சி | முல்லை, பிடவம், தோன்றி | குராஅம்பூ, மராம்பூ |
| | யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | பாலை யாழ் |
| | பண் | குறிஞ்சிப்பண் | சாதாரிப்பண் | பஞ்சுரப்பண் |
| | தொழில் | தேன் எடுத்தல் | சாமை, வரகு விதைத்தல், ஆநிரை மேய்த்தல், பால் கடைதல் | போர் செய்தல், சூறையாடல் |
| உரிப்பொருள் | | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

**1. முல்லைத் திணையை விளக்குக.**

**முதற்பொருள்**

நிலம் : காடும் காடு சார்ந்த இடமும்

**பொழுது**

சிறுபொழுது : மாலை

பெரும்பொழுது : கார்காலம்

**கருப்பொருள்**

தெய்வம் : திருமால்

மக்கள் : ஆயர், ஆய்ச்சியர்

பறவை : கானக்கோழி

விலங்கு : முயல், மான்

ஊர் : பாடி, சேரி

நீர் : கானாறு

பூ : முல்லை, தோன்றி

மரம் : கொன்றை, காயா

உணவு : வரகு, சாமை

பறை : ஏறு கோட்பறை

பண் : முல்லைப்பண் (சாதாரி)

யாழ் : முல்லையாழ்

தொழில் : வரகு விதைத்தல், ஆநிரை மேய்த்தல்

**உரிப்பொருள்:**

இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

**சான்று**

"காயா கொன்றை நெய்தல் முல்லை" எனத்தொடங்கும் பேயனார் பாடிய ஐங்குறுநூற்றுப் பாடல்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**சான்று விளக்கம்:**

பெரிய கண்களையுடையவளே! அழகிய மாலை நேரத்தில் முல்லை நிலத்தில் காயா, கொன்றை, நெய்தல், முல்லை, செம்முல்லை, பிடவம் ஆகிய மலர்கள் பூத்திருக்கின்றன. அப்பூக்களைப் பார்த்து மகிழ்ந்து ஆட, 'விரைந்து வா' என்று தலைவன் தன் தலைவியை அழைக்கிறான்.

2. **குறிஞ்சித் திணையை விளக்குக.**

**முதற்பொருள்:**

நிலம் : மலையும் மலை சார்ந்த இடமும்

**பொழுது**

சிறுபொழுது : யாமம்

பெரும்பொழுது : கூதிர், முன்பனி

**கருப்பொருள்**

| | | |
|---|---|---|
| தெய்வம் | : | முருகன் |
| மக்கள் | : | குறவர், குறத்தியர் |
| பறவை | : | கிளி, மயில் |
| விலங்கு | : | புலி, கரடி |
| ஊர் | : | சிறுகுடி |
| மரம் | : | அகில், சந்தனம், வேங்கை |
| நீர் | : | சுனை நீர், அருவி நீர் |
| பறை | : | வெறியாட்டுப் பறை, தொண்டகப்பறை |
| யாழ் | : | குறிஞ்சியாழ் |
| பண் | : | குறிஞ்சிப்பண் |
| உணவு | : | மலை நெல், மூங்கிலரிசி |
| தொழில் | : | தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் |
| உரிப்பொருள் | : | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |

**சான்று:**

"அம்மவாழி! தோழி! நம்மூர்ப்......"
என்று குறுந்தொகைப் பாடல்.

**விளக்கம்:**

தலைவன் தலைவியை மணம் முடிப்பது பற்றிப் பேச, சான்றோரை அனுப்புகிறான். தலைவி, அப்போது எங்கே தன் பெற்றோர் மணம் பேச மறுத்துவிடுவார்களோ என்று கலங்குகிறாள். இந்நிலையில் தோழி அவளிடம் தலைவன் வரைவை நமர் ஏற்றுக் கொண்டனர். நீ கவலை ஒழிவாயாக என்று கூறுகிறாள்.

3. **பொதுவியல் திணை:**

**திணை விளக்கம்:**

வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகளில் கூறப்படாத செய்திகளையும் பிற பொதுவான செய்திகளையும் தொகுத்துக் கூறுவது பொதுவியல் திணையாகும்.

**சான்று**

"உண்டால் அம்ம இவ்வுலகம்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை
யானே"

**விளக்கம்:**

தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

**பொருத்தம்:**

தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது என்ற புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவான கருத்தைக் கூறுவதால் இது பொதுவியல் திணையாகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள துறைகள்

**1. பருவங் (கார்காலம்) குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்ற தலைவிக்கு உரைத்தது.**

**துறை விளக்கம்:**

பொருளீட்டுவதற்காக வெளியூர் சென்ற தலைவன், தான் வருவதாகக் கூறிச் சென்ற கார்காலம் முடியும் முன்பே வந்துவிட்டதைத் தலைவிக்கு உணர்த்த நினைத்து தலைவியிடம் உரைத்தது.

**சான்று:**

"காயா கொன்றை நெய்தல் முல்லை" எனத் தொடங்கும் ஐங்குறுநூற்றுப் பாடல்.

**சான்று விளக்கம்:**

பெரிய அழகிய கண்களையுடையவளே! அழகிய மாலை நேரத்தில் முல்லை நிலத்தில் காயா, கொன்றை, நெய்தல், முல்லை, செம்முல்லை, பிடவம் ஆகிய மலர்கள் பூத்துள்ளதைப் பார்த்து மகிழ்ந்து ஆட, 'விரைந்து வா' என்று தலைவன் தலைவியை அழைத்துத் தான் மழைக்காலம் முடியும் முன்பே வந்துவிட்டதை உணர்த்துகிறான்.

**துறைப் பொருத்தம்:**

தலைவன் மழைக்கால மலர்களைப் பார்த்து மகிழ்ந்து ஆட விரைந்து வா என்று தலைவியை அழைத்துத் தான் கார்காலம் முடியும் முன்பே வந்ததை உணர்த்துவது இத்துறைக்குப் பொருந்தி வருகிறது.

**2. தலைமகன் தமர் வரைவொடு வந்து சொல்லாடுகின்றுழி 'வரைவு மறுப்பவோ' எனக் கவலைகொண்ட தலைமகளுக்குத் தோழி சொல்லிய துறையை விளக்குக.**

**துறை விளக்கம்:**

தலைவன் சான்றோரைத் தலைவியின் தமர்பால் மணம் பேசி வர விடுப்ப தன் தமர் மறுப்பரோ என்று அஞ்சிய தலைவியை நோக்கித் தோழி கூறியது.

**சான்று:**

"அம்ம வாழி! தோழி! நம்மூர்ப்......" எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல்.

**விளக்கம்:**

தலைவன் தலைவியை மணம் முடிப்பது பற்றிப் பேச, சான்றோரை அனுப்புகிறான். தலைவி, அப்போது எங்கே தன் பெற்றோர் மணம் பேச மறுத்துவிடுவார்களோ என்று கலங்குகிறாள். இந்நிலையில் தோழி அவளிடம் தலைவன் வரைவை நமர் ஏற்றுக் கொண்டனர். நீ கவலை ஒழிவாயாக என்று கூறுகிறாள்.

**பொருத்தம்:**

தலைவன் வரைவை நமர் ஏற்றுக் கொண்டனர். நீ கவலை ஒழிவாயாக என்று தலைவியிடம் தோழி கூறியது இத்துறைக்குப் பொருந்தி வருகிறது.

**3. பொருண்மொழிக்காஞ்சித் துறை**

**துறை விளக்கம்:**

மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுதல் பொருண்மொழிக் காஞ்சித் துறையாகும்.

**சான்று:**

"உண்டால் அம்ம இவ்வுலகம்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை
யானே"

**விளக்கம்:**

தமக்காக உழைக்காமல் பிறருக்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

**பொருத்தம்:**

தமக்காக உழைக்காமல் பிறருக்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது என்ற வாழ்வியல் நெறியைக் கூறுவதால் இது பொருண்மொழிக்காஞ்சித் துறையாகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## புணர்ச்சி விதி கண்டறியும் எளிய முறை

| வ. எண். | மீத எழுத்து | நிலைமொழி ஈற்றெழுத்து | வருமொழி முதலெழுத்து | புணர்ச்சி விதி மற்றும் சான்று |
|---|---|---|---|---|
| 1 | - | கு, சு, டு, து, பு, று என்னும் குற்றியலுகர எழுத்துகள் | உயிரெழுத்து | உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் + உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே. (அணிந்துரை =அணிந்து + உரை) |
| 2 | க், ச், த், ப் | உயிரெழுத்து | உயிர்மெய் எழுத்து | இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும். (திரை + படம் = திரைப்படம்) |
| 3 | | | | ஏனை உயிர் வழி வவ்வும் + உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே (திரு+அடி = திருவடி) |
| 4 | | | | ஈறுபோதல் முன் நின்ற மெய் திரிதல் (செம்மை + கயல் = செங்கயல்) |
| 5 | - | மெய்யெழுத்து | உயிரெழுத்து | உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே. (புகழெனின் = புகழ் + எனின்) |
| 6 | ய் | இ, ஈ, ஐ | உயிரெழுத்து | இ ஈ ஐவழி யவ்வும் + உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே. (முறை+ அறிந்து = முறையறிந்து) |
| 7 | - | ல், ள் | க, ச, த, ப வல்லினம் | லள வேற்றுமையில் வலிவரின் றடவும் ஆகும். (கல்+பொடி=கற்பொடி) |
| 8 | ண், ன், ள், ல் | தனிக்குறில் + மெய்யெழுத்து | உயிரெழுத்து | தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும் + உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (மன்னுயிர் = மன் + உயிர்) |
| 9 | | | | ஈறுபோதல் + இனமிகல் (பெருந்தவத்தாய் = பெருமை + தவத்தாய்) |




Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



| | | | | |
|---|---|---|---|---|
| 10 | | | | ஈறுபோதல் + இனமிகல்<br>உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் +<br>தன் ஒற்று டு இரட்டல் +<br>உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.<br>(சிற்றூர் = சிறுமை + ஊர்) |
| 11 | - | ம் | உயிர்மெய் எழுத்து | மவ்வீறு ஒற்று அழிந்து உயிர் ஈறு ஒப்பவும் ஆகும்.<br>(புறந்தருதல் = புறம் + தருதல்) |
| 12 | ங, ஞ, ண, ந, ம, ன மெல்லினம் | பூ | கசதப வல்லினம் | பூப்பெயர் முன்இன மென்மையும் தோன்றும்.<br>(பூங்கொடி = பூ + கொடி ) |
| 13 | | | | ஈறுபோதல்<br>(சிறுகோல் = சிறுமை + கோல்) |
| 14 | | | | ஈறுபோதல், ஆதி நீடல், இனையவும் உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே<br>(பேரழகு = பெருமை + அழகு) |
| 15 | | | | ணன வல்லினம் வர டற வும்<br>(பொற்சிலம்பு = பொன் + சிலம்பு) |






Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

# டால்பின் பப்ளிகேசன்ஸ் புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

| கடையின் பெயர் | தொலைபேசி எண் |
|---|---|
| **சென்னை** | |
| M.K. ஸ்டோர்ஸ் | 044-25386143 |
| F.A. ஸ்டோர்ஸ் | 97105 68240 |
| அராபா புக் டிரேடர் | 044-25987868 |
| கிங்ஸ் புக் ஹவுஸ் | 044-25367660 |
| பிஸ்மி புக் சென்டர் | 044-25380666 |
| லிம்ரா புக் சென்டர் | 99400 39953 |
| பிரின்ஸ் புக் ஹவுஸ் | 044-42053926 |
| பழனிராஜ் | 98414 94023 |
| M.R. புக் ஸ்டோர்ஸ் | 91766-64596 |
| நூர் புக் சென்டர் | 81487-23350 |
| **தாம்பரம்** | |
| ஸ்ரீராம் அன் கோ | 044-22266431 |
| **ரெட்ஹில்ஸ்** | |
| திருமலை புக் சென்டர் | 98411 53261 |
| **மதுரை** | |
| மனோ புக் சென்டர் | 0452-2621577 |
| ஜெயம் புக் சென்டர் | 0452-2623636 |
| U. சந்திரமோகன் | 99426-39194 |
| M.V. சதீஸ்குமார் | 98433-49892 |
| சன்மதி டிரேடர்ஸ் | 97872 61333 |
| M.P.S.S. புக் ஷாப் | 8098151515 |
| வெற்றி புக் சென்டர் | 9843461624 |
| **கோவை** | |
| மெஜெஸ்டிக் புக் ஹவுஸ் | 99943 43334 |
| ராதாமணி ஸ்டோர்ஸ் | 0422-2392122 |
| கண்ணன் புத்தக நிலையம் | 95858 88890 |
| ராஜகணபதி புத்தக நிலையம் | 94430 06703 |
| சேரன் புக் ஷாப் | 0422-2396623 |
| **பொள்ளாச்சி** | |
| கலைமகள் ஸ்டோர்ஸ் | 04259-228738 |
| அமிர்தம் பேப்பர் மார்ட் | 98651 03333 |
| **அன்னூர்** | |
| ஸ்ரீ கார்த்திகேயன் ஸ்டோர்ஸ் | 94436 52226 |
| **திருச்சி** | |
| ராசி பப்ளிகேசன்ஸ் | 0431-2703692 |
| சுமதி பப்ளிகேசன்ஸ் | 0431-2703230 |
| ஸ்ரீ முருகன் புக்சென்டர் | 0431-2703076 |
| காயத்ரி புக் ஹவுஸ் | 97517 87873 |
| **துறையூர்** | |
| கே.கே.ஆர் ஸ்டோர்ஸ் | 98656 58650 |
| **விழுப்புரம்** | |
| சபரிநாதன் பிரதர்ஸ் | 04146-222581 |
| **கள்ளக்குறிச்சி** | |
| கிருபா ஸ்டேசனரி | 04151-223114 |
| **சேலம்** | |
| விக்னேஷ் புக் சென்டர் | 042-74020409 |
| ஜி.ஆர் பப்ளிகேசன்ஸ் | 93446 39631 |
| **கடலூர்** | |
| பெல் புத்தக நிலையம் | 04142-652252 |

| கடையின் பெயர் | தொலைபேசி எண் |
|---|---|
| **சிதம்பரம்** | |
| வெற்றி புக் சென்டர் | 94432 22648 |
| ஜெயம் புக் சென்டர் | 93630 60516 |
| **தஞ்சாவூர்** | |
| ஸ்ரீனிவாசா புக் சென்டர் | 94865 25806 |
| செந்தில்குமார் | 9095902187 |
| **கும்பகோணம்** | |
| ஸ்ரீ மார்கண்டேயா புக் டிப்போ | 0435-2420750 |
| **திருவண்ணாமலை** | |
| பிச்சாண்டி முதலியார் | 94432 14725 |
| **வேலூர்** | |
| பூமிநாதன் | 93451 72090 |
| வேலூர் புக் சென்டர் | 04162-213250 |
| **திருப்பத்தூர் (வேலூர்)** | |
| ரவிக்குமார் | 97863 15453 |
| **ஈரோடு** | |
| செந்தில் புக் பேலஸ் | 04242-214886 |
| தனா புக் கம்பெனி | 0424-2221230 |
| **பள்ளிப்பாளையம்** | |
| அம்மன் சஞ்சீவி புக் சென்டர் | 9786040230 |
| **பவானி** | |
| தனா புக் சென்டர் | 9486230921 |
| **கோபிசெட்டிப்பாளையம்** | |
| கிராவிட்டி புக் வேர்ல்டு | 9385728528 |
| **திருவாரூர்** | |
| வி. ராமச்சந்திரன் | 94866 86627 |
| **ராமநாதபுரம்** | |
| ராமநாதசுவாமி புக் ஷாப் | 94434 91772 |
| அருணா நோட் புக் சென்டர் | 9842537005 |
| **சிவகங்கை** | |
| நியூ அய்யனார் புக் ஷாப் | 9994079013 |
| **கிருஷ்ணகிரி** | |
| ஸ்ரீ ரமணா புக் ஹவுஸ் | 90253 13661 |
| **திருநெல்வேலி** | |
| ஆறுமுகம் பிள்ளை புக் சென்டர் | 98949-17088 |
| **திண்டுக்கல்** | |
| அய்யனார் புக் சென்டர் | 95008-62024 |
| **பழனி** | |
| தர்சன் புக் எம்போரியம் | 8667218504 |
| **கோவில்பட்டி** | |
| இந்திரா பேப்பர் ஸ்டோர் | 96777-38071 |
| **திருப்பூர்** | |
| மகேஸ்வரி புக் ஸ்டால் | 94420-04254 |
| **தேனி** | |
| K. சுப்புராஜ் | 88703-16922 |
| மாயா புக்ஸ் & கிப்ட்ஸ் | 04554-270809 |
| **நாமக்கல்** | |
| ஸ்ரீ கணபதி புக் சென்டர் | 70948-07585 |
| **விருதுநகர்** | |
| சேது புக் சென்டர், | 94864-61400 |

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

OUR PUBLICATIONS
English Guide & Exercise Book - Std: IX,X,XI,XII
தமிழ் உன்னால் முடியும் - வகுப்பு : IX,X,XI,XII
அறிவியல் பயிற்சி ஏடு - வகுப்பு : X
சமூக அறிவியல் பயிற்சி ஏடு - வகுப்பு : IX & X

For Orders Contact
98653 06197 / 89256 77710 / 99435 67646
Orders through WhatsApp : 93453 14146
Orders through SMS : 93453 30937
E-mail ID : dolphin.pub2005@gmail.com

டால்பின் பப்ளிகேசன்ஸ்®
239, கீழப்பட்டி தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம், த.நா.
Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.in